Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00

# தினமுரசு

தினப்பதிப்பு


THINAMURASU




முரசு – 02 திருவள்ளுவர் ஆண்டு 2042 புரட்டாதி 24 செவ்வாய்க்கிழமை (11.10.2011) பக்கங்கள் 16 ஓசை – 11


900 பேர் கைது (03)


முல்லேரியாவில் நடந்தது இதுதான் (08)


நாகரீகம் உருண்டை! (14)


காலிறுதிக்கு சென்றல் (06)



# வடமாகாணத்திற்கு விரைவில் தேர்தல்

## அரசு உறுதியளித்துள்ளதாகச் சொல்கிறார் ரஞ்சன் மாத்தாய்

(கொழும்பு)

வடக்கு மாகாணசபைத் தேர்தலை விரைவில் நடத்துவதற்கு, இலங்கை அரசாங்கம் உறுதியளித்துள்ளதாக இந்திய வெளிவிவகாரச் செயலர் ரஞ்சன் மாத்தாய் தெரிவித்துள்ளார். கொழும்பிலுள்ள இந்தியச் செய்தியாளர்களைச் சந்தித்தபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது,

வடக்கில் 79 பாடசாலைகளைப் புனரமைப்பதற்கு இந்தியா உதவியளிக்கவுள்ளது. 160 மில்லியன் இலங்கை ரூபா செலவில் இப்புனரமைப்பு மேற்கொள்ளப்படவுள்ளது. வவுனியா, முல்லைத்தீவு, கிளிநொச்சி ஆகிய மாவட்டங்களில் இந்த பாடசாலைகள் அமைந்துள்ளன.

மன்னாரிலுள்ள திருக்கேதீஸ்வரம் கோவிலையும், சம்பூரிலுள்ள மற்றொரு பழைமையான ஆலயத்தையும் புனரமைப்பதற்கு இந்தியா உதவும். இந்திய மீனவர்கள் தாக்கப்படும் பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்கான வழிகள் குறித்து ஆராய வேண்டும். இரு தரப்பையும் சேர்ந்த மீனவர்களுக்கிடையில் கிரமமான சந்திப்புக்களை நடத்துவது இதில் ஒரு பகுதியாகும். இந்திய அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்படும் வீடமைப்புத்திட்ட நடவடிக்கைகள் மெதுவாக இடம்பெறுவதை அவர் ஒப்புக்கொண்டார். முதற்தொகுதி வீடுகள் அடுத்த சில மாதங்களில் பயன் பெறுநர்களிடம் ஒப்படைக்கப்படும் எனவும் தெரிவித்தார்.

## பாலியல் துஷ்பிரயோகம் என்ற அரச அதிபரின் கூற்றுக்கு கண்டனம்

(யாழ்ப்பாணம்)

பலாலி ஆசிரியர் கலாசாலையின் மாணவிகள் மீது பாலியல் துஷ்பிரயோகம் என அரச அதிபர் தெரிவித்ததாக வெளியாகிய செய்தி குறித்து ஆசிரியர் கலாசாலை அதிபர் மற்றும் ஆசிரிய பயிலுன மாணவர்கள் தமது கடுமையான கண்டனத்தை வெளியிட்டதுடன், இது தொடர்பாகக் கருத்துத தெரிவித்த யாழ். அரச அதிபர் தனது தகவல்களைக் கூடிய விரைவில் வெளியிடாதுவிடின் உரிய சட்ட நடவடிக்கை எடுக்கவேண்டி வரும் என எச்சரிததுள்ளனர்.

இது தொடர்பாக கலாசாலை அதிபரினால் வெளியிடப்பட்ட நீண்ட அறிக்கையின் விபரம் வருமாறு,

எந்த ஒரு நிகழ்வும் நன்கு விசாரணைகளின் பின்பே முடிவு எடுக்கப்படவேண்டும். அவை நிரூபிக்கப்படும் பட்சத்தில் அவை வெளிப்படுத்தப்பட வேண்டும் அதை விடுத்து தனக்கு வேண்டிய யாரோ ஒருவர் கொடுத்த பொய்யான புகார் ஒன்றின் அடிபபடையில் (15 ஆம் பக்கம் பார்க்க)

## இரு நாடுகளின் ராஜதந்திர உறவு ஜனாதிபதி – மாத்தாய் பேச்சு

இலங்கைக்கான மூன்று நாள் விஜயத்தை மேற்கொண்டு கொழும்பு வந்த இந்திய வெளிவிவகாரச் செயலர் ரஞ்சன் மாத்தாய் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை நேற்றைய தினம் சந்தித்துக் கலந்துரையாடினார். இந்தச் சந்திப்பில், இரு நாடுகளுக்குமிடையிலான ராஜதந்திர உறவுகள் மற்றும் பொருளாதார மேம்பாடு உட்பட பல்வேறு விடயங்கள் குறித்து ஆராயப்பட்டதாக ஜனாதிபதி செயலகம் விடுத்துள்ள செய்திக்குறிப்பில் (15 ஆம் பக்கம் பார்க்க)

## கண்டாவளையில் தாக்குதல் சம்பவம் ஒரே குடும்பத்தில் மூவர் படுகாயம்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி - கண்டாவளை வெளிக்கண்டல் பிரதேசத்திலுள்ள வீடொன்றுக்குள் நேற்று இரவு புகுந்த இனந்தெரியாதவர்கள் மேற்கொண்ட தாக்குதலில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூவர படுகாயமடைந்த நிலையில் கிளிநொச்சி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

நேற்று இரவு 8.10 மணியளவில இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் சின்னத்துரை - சின்னப்பிள்ளை (வயது - 62) அவரது மகனான சினனத்துரை - ஜெயானநதராசா (வயது -34) மனைவியான ஜெயானந்தராசா மாலதி (வயது - 32) ஆகியோரே தாக்குதலில் படுகாயமடைந்தவர்களாவர்.

நேற்றைய தினம் இரவு குறித்த குடும்பத்தினர் வீட்டில் இருந்த வேளை இனந்தெரியாத மூன்று நபர்கள், வீட்டின் வெளியில் நின்று அழைத்துள்ளனர். இதன்போது அயலவர்கள் அழைப்பதாக (15 ஆம் பக்கம் பார்க்க)

## டக்ளஸின் அமைச்சின் கீழ் வலை உற்பத்தி நிலையங்கள்



கடற்றொழில் மற்றும் நீரியல் வளத்துறை அமைச்சின் கீழ் செயற்பட்டு வந்த வீரவில மற்றும் லுணுவில மீனபிடி வலை உற்பத்தி நிலையங்கள் பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சிடம் ஒப்படைக்கபபட்டுள்ளன. இது தொடர்பான புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்று கொழும்பிலுள்ள கடற்றொழில் மற்றும் நீரியல் வளத்துறை அமைச்சில் நேற்று கைச்சாத்திடப்பட்டது.

அமைச்சர்களான டக்ளஸ் தேவானந்தா, ராஜித சேனாரட்ன ஆகியோர் முன்னிலையில் ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது. இவ்வாறு ஒப்படைக்கப்பட்டுள்ள இந்த மீனபிடி வலை உற்பத்தி நிலையங்கள் பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைசசின் கீழுள்ள வடகடல் நிறுவனத்துடன் செயற்படவுள்ளன.



வல்லிபுர ஆழ்வார் தேர்த்திருவிழா நேற்று வெகு விமரிசையாக நடைபெற்றது. வல்லிபுர ஆழ்வார், தேரில் எழுந்தருள பக்தர்களுக்கு அருள்பாலிப்பதைக் காணலாம்

## ரஞ்சன் மாத்தாயுடனான சந்திப்பு அரசுடனான பேச்சைப் பாதிக்காது

(கொழும்பு)



இந்திய வெளியுறவுச் செயலர ரஞ்சன் மாத்தாயுடனான சந்திப்பு, அரசுடன் கூட்டமைப்பு நடத்தும் பேச்சுவார்த்தையில் தாக்கத்தை ஏற்படுத்த மாட்டாதென நாடாளுமன்ற உறுப்பினரும் கூட்டமைப்பின் பேச்சாளருமான சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்துள்ளார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது,

ரஞ்சன் மாத்தாயின் (15 ஆம் பக்கம் பார்க்க)

## ஆனந்தசங்கரி உட்பட்ட குழுவினருடன் இந்திய வெளியுறவுச் செயலர் பேச்சு

மூன்றுநாள் விஜயத்தை மேற்கொண்டு இலங்கை வந்த இந்திய வெளியுறவுச் செயலர் ரஞ்சன் மாத்தாய் நேற்றைய தினம் தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளர் வீ.ஆனந்தசங்கரி தலைமையிலான குழுவினரைச் சந்தித்து கலந்துரையாடினர்.

நேற்றுபகல் 12.00 மணியளவில் கொழும்பிலுள்ள இந்திய இல்லத்தில் சுமார் 45 நிமிட நேரம நடைபெற்ற இந்தச் சந்திப்பில் தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளர் நாயகம் (15 ஆம் பக்கம் பார்க்க)

# யுவதி தற்கொலை முயற்சி

(யாழ்ப்பாணம்)

மண்ணெண்ணெய் ஊற்றி தன்னைத்தானே எரித்து தற்கொலை செய்யும் முயற்சியில் யுவதி ஒருவர் ஈடுபட்ட சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளது.

நேற்றுக் காலை 11.00 மணிக்கு பொலிகண்டி ஆலடிப் பகுதியில் இடம்பெற்ற இம்சம்பவத்தில் அதே இடத்தைச் சேர்ந்த அனுசியா அப்புலிங்கம் (வயது-28) என்ற யுவதியே தற்கொலை செய்ய முயற்சித்துள்ளார்.

குறித்த யுவதி மந்திகை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

அண்மைக்காலமாக யாழ். குடாநாட்டில் தற்கொலை முயற்சிகள் அதிகரித்துள்ளன எனவும் சுட்டிக் காட்டப்படுகிறது. (எஸ்)

# புத்தகக் கண்காட்சி

(சாவகச்சேரி)

தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு சாவகச்சேரி நகராட்சி மன்ற பொது நூலகத்தின் ஏற்பாட்டில் புத்தகக் கண்காட்சியும், விற்பனையும் எதிர்வரும் 13, 14, 15 ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளது. இக்கண்காட்சி சாவகச்சேரி பொது நூலக பிரதான மண்டபத்தில் காலை 9.00 மணி முதல் பிற்பகல் 5.30 மணி வரை நடைபெறவுள்ளது.

இதில் பாடசாலை மாணவர்கள் மற்றும் ஆர்வலர்கள் பார்த்துப் பயன்பெறுமாறு சாவகச்சேரி நகராட்சி மன்றத் தலைவர் இ.தேவசகாயம்பிள்ளை அறிவித்துள்ளார். (உ-11)

# சமூக சேவையாளருக்கு பாராட்டு




யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தினால் கௌரவ கலாநிதிப்பட்டம் வழங்கப்பட்டமைக்காக தெல்லிப்பளை ஸ்ரீதுர்க்கையம்மன் ஆலய பரிபாலனசபைத் தலைவரும் ஸ்கந்தவரோதயாக் கல்லூரி அதிபரும், சமூக சேவையாளருமான செஞ்சொற் செல்வர் கலாநிதி ஆறுதிருமுருகனை பாராட்டும் வைபவம் இடம்பெற்றது.

இவ்வைபவம் தெல்லிப்பளை துர்க்கையம்மன் ஆலய மண்டபத்தில் சபையின் உபதலைவர் சி.அருளானந்தம் தலைமையில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.

இந்த வைபவத்தில் கலந்துகொண்ட கல்விமான்கள், மாணவர்கள் உட்பட பலரும் பொன்னாடைகள் போர்த்தியும் வாழ்த்துப் பாக்களை பாடியும் மலர்மாலைகள் அணிவித்தும் கலாநிதி ஆறுதிருமுருகனை கௌரவித்தனர்.

# சுகாதார வாரத்தை முன்னிட்டு இரத்தானம்



(யாழ்ப்பாணம்)

தேசிய சுகநல வாரத்தையொட்டி இரத்ததான நிகழ்வுகள் யாழ்ப்பாணம் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை, சாவகச்சேரி ஆதார வைத்தியசாலை, பருத்தித்துறை ஆதார வைத்தியசாலை ஆகியவற்றில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.

சுகாதாரப் பணியாளர்கள், அரசாங்க உத்தியோகத்தர்கள், பொதுமக்கள், இராணுவத்தினர், பொலிஸார் உள்ளிட்ட பலரும் கலந்துகொண்டு இரத்ததானம் வழங்கினர். பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையில் 140 பேரும், சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் 128 பேரும், பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் 65 பேருமாக மொத்தம் 333 பேர் இரத்ததானம் வழங்கினர்.

# சுகாதாரப் பணியில் சாதனையாளர்களை ஊக்கப்படுத்தும் நடவடிக்கை தொடரும்



(யாழ்ப்பாணம்)

வடமாகாண ரீதியில் சுகாதார சேவையில் சாதனையாளர்களைக் கௌரவிக்கும் இத்தகைய நிகழ்வு வருங்காலத்திலும் சுகாதாரத்தை மேம்படுத்துவதற்காக மேற்கொள்ளப்படும் என வடமாகாண சுதேச வைத்தியத் துறை அமைச்சின் செயலாளர் ரவீந்திரன் தெரிவித்தார்.

நேற்றைய தினம் யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற்ற வடபகுதி சுகாதார பணியாளர் கௌரவிப்பு நிகழ்வில் கலந்து கொண்டு சிறப்புரையாற்றுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில் கடந்த காலங்களில் மாவட்ட ரீதியாக சுகாதார சம்பந்தமாக நிகழ்வுகள் வடபகுதியைப் பிரதிபலித்து நடாத்தப்பட்டது ஒரு முன் மாதிரியான விடயம் எனத் தெரிவித்த அவர் நாட்டில் மீண்டும் விஷ்வ ரூபமெடுத்திருக்கும் டெங்கு நோயினைக் கட்டுப்படுத்தும் முகமாக நாடாளாவிய ரீதியில் சுகாதார அமைச்சினால் கடந்த 3 தொடக்கம் 9ஆம் திகதி வரை சுகாதார வாரம் கடைப்பிடிக்கப்பட்டு வெற்றிகரமாக நிறைவு செய்திருக்கின்றது எனவும் தெரிவித்தார்.

எனவே உங்களை மேலும் மேலும் உற்சாகப்படுத்தி சுகாதாரத்துறையை மேம்படுத்துவதற்கு இத்தகைய நிகழ்வுகள் நடாத்தப்படும் எனவும் தெரிவித்தார். (பா)

## கண்ணிவெடி அகற்ற பாம்பு தீண்டியது

(நாகர்கோவில்)

நாகர்கோவில் பகுதியில் கண்ணிவெடி அகற்றும் பணியில் ஈடுபட்டிருந்த ஹலோ ட்ரஸ்ட் பணியாளருக்கு பாம்பு தீண்டியது.

நேற்றுக்காலை 10.00 மணிக்கு இடம்பெற்ற இச்சம்பவத்தில் கொழும்புத்துறைப் பகுதியைச் சேர்ந்த சண்முகநாதன் சந்திரன் (வயது-24) என்ற பணியாளரே பாம்புக் கடிக்கு இலக்கானார்.

இவர் யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார். (எஸ்)

## இ.போ.ச. ஊழியர்கள் பணிப்புறக்கணிப்பு

(யாழ்ப்பாணம்)

இலங்கை போக்குவரத்துச் சபையின் வட பிராந்திய போக்குவரத்துச் சபை ஊழியர்கள் எதிர்வரும் 13ஆம் திகதி பணிப்புறக் கணிப்பில் ஈடுபடவுள்ளனர்.

ஊழியர்களின் சம்பளம் தொடர்பான சில கோரிக்கைகளை முன்வைத்தே இப் பணிப் புறக்கணிப்பு போராட்டம் இடம்பெறவுள்ளதாக ஊழியர் சங்கச் செயலாளர் தெரிவித்துள்ளார்.

## பகிரங்க கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

"இலங்கையில் தனியார் பல்கலைக்கழகங்கள்" எனும் தலைப்பில் பகிரங்க கலந்துரையாடல் இடம்பெறவுள்ளது.

யாழ்.பல்கலைக்கழக விஞ்ஞான ஆசிரியர் சங்கத்தின் ஏற்பாட்டில் எதிர்வரும் வியாழக்கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு, யாழ். பல்கலைக்கழக பௌதீகவியல்துறை விரிவுரை மண்டபத்தில் இக்கலந்துரையாடல் இடம்பெறும்.

இதில், தி.சிறீதரன், கு.குருபரன், வைத்திய அதிகாரி சி.யமுனானந்தா, கலாநிதி செ.அறிவழகன் ஆகியோர் வளவாளர்களாக பங்குபற்றவுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.


யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம். இலங்கை

வெளிவாரிப் பட்டப் பதிவுகள் மற்றும் பரீட்சைகள் அலகு

வெளிவாரிப் பரீட்சைகள் - 2010

1. வணிக முதற் தேர்வு - 2010 (புதிய பாடத்திட்டம்)
2. வணிக முதற் தேர்வு - 2010 (பழைய பாடத்திட்டம்)
3. வணிக இரண்டாம் தேர்வு - 2010 (புதிய பாடத்திட்டம்)
4. வணிகமாணி பகுதி - I - 2010 (பழைய பாடத்திட்டம்)
5. வணிக மூன்றாம் தேர்வு - 2010 (புதிய பாடத்திட்டம்)
6. வணிகமாணி பகுதி - II - 2009 & 2010 (பழைய பாடத்திட்டம்)
7. வணிகமாணி பகுதி - III - 2009 (பழைய பாடத்திட்டம்)

மேற்படி பரீட்சைகளை 03.11.2011 (வியாழக்கிழமை) தொடக்கம் யாழ்ப்பாணப் பல்கலைக்கழககத்திலும், வவுனியா வளாகத்திலும் பின்வரும் ஒழுங்கில் நடத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

| | | |
|---|---|---|
| 01 வணிக முதற் தேர்வு - 2010 (புதிய பாடத்திட்டம்) | 03.11.2011 - 12.11.2011 | 9.00 - 12.00 |
| 02. வணிக முதற் தேர்வு - 2010 (பழைய பாடத்திட்டம்) | 03.11.2011 - 12.11.2011 | 9.00 - 12.00 |
| 03. வணிக இரண்டாம் தேர்வு - 2010 (புதிய பாடத்திட்டம்) | 14.11.2011 - 21.11.2011 | 9.00 - 12.00 |
| 04. வணிகமாணி பகுதி - 1- 2010 (பழைய பாடத்திட்டம்) | 14.11.2011 - 21.11.2011 | 9.00 - 12.00 |
| 05. வணிக மூன்றாம் தேர்வு 2010 - (புதிய பாடத்திட்டம்) | 22.11.2011 - 28.12.2011 | 9.00 -12.00 |
| 06. வணிகமாணி பகுதி - II 2009 & 2010 (பழைய பாடத்திட்டம்) | 22.11.2011 - 28.11.2011 | 9.00 - 12.00 |
| 07. வணிகமாணி பகுதி - III-2009 (பழைய பாடத்திட்டம்) | 29.11.2011 - 05.12.2011 | 9.00 - 12.00 |

புதிய பாடத்திட்டத்தின் அடிப்படையிலான பரீட்சைகள் தொடர்பான நேர அட்டவணைகளையும், பரீட்சை அனுமதி அட்டைகளையும் 24.10.2011 (திங்கட்கிழமை) தொடக்கமும், பழைய பாடத்திட்டத்தின் அடிப்படையிலான பரீட்சைகள் தொடர்பான நேர அட்டவணைகளையும், பரீட்சை அனுமதி அட்டைகளையும் 27.10.2011 (வியாழக்கிழமை) தொடக்கமும், வெளிவாரிப் பட்டப் பதிவுகள் பரீட்சைகள் அலகிலும், வவுனியா வளாகத்திலும் அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

மேலதிக விபரங்களுக்கு 021-2223612 என்ற தொலைபேசி எண்ணுடன் தொடர்பு கொள்ளவும்.

பதிவாளர்.
10.10.2011.

(C/991)

உலகில் மூன்று வகையான மக்கள் இருக்கின்றனர். செய்ய முடியும் என்பவர், செய்யமாட்டோம் என்பவர், செய்ய இயலும் என்பவர். முதலாமவர் எல்லாவற்றையும் செய்து முடிக்கின்றனர். இரண்டாமவர் எதிர்க்கின்றனர். மூன்றாமவர் எல்லாவற்றிலும் தோல்வியடைகின்றனர். - அலெக்ஸ் -

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU
இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212221811
thinamurasu@live.com
thinamurasupaper@hotmail.com

## அதிசயங்களுக்குக் காத்திருத்தல்!

இலங்கை அரசுடன் பேசுவதன் மூலமே தமிழர்கள் தங்களுக்கான தீர்வைக் காணவேண்டும் என்று கடைசியாக நேற்று வந்த ரஞ்சன் மாத்தாயும் சொல்லியிருக்கிறார். இதற்கு முன் றொபேட் ஓ பிளேக் சொன்னார். அதற்குமுன் சிவ்சங்கர் மேனன் சொன்னார். அதற்கும் முந்தி எரிக் சொல்ஹெய்ம் சொன்னார். அகாஸி சொன்னார். ஹிலாரி சொன்னார். ஒபாமா சொன்னார். அவர் சொன்னார் இவர் சொன்னார்... இன்னும் யார் சொல்லக் காத்துள்ளோம் நாம்?

இலங்கை அரசாங்கத்திற்குப் பூட்டுப் போட்டு விழுத்தி யாராவது அதன் கையிலிருந்து தீர்வைப் பறித்துத் தருவார்கள் என்ற சொகுசு நம்பிக்கையை இன்னும் எவ்வளவு காலத்துக்குத்தான் மக்களுக்குக் களவாய் விழுங்கக் கொடுத்துக்கொண்டிருப்பார்கள்? மக்களும் எவ்வளவு காலத்துக்குத்தான் இந்த ஏமாற்றை விழுங்குவதற்காக வாயை மட்டும் திறந்து வைத்துக் கொண்டேயிருப்பார்கள்?

அவர்களும் சளைக்காமல், "பேசுங்கள், நீங்களாகப் பேசித்தான் தீர்வைக் கண்டு உங்கள் நாட்டில் நிரந்தரமாய்ச் சேர்ந்தொன்றாய் வாழ வேண்டும்" என்று சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். இவர்களும் விடாமல், "நாங்கள் பேசித் தீர்வெதையும் எடுத்துவிட மாட்டோம் என்பதை சர்வதேசத்துக்கு நிரூபிக்கவே பேசப் போய்க் கொண்டிருக்கிறோம்" என்பதை ஒப்புவித்துக் கொண்டிருக்கிறார்கள்.

காரணம் என்னவென்றால், பேச்சுவார்த்தையை வெற்றிகரமாக்கும் திட்டங்களோ, இந்த நாட்டிலுள்ள சிந்திக்கக் கூடிய தரப்புகளுக்கு – நியாயவுணர்வுள்ள பேரளவிலான மக்களுக்கு நமது நிலையை விளக்கி வென்றெடுக்கக் கூடிய உழைப்போ மேற்கொள்ள இவர்கள் தயாராயில்லை. அரசையும் பெரும்பான்மைச் சமூகத்தையும் வெறுமனே திட்டிக்கொண்டிருந்தால் எங்கிருந்தாவது வௌவால்களோ வல்லூறுகளோ வந்து எதையாவது பிடுங்கித் தரும் அல்லது வாக்குகளாவது விழும் என்ற சொகுசு அரசியலுக்கு பழக்கப்பட்டு விட்டார்கள். மக்களும் ஆத்திரத்தை வெறுப்பாக்கிக் கொள்ளவும் அதிசயத்துக்குக் காத்திருக்கவும் தான் முடியுமே தவிர, வேறு சிந்திக்கும் சிரமமெல்லாம் படவே மாட்டோம் என்பதில் மிக உறுதியாகவே உள்ளார்கள்.


இப்படியே நாம் ஆசையே அலைபோலப் போய்க் கொண்டிருக்க முடியாது. எதிர்காலத்துக்கான இன்சூரன்ஸ் ஏற்பாடுகளைச் சொல்லிக் கொண்டிருப்பது, நமது இன்றைய வாழ்வை வலிந்து வதைபடவிடும் ஏமாற்றாக நீடிக்க அனுமதிக்கக் கூடாது. நாம் மீள்வதற்கான வழிகளை அடைத்தபடியே சுயவிருப்ப வீம்பு அரசியலைத் தொடர்ந்து நடத்தும் வீரப் பாவனைகளை இனி நாம் நிறுத்தவேண்டும்.

சுதந்திரத்திற்காக வன்முறையைக் கைக்கொண்ட சமூகங்கள் மேலும் அடிமைத்தனத்தையே அடைந்ததை வரலாறு காட்டுகின்றது. சுயமரியாதைக்காக வன்முறையையும் வெறுப்பையும் கைக்கொண்டவர்கள் மேலும் இழிவையே தேடிக்கொண்டதே பாடமாக இருக்கிறது. வன்முறையும் வெறுப்பும் நம்மிடம் இருப்பதையும் பறித்துவிடும், எதையுமே அளிக்காது என்பதை இன்று நம்மைவிட உணர்ந்தவர்கள் யாரிருக்க முடியும்?

ஆனபோதும், வெறுப்பையும் வன்முறையையும் தூண்டும் பேச்சுக்களுக்கு அப்பால் எதையும் நகர்த்தத் தெரியாதவர்களையே இன்னும் நம் தலைவர்களாகச் சொல்லி உலாவர அனுமதித்துக் கொண்டிருக்கிறோம். ஒட்டுமொத்த சமூகத்தையே பாசிஸ மனநிலைக்குள் அமிழ்த்தும் வெற்று வீம்பு ரோச உரையாடல்களே இன்றும் நம் அரசியல் அபத்தமாகத் தொடர்கிறது.

தனிமனிதர்கள் ஒரு கூட்டமாக ஒன்றிணையும்போது அவர்களின் தனிப்பட்ட அறிவுத்திறன்கள், தர்க்கநியாயங்கள் அனைத்தையும் இழந்து உணர்ச்சிகளால் ஆட்டுவிக்கப்படும் அறிவற்ற ஒற்றைப் பெருங்கும்பலாக ஆகிவிடுகிறார்கள். இந்தக் கும்பல் மனநிலையைக் கையாள்பவர்களுக்கே அதிகாரம் வாய்க்கிறது என்னும் ஹிட்லரின் வரையறுப்பை, சிலர் தங்கள் பதவிகளுக்காகவும் மற்றும் சிலர் சொந்த மனவீம்புத் திருப்திக்காகவும் பயன்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். இது குறித்துப் பொதுமக்கள் விழிப்படைந்தாக வேண்டும். - ஆசிரியர் -

# மஞ்சள் கோட்டைப் பயன்படுத்தத் தவறிய தொள்ளாயிரம் பேர் கைதுசெய்யப்பட்டனர்



(கொழும்பு)

பாதை கடவையின் போது பாதசாரிகளுக்கான மஞ்சள் கோட்டை பயன்படுத்த தவறிய சுமார் 900 பேருக்கு மேல் கைது செய்யப்பட்டுள்ளனர் பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது.

கைது செய்யப்பட்டவர்களில் சிலருக்கு எதிராக நீதிமன்றில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக காவல்துறை ஊடக பேச்சாளர் மெக்ஸி ப்ரக்டர் குறிப்பிட்டார். ஏனையவர்களுக்கு எதிராக எதிர்வரும் தினங்களில் வழங்குப் பதிவு செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன

இதேவேளை, பாதைக் கடவையின்போது மஞ்சள் கோட்டு கடவையினை பயன்படுத்துவது, தற்போது நாடளாவிய ரீதியில் கட்டாயமாக்கப் பட்டுள்ளதாக பேச்சாளர் குறிப்பிட்டார்.

பாதையை கடக்கும்போது மஞ்சள் கடவையை பயன்படுத்த தவறுபவர்களுக்கு முதல் முறையில் ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்படும். இரண்டாவது தடவையாகவும், அதே தவறை செய்வார்களானால் இரண்டாயிரம் ரூபாவும், மூன்றாவது தடவையாயின் மூவாயிரம் ரூபாவும் தண்டப்பணமாக அறவிடப்படும் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# பாடசாலை சேவையில் ஈடுபடும் சாரதிகளுக்கு கண் பரிசோதனை

நாட்டில் பாடசாலை சேவையில ஈடுபடும் அனைத்து வாகனங்களினதும் சாரதிகளின் கண் பார்வையை பரிசோதிப்பதற்கு சுகாதார அமைச்சு தீர்மானித்துள்ளது.

இதற்கமைய நாளைய தினம் தேசிய கண் வைத்தியசாலையில் இதற்கான முகாமொன்று இடம் பெறவுள்ளதாக அமைச்சு தெரிவிததுள்ளது.

விசேடமாக பாடசாலை போக்குவரத்துச் சேவையில் ஈடுபடும் வாகனங்களின் சாரதிகள் பலர் 45 வயதிற்கும் மேற்பட்டவர்கள் என கண்டறியப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

அவர்களில் பலருக்கு பார்வைக் குறைபாடு காணப்படுகின்றபோதிலும் அவர்கள் சிகிச்சைகள் பெற்றுக்கொள்வதில்லை என தெரியவந்துள்ளதாகவும் அமைச்சு சுட்டிக்காட்டியுள்ளது.

மாணவர்கள் போக்குவரத்துகளை மேற்கொள்ளும் போது ஏறபடும் விபத்துக்களை தடுக்கும் நோக்கிலும், பொது மக்களின் சொதத்துக்களைப் பாதுகாக்கும் நோக்கிலும் இந்தத் திட்டம் முன்னெடுக்கபடுவதாக சுகாதார அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

இந்தக் கண் பரிசோதனையின போது சாரதிகளுக்கு காட்ரக் எனபடும் கண்புரை குறைபாட்டினால பாதிக்கப்பட்டிருப்பின் அவர்களுக்கு சத்திர சிகிச்சைகள் செய்வதற்கு ஒழுங்குகள் மேற்கொள்ளப்படுமென தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் கண் வில்லையில் பாதிப்பு ஏற்பட்டுள்ள சாரதிகளுக்கும், கண்வில்லை மாற்று சத்திர சிகிச்சை மேற்கொள்ளப்படவுள்ளது.

# கண்டியில் ஐ.தே.க.விற்கு வரலாற்றுத் தோல்வி




(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியின் கோட்டையாக கடந்த 58 வருடங்களாக இருந்து வந்த கண்டி மாநகர சபையின் ஆட்சி இம்முறை முதற்தட வையாக ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் வசமாகியுள்ளது. அத்துடன், கண்டி மாவட்டத்தில் நடைபெற்ற மூன்று சபைகளுக்கான தேர்தலில் முதல் தடவையாக கண்டி மாநகரசபை உட்பட மூன்று சபைகளையும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி கைப்பற்றியுள்ளது.

கண்டியில் குண்டசாலை பிரதேச சபை மற்றும் கங்கவட்ட கோரளை பிரதேசசபை என்பவற்றின் அதிகாரத்தையும் ஆளும ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி கைப்பற்றியுள்ளமை குறிப்பிடத்தக்கது. கண்டி மாநகர சபையில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி 23,189 வாக்குகளைப் பெற்று 13 ஆசனங்களையும் ஐக்கிய தேசியக்கட்சி 20087 வாக்குகளைப் பெற்று 10 ஆசனங்களையும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் 1248 வாக்குகளை பெற்று ஒரு ஆசனத்தையும் கைப்பற்றியுள்ளது. கங்கவட்ட கோரளை பிரதேச சபையில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி 14,083 வாக்குகளுடன் 8 ஆசனங்களையும் ஐக்கிய தேசியக்கட்சி 9418 வாக்குகளை பெற்று 4 ஆசனங்களையும் பெற்றுள்ளது. குண்டசாலை பிரதேச சபையில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி 34,488 வாக்குகளை பெற்று 14 ஆசனங்களையும் ஐக்கிய தேசியக்கட்சி 16,934 வாக்குகளைப்பெற்று 6 ஆசனங்களையும் சுயேட்சைக் குழு 1 மற்றும் ஜே.வி.பி.என்பன தலா ஒரு ஆசனத்தையும் கைப்பற்றியுள்ளன.

# சந்தேக நபர் உயிரிழப்பு

வெலிகந்தை, நாகஸ்தென்ன பகுதியில் பொலிஸாரிடம் இருந்து தப்பியோடிய சந்தேகநபர் ஒருவர் ஓடையினுள் வீழ்ந்து உயிரிழந்துள்ளார். புதையல் தோண்டிய சம்பவத்துடன் தொடர்புடையவராகக் கூறப்படும் சந்தேகநபர் ஒருவரே இந்த அனர்த்தத்திற்கு உள்ளானதாக பொலிஸார் குறிப்பிடுகின்றனர்.

சந்தேகநபரைக் கைது செய்வதற்காக பொலிஸார் நேற்று அதிகாலை அந்தப் பிரதேசத்திற்குச் சென்றுள்ளனர். இதன்போது மோட்டார் சைக்கிள் ஒன்றில் தப்பிச் செல்ல முற்பட்ட சந்தேகநபர் விபத்துக்கு உள்ளாகியதாக பொலிஸார் தெரிவித்தனர். புதையல் தோண்டிய சம்பவம் தொடர்பாக மேலும் நான்கு சந்தேகநபர்கள் ஏற்கனவே கைதுசெய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் கூறினர்.

# கடுங்காற்றினால் 25 வீடுகள் சேதம்

தெஹியத்தக்கண்டி நாகஸ் வெவ பகுதியை நேற்று முன்தினம் பிற்பகல் ஊடறுத்து வீசிய கடும் காற்றினால் 25 வீடுகளுக்கு சேதம் ஏற்பட்டுள்ளது. இதனால் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு தேவையான நிவாரணங்களை வழங்குவத்ற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தெஹியத்தக்கண்டி பிரதேச சபையின் தலைவர் ரி.எம்.ஜயசேன தெரிவித்துள்ளார். கடும் மழையுடன் கூடிய காற்று வீசியதாலேயே வீடுகளுக்குச் சேதம் ஏற்பட்டிருப்பதாக தெரியவருகின்றது. இலங்கை மகாவலி அபிவிருத்தி அதிகாரசபை மற்றும் பிரதேச செயலகத்தின் அதிகாரிகள் கிராம உத்தியோகத்தர்கள் ஆகியோர் சேத விபரங்களைத் திரட்டும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளதாகவும் தெரியவருகின்றது.

# காலியில் துப்பாக்கிச்சூடு ஒருவர் படுகாயம்

(காலி)

காலி, மீட்டியாகொட பொலிஸ பிரிவிற்குட்பட்ட சுனாமி நினைவிடத்திற்கு அருகில் இனந்தெரியாத நபர்கள் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

நேற்றுப் பகல் 12.10 அளவில் மோட்டார் சைக்கிளில் வந்த இருவர் இத் துப்பாக்கிப் பிரயோகத்தை மேற்கொண்டுவிட்டுத் தப்பிச் சென்றுள்ளனர். சம்பவத்தில் காயமடைந்த 28 வயதுடைய ஜகத நிசாந்த என்ற நபர் கராபிட்டி வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பில் சந்தேக நபர்கள் எவரும் கைது செய்யப்படாத நிலையில் மீட்டியாகொட பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## நடமாடும் சேவை

(கிளிநொச்சி)

கிளிநொச்சி பொலிஸாரின் ஏற்பாட்டில் நடமாடும் சேவையொன்று இன்று கிளிநொச்சி ஸ்கந்தபுரத்தில் நடைபெறவுள்ளது.

இந்நடமாடும் சேவையில் காலங்கடந்த பிறப்பு, இறப்புப் பதிவுகள், தேசிய அடையாள அட்டை, காணிப் பதிவுகள் உள்ளிட்ட பல சேவைகள் மேற் கொள்ளப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

எனவே, பொதுமக்கள் இந்நடமாடும் சேவையில் கலந்து கொண்டு பயன்பெறுமாறு பொலிஸார் அறிவித்துள்ளனர். (உ-121)

## விண்ணப்பம் கோரல்

(யாழ்ப்பாணம்)

இலங்கை கல்வியமைச்சு பரீட்சைத் திணைக் களத்தினூடாக முழுநேரப் பட்டப்பின் கல்வி டிப்ளோமா கற்கை நெறிக்கு விண்ணப்பம் கோரியுள்ளது. இக்கற்கை நெறி விடுமுறையுடனான கற்கை நெறியாக கொழும்புப் பல்கலைக்கழகம், பேராதனைப் பல்கலைக்கழகம், யாழ். பல்கலைக் கழகங்களில் உள்வாரியாக நடைபெறவுள்ளது.

இக்கற்கை நெறிக்கு விண்ணப்பிப்பவர்கள் பட்டதாரியாகவும், அரச தனியார் பாடசாலை ஆசிரியராகவும் இருத்தல் வேண்டும். விண்ணப்பதாரிகள் விண்ணப்பப் படிவங்களை எதிர்வரும் 16ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக பரீட்சை ஆணையாளர் நாயகம், பரீட்சைத் திணக்களம், மேற்பார்வை மற்றும் மதிப்பீட்டுச் சேவை பெலவத்த, பத்திரமுல்ல என்ற முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (உ-06)

# சிறந்த சந்தை வாய்ப்பின் மூலமே கைத்தொழிலை மேம்படுத்த முடியும்

## அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா

(யாழ்ப்பாணம்)

உள்ளூர் மூலப் பொருட்களை இலகுவாக பெற்றுக் கொள்வதன் மூலம் உள்ளூர் வளங்களைக் கொண்டு எமது கைத்தொழித்துறையை முன்னேற்ற முடியுமென்று பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் கே.என். டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

கடந்த சனிக்கிழமை வடமாகாண சபையின் ஏற்பாட்டில் கைதடியில் திறந்து வைக்கப்பட்ட அபிவிருத்தியில் உள்ளூர் வளங்கள் கண்காட்சியும் விற்பனையும் வைபவத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போது அவர் மேற் கண்டவாறு தெரிவித்தார்.

மேலும் அவர் கருத்து தெரிவிக்கையில், அமைச்சர் எமது வளங்களைக் கொண்டு நாம் கைத்தொழில் துறையில் முன்னேற்றம் அடைய வேண்டும். மூலப் பொருட்கள் பற்றாக்குறை நிலவும் பட்சத்தில் இந்தியாவில் இருந்து கூட எங்களால் மூலப் பொருட்களை இறக்குமதி செய்ய முடியும். நாங்கள் உற்பத்தி செய்கின்ற பொருட்களை சந்தைப் படுத்துவதற்கான வாய்ப்புக்களை சரிவர ஏற்படுத்துவதன் மூலம் எங்களால் நல்லதொரு எதிர்காலத்தை நோக்கி முன்னேற முடியும்.

இவ்வாறான கண்காட்சிகளை நான் வரவேற்பதுடன் இதன் மூலம் வடமாகாண மக்களின் வாழ்வாதாரத்தை முன்னேற்ற முடியும் என்ற நம்பிக்கையும் எனக்கிருக்கிறது.



எனவே நாம் இவ்வாறான முயற்சிகளை தொடர்ந்து மேற் கொண்டால் எங்களால் நல்லதொரு நிலைக்குச் செல்ல முடியும் என்ற நம்பிக்கை எங்கள் அனைவருக்குள்ளும் இருக்க வேண்டும் எனத் தெரிவித்தார்.

மேற்படி கண்காட்சி அமைச்சரால் அன்றைய தினம் திறந்து வைக்கப்பட்டதுடன் விற்பனைக் கூடங்களையும் அமைச்சர் பார்வையிட்டார்.

# வீட்டுத் திட்ட வசதி கிடைக்காது சிரமப்படும் பரந்தன் கிராம மக்கள்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி பரந்தன் கிராமத்தில் 700இற்கும் மேற்பட்ட குடும்பங்கள் நிரந்தர வீடுகள் இல்லாத நிலையில் 151 குடும்பங்களுக்கே நிரந்தர வீடுகள் கிடைத்துள்ளதாக கிராம அபிவிருத்திச் சங்க நிர்வாகத்தினால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி பரந்தன் கிராமம் மகிந்த சிந்தனையின் கீழ் தெரிவு செய்யப்பட்டுள்ளதுடன் இக்கிராமத்தில் 700 வரையான குடும்பங்கள் மீளக்குடியேறியுள்ளனர். இதில் நேரப் திட்டத்தின் கீழ் கடந்த 2006ஆம் ஆண்டு 56 பயனாளிகளுக்கும், 2010ஆம் ஆண்டில் 49 பயனாளிகளுக்கும், 2011ஆம் ஆண்டில் 24 பயனாளிகளுக்கும் யு.என். கபிரட் நிறுவனத்தினால் 25 பயனாளிகளுக்கும் என 151 பயனாளிகளுக்கு புதிய வீடுகள் வழங்கப்பட்டுள்ளன.

இதனைவிட 45 பயனாளிகளுக்கு யு.என். கபிராட் நிறுவனத்தின் கீழ் திருத்த வேலைகளுக்கு தெரிவு செய்யப்பட்டுள்ளதாகவும், ஏனைய குடும்பங்கள் மீள்குடியேறி இரண்டு வருடங்களை எட்டியபோதும் அவர்களுக்கான வீடுகள் வழங்கப்படவில்லை. இதில் காணியில்லாத மற்றும் அரச உத்தியோகத்தர்களும் அடங்குவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (உ-கே)

## விதை நெல்லை பெற்றுத் தருமாறு விவசாயிகள் கோரிக்கை

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள அக்கராயன் பிரதேச விவசாயிகள் இவ்வாண்டுக்கான கால போக நெற் செய்கைக்கான விதை நெல்லைப் பெற்றுத் தருமாறு கோரிக்கை விடுத்துள்ளனர்.

முன்னர் அக்கராயன் குளத்தின் புனரமைப்புப் பணிகள் நடைபெறாமையால் சிறுபோக நெற் செய்கை மேற்கொள்ளப்படவில்லை. இதனால், விதை நெல்லை தம்மால் பெற்றுக் கொள்ள முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாக விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

எனவே, சம்பந்தப்பட்ட திணைக்கள அதிகாரிகள் நடவடிக்கை எடுத்து விதை நெல்லைப் பெற்றுத் தருமாறு கோரியுள்ளனர். (உ-கே)

## அச்சுவேலி கூட்டுறவுச் சங்கம் முதன்மைச் சங்கமாகத் தெரிவு

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் சிறந்த முதன்மைச் சங்கமாக அச்சுவேலி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் தெரிவு செய்யப்பட்டு சிறந்த பரிசுகளும் வழங்கப்பட்டுள்ளன.

கைதடியில் நடைபெற்றுவரும் கூட்டுறவுக் கண்காட்சியில் வைத்து இந்தச் சங்கத்திற்கான சிறந்த விருது வழங்கி கௌரவிக்கப்பட்டது என்று சங்கத்தின் பொதுமுகாமையாளர் கே. ரவிந்திரதாஸ் தெரிவித்தார்.

குடாநாட்டிலேயே மிகவும் சிறந்த நிர்வாகக் கட்டமைப்பையும் அதிக வருமானத்தையும் பெற்று விளங்கும் சங்கமாக இச்சங்கம் திகழ்வதாகத் தெரிவிக்கப்பட்டது.

ஆண்டு தோறும் நடாத்தப்படும் பல்வேறு போட்டிகளிலும் இச்சங்கம் முதன்மை பெற்று அநேக பரிசில்களைத் தட்டிகொண்டு வருவது குறிப்பிடத்தக்கது. ஊழல், மோசடி இன்றி இச்சங்கம் சிறந்து விளங்கி வருகின்றது. (வி)

# நலன்புரி முகாமிலுள்ள மக்களை மீள்குடியேற்ற நடவடிக்கை

(கிளிநொச்சி)

முல்லைத்தீவு கோம்பாவில் பகுதியில் மக்களை மீளக்குடியேற்றுவதற்குரிய ஏற்பாடுகள் மேற் கொள்ளப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது. இப்பகுதியில் 600 ஏக்கர் நிலப் பரப்பு தற்போது துப்புரவு செய்யப்பட்டு வருகிறது. அத்துடன் இப்பகுதிகளில் தற்காலிக வீடுகளும், மலசலகூட வசதிகளும் அமைத்துக் கொடுப்பதற்கான நடவடிக்கைகளும் மேற் கொள்ளப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மெனிக்பாம் நலன்புரி முகாமில் தங்கியுள்ள மக்களே அவர்களுடைய தொழில் வாய்ப்பு, வாழ்வாதாரம் என்பவற்றைக் கருத்திற் கொண்டு இப்பிரதேசத்தில் மீளக்குடியமர்த்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (உ-கே)

## பொன்விழா தொடர்பான கலந்துரையாடல்

மல்லாவி மத்திய கல்லூரியின் பொன்விழா தொடர்பான கலந்துரையாடல் கடந்த 8ஆம் திகதி சனிக்கிழமை கல்லூரி மண்டபத்தில் முதல்வர் சு. சேதுதானந்தன் தலைமையில் நடைபெற்றது. துணுக்காய் பிரதேச செயலர் சி. குணபாலன் இக்கலந்துரையாடலில் கலந்து கொண்டு பொன்விழாவைச் சிறப்புற நடத்துவது தொடர்பான கருத்துக்களைப் பகிர்ந்து கொண்டார். இதில் பொன்விழாவுக்கான விளம்பரங்கள், துண்டுப் பிரசுரங்கள், வெளியிடல், அதிஷ்டலாபச்சீட்டு போன்ற வெளியீடுகள் தொடர்பாகக் கலந்துரையாடப்பட்டது. இக்கலந்துரையாடலில் பாடசாலை பழைய மாணவர் சங்கத்தினர், பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினர், பெற்றோர் எனப் பலர் கலந்து கொண்டனர். (உ-121)








பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலையில் அண்மையில் நடைபெற்ற ஆசிரியர் தின நிகழ்வில் விருந்தினர்கள் அழைத்து வரப்படுவதையும், பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட கிழக்கு மாகாண மேல் முறையீட்டு நீதிமன்ற நீதி அரசரும், மட்டக்களப்பு உயர் நீதிமன்ற நீதிபதியும் பாடசாலை பழைய மாணவியுமான திருமதி கனகாம்பிகை மலர் சிவபாத சுந்தரத்திற்கு பாடசாலை அதிபர் நினைவுப் பரிசில் வழங்குவதையும், மாணவிகளின் கலை நிகழ்வையும் காணலாம். (116)





சுகாதார வாரத்தை முன்னிட்டு கனகராயன் குளம் மகாவித்தியாலய ஆசிரியர்கள், மாணவர்கள் இணைந்து வித்தியாலய சுற்றுப்புறச் சூழலை துப்புரவு செய்வதையும், பொலிஸ் அதிகாரிகள் சுகாதாரம் தொடர்பான விழிப்புணர்வு கருத்தரங்கை நடத்துவதையும் காணலாம். (12)

# யாழ். முற்றவெளி சுற்றாடலை புனரமைக்க நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ். முற்றவெளி தனியார் பஸ் நிலைய சுற்றாடல் பகுதியை விரைவில் புனரமைப்பதற்கு ஏற்ற நடவடிக்கை எடுப்பதாக அமைச்சர் கே. எஸ். டக்ளஸ்தேவானந்தா உறுதியளித்துள்ளார்.

கடந்த வெள்ளிக்கிழமை இரவு சைக்கிளில் இப்பகுதிக்கு வருகை தந்த அமைச்சர் அங்கு பொதுமக்களுடன் கலந்துரையாடி குறை நிறைகளை கேட்டறிந்தார்.

அப்போது தனியார் பஸ் நிலைய சுற்றாடலை சீர் செய்து தருமாறு அங்கு நின்ற பயணிகள் அமைச்சரிடம் கோரிக்கை விடுத்தனர். அப்போது பஸ் நிலைய சுற்றாடல் மாரி காலத்திற்கு முன்பாக புனரமைத்து தரப்படும் என்று அங்கு அமைச்சர் உறுதியளித்தார்.

இச்சந்திப்பில் யாழ். மாநகர முதல்வர் திருமதி யோ. பற்குணராசா மற்றும் மாநகர சபை உறுப்பினர்களும் கலந்து கொண்டனர்.

தொடர்ந்து அமைச்சர் சைக்கிளில் யாழ். நகர்ப்பகுதியையும் சுற்றி பார்வையிட்டார். (வி)

## ஸ்ரீதரின் இன்றைய பலன்

(11.10.2011 – செவ்வாய்க்கிழமை)

பஞ்சாங்கக் குறிப்புக்கள்
கர வருஷம்
புரட்டாதி 24 ஆம் நாள்.
இராகுகாலம் 3.02–4.32, சுபநேரம் 10.32 –12.02,
நட்சத்திரம்: உத்தரட்டாதி பி.ப.5.24 வரை
திதி: பூரணை முழுவதும்
பூரணை விடுமுறை.

**இரகுநாதையர் பஞ்சாங்க கணிப்பை அடிப்படையாகக் கொண்டது.**

**மேடம்:–** பணம் வரும் குடும்பத்தில் குதூகலம், மன மகிழ்ச்சி, பெரியோர் ஆசி, தெய்வ தரிசனம்.

**ரிஷபம:–** குடும்பத்தில் கவலை, பணக் கஷ்டம், தொழில் விருத்தி, உடம்பு சுகவீனம், மருத்துவச் செலவு.

**மிதுனம் :–**பணம் வரும், குடும்பத்தில் மகிழ்ச்சி, உறவினர் உதவி, மன நிம்மதி, கடவுள் வழிபாடு.

**கடகம்:–** குடும்பத்தில் கஷ்டம், பண முடை, உறவினர் பகை, தொழில் முடக்கம், தேக சுகம் பாதிப்பு.

**சிம்மம்:–** பணம் வரும், குடும்பத்தில் நிம்மதி, உறவினர் வரவு, தொழில் விருத்தி, தேக ஆரோக்கியம்.

**கன்னி :–** குடும்பத்தில் கவலை, பணக் கஷ்டம், வீட்டில், சேதம், அயலார் தொந்தரவு.

**துலாம் :–**பணம் வரும், குடும்பத்தில் குதூகலம், கடவுள்வழிபாடு, இனசன அழைப்பு, தேக அரோக்கியம்.

**விருச்சிகம்:–** குடும்பத்தில் மகிழ்ச்சி, பணம் வரும், வீட்டில் பாதிப்பு, நண்பர் தொல்லை, தேக சுகம் குறைவு.

**தனுசு:–** பணக் கஷ்டம், உறவினர் வருகை, அயலவர் உதவி, தேக சுகம் குறைவு, விபத்து வரலாம்.

**மகரம:–** குடும்பத்தில் குதூகலம், பணம் வரும் அயலவர் தொந்தரவு, வீட்டில் நிம்மதி, சுபச்செய்தி

**கும்பம் :–** பணமுடை, வீட்டில் குழப்பம், தேக நிலை பாதிப்பு அயலவர் தொல்லை, இறை நம்பிக்கை

**மீனம் :–** குடும்பத்தில் கவலை, பணக் கஷ்டம், தேக சுகம் பாதிப்பு, இல்லறத்தில் துறவறம், விபத்து வரக்கூடும்.

# வீடின்றி பல குடும்பங்கள் இருக்க திட்ட வீடுகளை வாடகைக்கு விடும் சிலர்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்தில் கணேசபுரம், திருநகர் ஆகிய பிரதேசங்களில் நிறுவனங்களினால் வழங்கப்பட்ட வீட்டுத்திட்டத்தின் ஊடாக கட்டப்பட்ட வீடுகள் சில வீட்டு உரிமையாளர்களினால் வாடகைக்கு விடப்பட்டுள்ளதை அடுத்து வீட்டுத்திட்டம் பெறாத மக்கள் சிலர் விசனம் அடைந்துள்ளார்கள்.

முன்னர் வீட்டுத்திட்டங்களுக்கென கிராமசேவையாளர் ஊடாக இரண்டு தடவைக்கு மேல் தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளுக்கு காணி உரிமை பிரச்சினை காரணமாக விலக்களிக்கப்பட்டுள்ளனர். முழு ஆவணம் உள்ளவர்களும் வெளிநாட்டில் இருந்து வந்தவர்களும், பிற மாவட்டங்களில் இருந்து வந்தவர்களுக்கும் முழு ஆவணங்களும் இருந்தமையால் அவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்பட்டு வீட்டுத்திட்டம் வழங்கப்பட்டுள்ளது.

ஆனால் இறுதிக்கட்டப் போரின் போது மக்கள் முழு ஆவணங்களையும் தவற விட்ட நிலையிலும், மீள் குடியமர்ந்த நிலையிலும் நிரந்தர வதிவிடமாக இருப்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படாது பிறமாவட்டங்களில் இருப்பவர்களுக்கு வீட்டுத்திட்டம் வழங்கப்பட்டுள்ளது. இவ்வாறு வீட்டுத்திட்டத்தைப்பெற்று வீடு கட்டியவர்கள் தமது வீட்டை வாடகைக்கு விடுகின்றனர். சிலர் வீட்டுத் திடடம் பெற்று முழுமையடைந்ததும் வெளிநாட்டுக்குச் சென்றுள்ளமையால் அவ் வீடுகள் பயன்பாடுகள் அற்று வெறுமையாகவே காணப்படுகிறது.

இந்நிலையில் மீள்குடியமர்ந்த மக்கள் தற்காலிக கொட்டகைகளில் கீழ் வாழ்ந்துவருகின்றனர். மாரிகாலம் ஆரம்பமாகவுள்ளநிலையில் இந்த மக்கள் பெரும் பாதிப்புக்களை எதிர்நோக்க வேண்டியுள்ளனர். எனவே இனிவரும் காலங்களிலாவது வறுமை நிலையில் உள்ள மக்களை கருத்திற்கொண்டு நிரந்தரமாக இருப்ப வர்களுக்கு வீட்டுத்திட்டத்தினை வழங்குவதற்கு சம்பந்தப்பட்ட கிராம அலுவலர்கள், கிராமஅபிவிருத்திச் சங்க நிர்வாகிகள் உரிய கவனம் எடுக்க வேண்டுமென பாதிக்கப்பட்ட மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

## ஆசிரியர் கௌரவிப்பு

(கிளிநொச்சி)

கிளிநொச்சி கண்டாவளையிலுள்ள இலங்கை அமெரிக்கன் மிஷன் திருச்சபையின் கீழ் இயங்கும் சிறுவர் முன்பள்ளியின் ஆசிரியர் தின நிகழ்வு நேற்று நடைபெற்றது.

கண்டாவளை முரசுமோட்டையில் அமைந்துள்ள இம்முன்பள்ளியில் நேற்று காலை 9 மணிக்கு ஆசிரியர்களை கௌரவிக்கும் நிகழ்வு ஆரம்பமாகி நடைபெற்றது. இந்நிகழ்வில் பெற்றோர்கள், நலன்விரும்பிகள் கிராமமட்ட அமைப்புக்களைச் சேர்ந்தவர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர். (உ-கே)

## நல்லூர் பிரதேச செயலகத்தின் சிறுவர் முதியோர் தின விழா

(நல்லூர்)

நல்லூர் பிரதேச செயலகத்தின் ஏற்பாட்டில் சிறுவர் முதியோர் தின விழா நாளை புதன்கிழமை மதியம் 2.00 மணிக்கு நல்லூர் பிரதேச செயலக மண்டபத்தில் நல்லூர் பிரதேச செயலர் ப.செந்தில் நந்தனன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் நல்லூர் கோட்ட பிரதிக்கல்விப் பணிப்பாளர் வி. மாணிக்கராஜா பிரதம விருந்தினராக கலந்து கொள்ளவுள்ளார்.

அன்றைய தினம் நல்லூர் பிரதேச செயலகத்தினால் பாடசாலைகளுக்கிடையில் நடாத்தப்பட்ட பேச்சு, கட்டுரை, கவிதை போட்டிகளில் பங்குபற்றின மாணவர்களுக்கு பரிசில்கள் வழங்கும் நிகழ்வும் இடம் பெறும் போட்டியில் பங்கு பற்றிய மாணவர்கள் பொறுப்பான ஆசிரியர்களுடன் கலந்து பிரிசில்களை பெற்றுக் கொள்ளுமாறு நல்லூர் கோட்டக்கல்விப்பிரதி கல்வி பணிப்பாளர் அறிவித்துள்ளார். (எஸ்.)

## சிறுவர் தினத்தை முன்னிட்டு நடத்தப்பட்ட போட்டி முடிவுகள்

(யாழ்ப்பாணம்)

சர்வதேச சிறுவர் தினத்தை முன்னிட்ட நல்லூர் பிரதேச செயலகத்தினால் நடத்தப்பட்ட நல்லூர் கோட்ட பாடசாலைகளுக்கிடையிலான கோட்டமட்டப் போட்டியில் வெற்றி பெற்ற மாணவர்களின் விபரம் நல்லூர் கோட்டக்கல்வி அலுவலகத்தினால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இப்போட்டியில் முதல் மூன்று இடங்களைப் பெறும் மாணவர்களின் விபரம் வருமாறு:

**கட்டுரை தரம் 6-7**

க.கௌசி (கோண்டாவில் இராமகிருஷ்ணா ம.வி.), ம.டீஷானுகா (பெரியபுலம்மகா.வித்தி),து.கஜந்தினி (அரியாலை ஸ்ரீ பார்வதி வித்தி),

**தரம் 8 - 9**

சி.சுபாசினி(கோண்டாவில் இந்து மகாவித்தி), ம.ராஜினி (யாழ். இந்து மகளிர் கல்லூரி), த.நிசாந்தினி (நாயன்மார்கட்டு மகேஸ்வரி),

**தரம் 10 - 11**

சி.கௌசலா (கனகரத்தினம் ம.ம.வித்தி), வி.தனுசியா ( யாழ். இந்து மகளிர் கல்லூரி), தி. லக்சனா ( கோண்டாவில் இராமகிஷ்ணா ம.வி.)

**கவிதை**

நி.ஆதவன் (யாழ். இந்துக் கல்லூரி), ஆ. காயத்திரி (கொக்குவில் ஸ்ரீ ஞான பண்டிதர்), கி.அபியா (கோண்டாவில் இராமகிருஷ்ணா ம.வி.),

**தரம் 8 - 9**

வ.கௌசிகன் ( நல்லூர் இந்து த.வபா), இ.யதுஷா) நல்லூர் ஸ்தான சி.சி.த.க.பா), சி.ருகஷிகா ( யாழ். இந்து மகளிர் கல்லூரி),

**தரம் 10 - 11**

க. சுதர்சனா கோண்டாவில் இராம கிருஷ்ணா ம.வி.), சி.ஷிராணிசுகந்திகா (செங்குந்தா இந்துக் கல்லூரி), உ.துளசி (யாழ். இந்து மகளிர் கல்லூரி).

## சிறப்பாக நடைபெற்ற "சப்தம்" நூல்வெளியீட்டு விழா




(யாழ்ப்பாணம்)


நெடுந்தீவின் இளையதலைமுறையினரால் சப்தம் (மௌனம் கலைகிறது) கலைஇலக்கிய மாதந்த சஞ்சிகை மற்றும் குறும்புக்காரன் இசைத்தட்டு வெளியீடும் நேற்று முன்தினம் நடைபெற்றது.

தியாகி அறைக்கொடை நிலைய சொர்ணாம்பிகை மண்டபத்தில் நடைபெற்ற இந் நிகழ்வில் யாழ் மாவட்ட நாடாளு மன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலென்ரின் (உதயன்) பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு குறும்புக்காரன் இசைத் தட்டை வெளியிட்டுவைக்க தினமுரசு ஆசிரியர் அதன் முதற்பிரதியைப்பெற்றுக்கொண்டார். சப்தம் மாத சஞ்சிகையின் வெளியீட்டுரையை சஞ்சிகை ஆசிரியரும், யாழ். பல்கலைக்கழக கலைப்பிட மாணவியுமான செல்வி எம். கலைவாணி நிகழ்த்தினார்.

இந்நிகழ்வில் நெடுந்தீவு பலநோக்குக்கூட்டுறவுச்சங்கத்தலைவர் புலவர் ஏ. டபிள்யூ. அரியநாயகம், நெடுந்தீவு மகேஸ், சிகரம் ஊடக நிறுவனப்பணிப்பாளர் றுசாங்கன், அகவெளி சஞ்சிகை ஆசிரியர் க. இந்திரகுமார் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

# வடக்கு மாகாண கிரிக்கெட் வீரர்களை தேசிய மட்டத்தில் உள்வாங்க நடவடிக்கை

## வவுனியாவில் நடைபெற்ற உபகரணங்கள் வழங்கும் நிகழ்வில் மஹேல



(வவுனியா)

வடக்கு மாகாணப் பாடசாலைகளில் கிரிக்கெட் விருத்தி செய்து, அதன் மூலம் தெரிவு செய்யப்படும் வீரர்களை தேசிய மட்டத்தில் உள்வாக்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்று இலங்கை கிரிக்கெட் அணியின் முன்னாள் தலைவர் மஹேல ஜெயவர்தன தெரிவித்தார்.

வவுனியா, கிளிநொச்சி, மன்னார் மற்றும் முல்லைத்தீவு போன்ற மாவட்டங்களிலிருந்து தெரிவு செய்யப்பட்ட 10 பாடசாலைகளுக்கான 30 இலட்சம் ரூபா பெறுமதியான கிரிக்கெட் உபகரணங்கள் வழங்கும் நிகழ்வும், அவர்களுக்கான விசேட பயிற்சி முகாம் ஒன்றும் நேற்று முன்தினம் மாலை வவுனியா தமிழ் மகாவித்தியாலயத்தில் இடம்பெற்றது.

இதில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது: கடந்த 30 வருடங்களாக நாட்டில் நிலவிய யுத்தம் தற்போது முடிவுக்கு கொண்டுவரப்பட்டு சமாதானம்



மலர்ந்துள்ளது. இந்தத் தருணத்தில் வட மாகாணத்துக்கான விஜயத்தை மேற்கொள்ள வாய்ப்புக் கிடைத்தமையை எண்ணி நான் மகிழ்ச்சியடைகின்றேன்.

இதேவேளை, வட மாகாணத்திலுள்ள இளைஞர்கள் மத்தியில் கிரிக்கெட் விளையாட்டினை ஊக்கப்படுத்தி அவர்களிடையேயான திறமையினை விருத்தி செய்ய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

அந்தவகையில், பாடசாலைக் காலங்களிலிருந்து இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்படவுள்ளது. இதன் மூலம் தேசிய மட்டத்தில் வலுவான போட்டி ஒன்று உருவாகும் நிலை தோன்றும் என்றார்.

# பிரிமியர் லீக் கால்பந்து பாடுமீன் அபார வெற்றி



(வவுனியா)

பிரிமியர் லீக்கின் பிரிவு மூன்றுக்கான கால்பந்துத் தொடரின் போட்டி ஒன்றில் குருநகர் பாடுமீன் அணி அபாரமான வெற்றிபெற்றது.

இலங்கை கால்பந்தாட்ட சம்மேளனத்தினால் நடத்தப்பட்டு வரும் பிரிமியர் லீக்கின் பிரிவு மூன்றுக்கான கால்பந்தாட்டத் தொடர் நடத்தப்பட்டு வருகின்றது.

இதில் நேற்று முன்தினம் வவுனியா வைரவப்புளியங்குளம் மைதானத்தில் இடம்பெற்ற போட்டி ஒன்றில் குருநகர் பாடுமீன் அணியும், வவுனியா யங்ஸ்ரார் அணியும் மோதின.

இதில் போட்டி ஆரம்பமாகி ஒன்பதாவது மற்றும் 16ஆவது நிமிடங்களில் பாடுமீன் வீரர்களால் அடுத்தடுத்து சிறப்பான இரண்டு கோல்கள் போட்டப்பட்டுது. இதனைத் தொடர்ந்து இரு அணி வீரர்களின் ஆட்டமும் சூடுபிடிக்கத் தொடங்கியது. இருந்தபோதிலும் இடைவேளைக்காக ஆட்டம் நிறுத்தப்பட்ட போது 2-0 என்ற கோல் கணக்கில் பாடுமீன் அணி முன்னிலை பெற்றது.

பிற்பாதி ஆட்டம் ஆரம்பமாகி 7ஆவது மற்றும் 14ஆவது நிமிடங்களில் மீண்டும் பாடுமீன் வீரர்களால் கோல் போடப்பட்டது. உள்ளூர் ரசிகர்கள் முன்னிலையில் ஒரு கோலையேனும் போட்டுக்கொள்ளும் முயற்சியை தீவிரமாக்கி யங்ஸ்ரார் அணி 17ஆவது நிமிடத்தில் ஒரு கோலைப் போட்டுக்கொண்டது.

இதனை அடுத்து' மிகத் தீவிரமான ஆட்டத்தை வெளிப்படுத்திய பாடுமீன் அணி ஆட்டம் நிறைவடைய ஒரு நிமிடங்கள் இருக்கும்போது மீண்டும் சிறப்பானதொரு கோலைப் போட்டது.

இந்நிலையில் போட்டி நிறைவுக்கு வந்தவேளை, பாடுமீன் அணி 5-1 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது. (12)

# காலிறுதிப் போட்டிக்கு யாழ். சென்றல் தகுதி

(யாழ்ப்பாணம்)

வி.டி. ஜெயரட்ணசிங்கம் வெற்றிக் கிண்ண ஒரு நாள் கிரிக்கெட் தொடரின் காலிறுதிப் போட்டிக்கு யாழ். சென்றல் அணி தகுதி பெற்றுள்ளது.

வி.டி.ஜெயரட்ணசிங்கம் வெற்றிக் கிண்ண 50 ஓவர்கள் கொண்ட ஒரு நாள் கிரிக்கெட் தொடரின் போட்டி ஒன்று நேற்று முன்தினம் யாழ். இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்றது.

இதில் யாழ். சென்றல் அணியும், ஜொலிஸ்ரார் அணியும் மோதின.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் ஆடிய யாழ். சென்றல் அணி 41.2 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 207 ஓட்டங்களைப் பெற்றது. இதில் கபில் தேவ் 45, யதுசன் 25, கலிஸ்ரன் 33, பாலேந்திரா 16, சுபாதீஸ் ஆட்டமிழக்காது 20 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் பகீரதன் நான்கு, மதுசன், ரஞ்சித் தலா



கபில்தேவ்

இரண்டு விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.

பதிலுக்கு ஆடிய ஜொலிஸ்ரார் அணி 26.5 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 152 ஓட்டங்களைப் பெற்றுத் தோல்வியைத் தழுவியது. இதில் மணி 26, பகீரதன் 22, கார்த்திக் 17 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் விமலகாந் மூன்று, சுபாதீஸ், மயூரன் தலா இரண்டு விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.

இப்போட்டியில் வெற்றிபெற்றதன் மூலம் யாழ். சென்றல் காலிறுதிப் போட்டியில் விளையாடும் தகுதியைப் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (07)

விளையாட்டுச் செய்திகள்



இலங்கை வங்கியின் ஊழியர்களுக்கிடையிலான வருடாந்த விளையாட்டு விழாவின் கால்பந்துத் தொடரில் கிண்ணம் வென்ற வடமாகாண அணியைக் காணலாம். இப்போட்டி நிகழ்வு நேற்று முன்தினம் யாழ். துரையப்பா அரங்கில் இடம்பெற்றது குறிப்பிடத்தக்கது.

# அரையிறுதியில் மனோகரா

(நெல்லியடி)

கம்பர்மலை யங்கமன்ஸ் விளையாட்டுக்கழகத்தினால் நடத்தப்பட்டு வரும் அணிக்கு ஒன்பது பேர் கொண்ட கால்பந்துத் தொடரின் அரையிறுதிப் போட்டிக்கு அல்வாய் மனோகரா அணி தகுதி பெற்றது.

பருத்தித்துறை கால்பந்தாட்ட லீக்கின் அனுசரணையுடனும், தினமுரசு நாளிதழின் ஊடக அனுசரணையுடனும் கம்பர்மலை யங்கமன்ஸ் விளையாட்டுக்கழகத்தால் நடத்தப்பட்டு வரும் கால்பந்துப் போட்டித் தொடர் யங்கமன்ஸ் விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றது.

இதன் காலிறுதிப் போட்டி ஒன்று நேற்று முன்தினம் நடைபெற்றது. இதில் அல்வாய் மனோகரா அணியும் கலட்டி அணியும் மோதின.

ஆட்டம் ஆரம்பமாகி 4ஆவது நிமிடத்தில் கலட்டி அணி வீரர் ஆதவனால் ஒரு கோல் போட்டப்பட்டது. இதனைத் தொடர்ந்து ஆட்டம் தீவிரம் காட்டிய மனோகரா அணி 23ஆவது நிமிடத்தில் சிறப்பானதொரு கோலைப் போட்டது. இதனை அவ்வணி வீரர் அனோஜன் பெற்றுக்கொடுத்தார். இந்நிலையில் முற்பாதி ஆட்டம் நிறைவுக்கு வர இரு அணிகளும் 1-1 என்ற கோல் கணக்கில் சமநிலையில் இருந்தன. பிற்பாதி ஆட்டம் ஆரம்பமாக இரு அணிகளுமே கோல் போடும் முயற்சியில் அதிதீவிரமாக ஈடுபட்டனர். ரசிகர்களையே மிகுந்த ஆர்வத்தை ஏற்படுத்தியிருந்த இப்போட்டியில் எந்த அணி வெல்லும் என்றொரு நிலை தோன்றியது. இருப்பினும், மனோகரா அணி வீரர் பாலகன் 39ஆவது நிமிடத்தில் சிறப்பானதொரு கோலை தனது அணிக்காகப் பெற்றுக் கொடுத்தார். இந்நிலையில் ஆட்டம் நிறைவுக்கு வர 2-1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்ற மனோகரா அணி அரையிறுதிப் போட்டியில் விளையாடும் தகுதியைப் பெற்றது. (12)

# ஜப்பான் ஓப்பன் ரென்னிஸ் கிண்ணம் வென்றார் முர்ரே

(டோக்கியோ)

ஜப்பான் ஓப்பன் ரென்னிஸ் போட்டியின் ஆண்கள் ஒற்றையர் பிரிவு இறுதிப் போட்டியில் முன்னணி வீரர் ரபேல் நடாலை (ஸ்பெயின்) வீழ்த்தி ஆண்டி முர்ரே (இங்கிலாந்து) சம்பியன் பட்டம் வென்றார்.

டோக்கியோவில் நேற்று முன்தினம் நடந்த பரபரப்பான இறுதிப் போட்டியில், நடால் 6-3 என்ற கணக்கில் முதல் செட்டை கைப்பற்றி முன்னிலை பெற்றார். அடுத்த செட்டில் அதிரடியாக விளையாடிய முர்ரே 6-2 என்ற கணக்கில் வென்று பதிலடி கொடுத்தார். இந்த செட்டில் அவர் அபாரமாக 6 ஏஸ் சர்வீஸ்களை போட்டதுடன் 2 முறை நடாலின் சர்வீஸ் ஆட்டத்தை முறியடித்தார்.

மூன்றாவது செட்டிலும் ஆதிக்கம் செலுத்திய முர்ரே 3-6, 6-2, 6-0 என்ற கணக்கில் வென்று கிண்ணத்தைக் கைப்பற்றினார்.

இருவரும் கடைசியாக மோதிய 5 போட்டிகளிலும் நடாலே வென்றிருந்த நிலையில், ஜப்பான் ஓப்பன் இறுதிப் போட்டி முர்ரே அபாரமாக விளையாடி பழிதீர்த்துக் கொண்டார்.

நடப்பு தொடரில் முர்ரே கைப்பற்றிய 4ஆவது பட்டம் இது. முன்னதாக லண்



டன், சின்சினாட்டி மற்றும் பாங்கொக்கில் நடந்த ஏ.டி.பி. ரென்னிஸ் போட்டிகளில் அவர் பட்டம் வென்றிருந்தமை குறிப பிடத்தக்கது.

# சீன ஓப்பன் கிண்ணம் வென்றனர் ரட்வன்ஸ்கா, தோமஸ் பெர்டிச்





(பீஜிங்)

சீன ஓப்பன் ரென்னிஸ் போட்டித் தொடரில் போலந்தின் அக்னியஸ்கா ரட்வன்ஸ்கா மற்றும் தோமஸ் பெர்டிச் கிண்ணத்தை வென்றனர்.

சீன ஓப்பன் ரென்னிஸ் தொடரின் இறுதிப் போட்டி நேற்று முன்தினம் பீஜிங்கில் இடம்பெற்றது.

இதில் மகளிர் ஒற்றையர் பிரிவில் போலந்து வீராங்கனை அக்னியஸ்கா ரட்வன்ஸ்கா இத்தாலியின் பிளாவியா பென்னட்டாவும் மோதினர்.

சிறப்பான ஆட்டத்திறனை வெளிப்படுத்திய ரட்வன்ஸ்கா 7-5, 0-6, 6-4 என்ற செட் கணக்கில் போராடி வென்று கிண்ணத்தைக் கைப்பற்றிக் கொண்டார்.

இதேவேளை, ஆண்கள் ஒற்றையர் பிரிவின் இறுதிப் போட்டியில் தோமஸ் பெர்டிச்சும் (செக்.) மரின் சிலிக்கும் (குரோஷியா) மோதினர். இதில் தோமஸ் பெர்டிச் 3-6, 6-4, 6-1 என்ற செட் கணக்கில் மரின் சிலிக்கை வீழ்த்தி கிண்ணத்தைக் கைப்பற்றினார். சிறப்பான வெற்றியாக இதைக் கொள்வதாகவும், தொடரில் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்துவேன் என்றும் வெற்றியின் பின் தோமஸ் தெரிவித்தார்.

**19 வயதிற்குட்பட்ட 4 நாடுகள் கிரிக்கெட்**

# இலங்கையை வென்றது இந்தியா



(விசாகப்பட்டினம்)


நான்கு நாடுகள் இளைஞர் கிரிக்கெட் போட்டித் தொடரின் இறுதிப் போட்டியில் (19 வயதுக்குட்பட்டோர்) இந்திய அணி 5 ஓட்டங்களினால் இலங்கையை வீழ்த்தி சம்பியன் பட்டம் வென்றது.

விசாகப்படினத்தில் நேற்று முன்தினம் நடந்த இறுதிப் போட்டியில், நாணயச் சுழற்சியில் வென்ற இலங்கை முதலில் களத்தடுப்பைத் தீர்மானித்தது. இந்தியா 50 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 168 ஓட்டங்களைப்பெற்றது. இதில் அக்ஷதீப் நாத் 55, ஸ்மித் பட்டேல் 31, ஹர்மீத் சிங் 23 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் மதுஷங்கா 4 விக்கெட் கைப்பற்றினார்.

பதிலுக்கு ஆடிய இலங்கை அணி 46.5 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 163 ஓட்டங்களைப் பெற்றுத் தோல்வியைத் தழுவியது. இதில் மதுஷங்கா அதிக பட்சமாக 63 ஓட்டங்களை எடுத்தார். திஸகுட்டிகே 29, அபோன்சோ 21, புலினா தாரங்கா 15 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் சந்தீப் ஷர்ம. 4, களரியா 3 விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.

தோல்வி குறித்து இலங்கை அணிக் கப்டன் குறிப்பிடுகையில், தோல்வி மிகுந்த வேதனை அளிக்கும் ஒன்றாகவுள்ளது. இலக்கு இலகுவாக இருந்தபோதும் அதிர்ஷ்டம் எமக்கு கைகொடுக்கவில்லை என்றார். இப்போட்டித் தொடரில், அவுஸ்ரேலியா, மேற்கிந்தியத் தியத்தீவுகள் அணியும் பங்கு பற்றியிருந்தமை குறிப் பிடத்தக்கது.

# கிண்ணம் வெல்வதற்கு அதிர்ஷ்டம் காரணமல்ல



(மும்பை)

மும்பை அணி கிண்ணத்தை வென்றதற்கு அதிர்ஷ்டம் மட்டும் காரணமல்ல. வீரர் களின் விடாமுயற்சி மற்றும் சச்சின் தந்த ஊக்கம் முக்கிய காரணம். இத்தொடரில் இவர், மும்பை அணியினரோடு இணைந்து தேவைப்படும் நேரத்தில் சரியான ஆலோசனைகள் வழங்கியது வெற்றிக்குப் பலமாக இருந்தது.

இவ்வாறு மும்பை இந்தியன்ஸ் அணி கப்டன் ஹர்பஜன்சிங் தெரிவித்தார். சம்பியன்ஸ் லீக் தொடர் தொடங்குவதற்கு முன், சச்சின் உள்ளிட்ட எட்டு முன்னணி வீரர்கள் இல்லாத நிலையில் மும்பை அணி எப்படி விளையாடப் போகிறது என பல்வேறு தரப்பில் கேள்விகள் எழுந்தன. முதல் போட்டியில் சென்னை சூப்பர் கிங்ஸ் அணியை வீழ்த்தியது, அடுத்து நடந்த போட்டி களில் சாதிக்க நம்பிக்கை அளித்தது. சென்னை அணியை, அதன் சொந்த ஊரில் வீழ்த்துவது கடினம். இருப்பினும் எங்கள் அணி வீரர்கள் ஒருங்கிணைந்து முழுத திறமையை வெளிப் படுத்தியதால், தொடரை வெற்றியுடன் தொடங்க முடிந்தது எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# தொடரைக் கைப்பற்றுவோம்

**இங்கிலாந்து வீரர் கிறிஸ் வோக்ஸ்**

(ஹைதராபாத்)

இந்தியாவுக்கு எதிரான ஒரு நாள் தொடரைக் கைப்பற்றக்கூடிய தகுதியும், அதற்கான வாய்ப்பும் எமது அணிக்கு உள்ளதென இங்கிலாந்து வீரர் கிறிஸ் வோக்ஸ் தெரிவித்தார். பயிற்சிப் போட்டியில் சிறந்த வெற்றியைப் பதிவாக்கியுள்ளோம். இப்போட்டியில் துடுப்பாட்ட வீரர்கள் சொற்ப ஓட்டங்களில் ஆட்டமிழந்தபோதிலும், பந்து வீச்சாளர்களின் சிறப்பான செயற்பாட்டின் மூலம் வெற்றியைப் பதிவாக்கினோம். ஒரு நாள் தொடரிலும் பந்து வீச்சு, துடுப்பாட்டம், களத்தடுப்பு என அனைத்துப் பிரிவிலும் சிறப்பான செயற்பாட்டை வெளிப்படுத்தி தொடரைக் கைப்பற்றுவோம் எனத் தெரிவித்தார்.

# பாக். வீரர்கள் சேர்ப்பு அடுத்த கூட்டத்தில் முடிவு



(மும்பை)

அடுத்த ஆண்டு நடைபெறவுள்ள ஐ.பி.எல். கிரிக்கெட் போட்டியில் பாகிஸ்தான் வீரர்களை சேர்ப்பது குறித்து எதிர் வரும் 14ஆம் திகதி நிர்வாகக் குழுக் கூட்டத்தில் முடிவு செய்யப்படும் என்று ஐ.பி.எல். தலைவர் ராஜீவ் சுக்லா தெரிவித்தார்.

ஐ.பி.எல். போட்டியில் பாகிஸ்தானைச் சேர்ந்த நடுவர்கள் பயன்படுத்தப்படுகின்றனர். சில அணிகளுக்கு பாகிஸ்தானைச் சேர்ந்த முன்னாள் வீரர்கள் பயிற்சியாளர்களாக உள்ளனர். இதேபோல் சில அணிகளின் அதிகாரிகளும் பாகிஸ்தானைச் சேர்ந்தவர்கள்.

அப்படியிருக்கையில் ஒட்டுமொத்த பாகிஸ்தானுக்கும் ஐ.பி.எல். போட்டியில் தடை விதிக்கப்பட்டிருப்பதாகக் கூறமுடியாது. எனவே யாருக்கு எதிராகவும் தடை என்ற கேள்விக்கே இடமில்லை.

பாகிஸ்தான் வீரர்களை ஐ.பி.எல். போட்டியில் சேர்ப்பது குறித்து ஆட்சி மன்றக் குழுக் கூட்டத்தின்போது விவாதிககப்படும். எனினும் இந்த விவகாரத்தில் இறுதி முடிவு ஐ.பி.எல். அணிகளின் உரிமையாளர்களிடமே உள்ளது. அவர்களை ஏலம் எடுப்பதா, வேண்டாமா என்பதை அணி உரிமையாளர்கள்தான் முடிவு செய்ய வேண்டும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# நைகர் முதல் முறையாகத் தகுதி



ஆபிரிக்க கிண்ண கால்பந்துப் போட்டியில் விளையாட நைகர் அணி முதல் முறையாக தகுதிபெற்றது. இதனால் முன்னணி அணிகளான தென்னாபிரிக்கா, நைஜீரியா ஆகியன வெளியேறின. ஆபிரிக்க கிண்ண கால்பந்துப் போட்டி அடுத்த ஆண்டு ஜனவரி 21 ஆம் திகதி முதல் பெப்ரவரி 12 ஆம் திகதி வரை கினியா மற்றும் கபோஸ் ஆகிய நாடுகளில் நடைபெறவுள்ளன.

இதற்கான தகுதிகாண் போட்டிகள் ஆபிரிக்கா நாடுகளுக்கு இடையில் நடைபெற்றன. தகுதிகாண் போட்டிகள் முடிவில் அன்கோலா, கானா, கினியா, லிபியா, மாலி, துனிஷிய, சாம்பியா ஆகிய அணிகள் இறுதிச் சுற்றுக்கு தகுதிபெற்றன. இதில் எவரும் எதிர்பார்க்காத வகையில் நைகரும் ஆபிரிக்க கிண்ணத்தில் விளையாட தகுதி பெற்றுள்ளது.

நைகர் புள்ளிப்பட்டியலில் தென்னாபிரிக்க அணியுடன் சம புள்ளிகளுடன் இருந்தது. எனினும் போட்டிகள் அடிப்படையில் தென்னாபிரிக்காவை விடவும் சோபித்ததால் நைகர் அணி தகுதி பெற்றது. அத்துடன் 1986 ஆம் ஆண்டுகளுக்குப் பின்னர் நைஜீரியா ஆபிரிக்க கிண்ணத்தில் விளையாடும் வாய்ப்பை முதல் முறையாக இழந்தது.

# இங்கிலாந்து வீரர்கள் அதிக தொகைக்கு ஏலம்?


(லண்டன்)

அடுத்த ஆண்டு நடைபெறவுள்ள 5ஆவது ஐ.பி.எல். போட்டிக்கு இங்கிலாந்தின் முன்னணி வீரர்கள் அதிக தொகைக்கு ஏலம் எடுக்கப்படலாம் என்று தெரிகிறது.

இதுதொடர்பாக சண்டே மிரர் பத்திரிகையில் வெளியிடப்பட்டுள்ள செய்தியில் கூறப்பட்டுள்ளதாவது: சமீபத்தில் நடைபெற்ற இந்தியாவுக்கு எதிரான டெஸ்ட், ஒருநாள் தொடர், இருபது ஓவர் ஆட்டம் என அனைத்துப் போட்டிகளிலும் இங்கிலாந்து வெற்றி கண்டது. டெஸ்ட் தரவரிசையிலும் முதலிடத்தைப் பிடித்தது.

இதனால் இந்த ஆண்டு டிசம்பரில் நடைபெறும் ஐ.பி.எல். ஏலத்தில் இங்கிலாந்தின் முன்னணி வீரர்கள் மிகப்பெரிய தொகைக்கு ஏலம் எடுக்கப்படுவார்கள். கெவின் பீற்றர்சன், கிரீம் ஸ்வான், இயன் மோர்கன், ஜேம்ஸ் அண்டர்சன், ஸ்டூவர்ட் புரோட் ஆகியோர் முக்கிய வீரர்களாக இருப்பர். அடுத்த ஆண்டு ஐ.பி.எல். போட்டிகள் ஏப்ரல் 4 முதல் மே 27 வரை நடை பெறுகிறது. அதேசமயம் மே 17ஆம் திகதி இங்கிலாந்து-மேற்கிந்தியத் தீவுகளுக்கு இடையிலான டெஸ்ட் தொடர் நடைபெறவுள்ளது. இதனால் இங்கிலாந்து வீரர்கள் ஐ.பி.எல். போட்டி முழுவதும் விளையாடுவதில் சிக்கல் ஏற்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# துமிந்தவின் ஆதரவாளரே துப்பாக்கிச் சூடு நடத்தினார்



(கொழும்பு)

நாடாளுமன்ற உறுப்பினர் துமிந்த சில்வாவின் ஆதரவாளர் ஒருவர், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் பாரத லக்ஷ்மன் பிரேமசந்திர மீது துப்பாக்கிச் சூடு நடத்தியதாக அவரது சாரதி தெரிவித்துள்ளார்.

முல்லேரியா வல்பொல சந்தியில் வைத்து இரு தரப்பினரும் சந்தித்துக் கொண்டதாகக் குறிப்பிட்டுள்ளார். பயணம் செயத வாகனங்களை விட்டு கீழே இறங்கிய இரு தரப்பினரும் முதலில் வாக்குவாதம் செய்ததாகவும் பின்னர் துமிந்த சில்வா, பாரத மீது தாக்குதல் நடத்தியதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

துமிந்த மேற்கொண்ட தாக்குதலின் காரணமாக கீழே விழுந்த பாரத லக்ஸ்மன் பிரேமசந்திரவின் காலில் துமிந்தவின் ஆதரவாளர் ஒருவர் துப்பாக்கிப் பிரயோகம் நடத்தியதாகத் தெரிவித்துள்ளார்.

அதன் பின்னர் பாரதவின் தலையில் சுடுமாறு சத்தமிடப்பட்டதாகவும் பின்னர் சாரமாரியாக துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். காயமடைந்த பாரதவை ஜீப் வண்டிக்கு பின்னால் தூக்கிச் செல்ல அவரது மெய்ப்பாதுகாவலர்கள் முயற்சித்த போது, துமிந்தவின் ஆதரவாளர்கள் அவர்கள் மீதும் தாக்குதல் நடத்தியதாகக் குறிப்பிட்டுள்ளார்.

இந்தத் தாக்குதலில் குறித்த இரண்டு மெய்ப்பாதுகாவலர்களும் உயிரிழந்ததாகத் தெரிவித்துள்ளார். எவ்வாறெனினும், துமிந்த தரப்பினர் துப்பாக்கிச் சூடு நடத்தியபோது பாரத தரப்பினரும் பதில் தாக்குதல் நடத்தியதாக காவல்துறை விசாரணைகளின் மூலம் தெரிய வந்துள்ளது.

இதன் போதே துமிந்த சில்வாவின் தலையில் காயம் ஏற்பட்டதாகக் குறிப்பிடப்படுகிறது. பாரத லக்ஸ்மன் பிரேமசந்திர மற்றும் துமிந்த சில்வா ஆகிய இருவரினதும் ஆதரவாளர்களிடம் குற்ற விசாரணைப் பிரிவினர் விசாரணைகளை நடத்தி வாக்குமூலங்களை பதிவு செய்து வருவதாகக் குறிப்பிடப்படுகிறது.

கொலன்னாவ பிரதேசத்தில் போதைப் பொருள் வர்த்தகம் இடம்பெற்று வருவதாகவும் அதற்கு பாரத கடும் எதிர்ப்பை வெளியிட்டு வந்ததாகவும் அவரது ஆதரவாளர்கள் தெரிவித்துள்ளனர்.

இந்தச் சம்பவத்தின் பின்னணியில் போதைப் பொருள் வர்த்தகமும், பாதாள உலகக் குழு செயற்பாடுகளும் இருப்பதாகக் குறிப்பிட்டுள்ளனர். கடந்த 5 ஆம் திகதி கொலன்னாவ பிரதேசத்தில் நடைபெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டமொன்றில் போதைப் பொருள் வர்த்தகர்களை இந்த பிரதேசத்தை விட்டு துரத்தியடிக்கப் போவதாக பாரத தெரிவித்திருந்தார்.

கொலன்னாவ பிரதேசத்தில் பாரத கலந்து கொண்ட இறுதிப் பிரசாரக் கூட்டம் இதுவென்பது குறிப்பிடத்தக்கது.



தமது உயிருக்கு ஆபத்து ஏற்பட்டாலும் போதைப்பொருள் வர்த்தகத்தை வளரவிடமாட்டேன் என அவர் பகிரங்க அறைகூவல் விடுத்திருந்ததாகக் குறிப்பிடப்படுகிறது.

## தேசிய தொடர்பாடல் நிலையம் தொடர்ந்து இயங்கும்

(கொழும்பு)

தேர்தல் செயலகத்தில் நிறுவப்பட்டுள்ள தேசிய தொடர்பாடல் நிலையம் தொடர்ந்து இயங்குகின்றது. தேர்தலுக்குப் பின்னரான முறைப்பாடுகளை ஏற்றுக்கொள்ளும் பொருட்டு இந்த நிலையம் தொடர்ந்து இயங்குமென தேர்தல்கள் செயலகம் தெரிவிக்கிறது.

இதேவேளை இலங்கை வந்துள்ள சர்வதேச தேர்தல் கண்காணிப்பாளர்களுக்கும் தேர்தல் ஆணையாளருக்கும் இடையில் விசேட கலந்துரையாடல் ஒன்றும் நடைபெறவுள்ளது.

இந்தக் கலந்துரையாடலின் பின்னர் தேசிய தொடர்பாடல் நிலையத்தை தொடர்ந்து இயங்கச் செய்வதற்கான காலவரையறை தொடர்பில் இறுதித் தீர்மானம் மேற்கொள்ளப்படும் என்றும் தேர்தல்கள் செயலகம் தெரிவிக்கிறது.

## முல்லேரியாச் சம்பவம் 4 ஆவது நபரும் உயிரிழப்பு

(கொழும்பு)

முல்லேரியாவில் நேற்று முன்தினம் இடம்பெற்ற பரஸ்பர துப்பாககிப் பிரயோகத்தில் காயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த மற்றுமொரு நபர் உயிரிழந்துள்ளார்.

அவசர சிகிச்சைப்பிரிவில் அனுமதிக்கப்பட்டிருந்த ஒருவர் நேற்று முன்தினமிரவு உயிரிழந்ததாக தேசிய வைத்தியசாலை யின் அவசர சிகிச்சைப் பிரிவின் பணிப்பாளர் டொக்டர் பிரசாத் ஆரியவங்ச குறிப்பிட்டார்.

இதன் பிரகாரம் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் பாரத லக்ஷ்மன் பிரேமசந்திர உட்பட நால்வர் இந்தச் சம்பவத்தில் உயி ரிழந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## மனோ கணேசனின் விருப்பு வாக்குகள் குழப்பத்தை ஏற்படுத்தும் தேர்தல் திணைக்களம்

(கொழும்பு)

ஜனாநாயக மக்கள் முன்னணியின் தலைவரான மனோ கணேசனுக்கு 28,433 விருப்பு வாக்குகள் கிடைத்துள்ளதாக சிறிலங்கா தேர்தல் திணைக்களம் கூறியுள்ளது. ஆனால் இந்தத் தேர்தலில் ஜனநாயக மக்கள் முன்னணிக்கு கொழும்பு மாநகர சபையில் கிடைத்த மொத்த வாக்குகள் 26,229 மட்டுமேயாகும்.

கொழும்பு மாநகரசபைக்கான தேர்தலில் தெரிவு செய்யப்பட்ட வேட்பாளர்கள் பெற்றுள்ள விருப்பு வாக்குகள் பற்றிய விபரத்தை தேர்தல் திணைக்களம் வெளியிட்டுள்ளது. ஐ.தே.க சார்பில் மாநகர முதல்வர் வேட்பாளராக நிறுத்தப் பட்ட ஏ.ஜே.எம். முசம்மில் 55,448 விருப்பு வாக்குகளைப் பெற்றுள்ளார்.

அவரை அடுத்து கிருசன் ஜோன் ராம் 9966 வாக்குகள் பெற்று இரண்டாவது இடத்தைப் பெற்றுள்ளார். இந்தநிலையில் மனோ கணேசனுக்கு 28,433 விருப்புவாக்குகள் கிடைத்ததாக சிறிலங்கா தேர்தல் திணைக்களம் அறிவித்துள்ளது குழப்பத்தை ஏற்படுத்துவதாகவுள்ளது.

அதேவேளை ஜனநாயக மக்கள் முன்னணி சார்பில் மனோ கணேசன், எஸ் முகவரியன், குருசாமி நளன்ராஜ் தேவன், தங்கேஸ் வர்கீசன், எஸ்பாஸ்கரன், லோறன்ஸ் பெர்னான்டோ ஆகியோர் கொழுமபு மாநகரசபைக்குத் தெரிவாகியுள்ளனர்.

விருப்பு வாக்குகளின் அடிப்படையில் ஐ.தே.க சார்பில் 2 தமிழர்கள், 9 முஸ்லிம்கள், 13 சிங்களவர்கள் என 24 உறுப்பினர்கள் கொழும்பு மாநகர சபைக்குத் தெரிவாகியுள்ளனர்.

ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி சார்பில் கொழும்பு மாநகர முதல்வர் பதவிக்கு போட்டியில் நிறுத்தப் பட்ட முன்னாள் அமைச்சர் மிலிந்த மொறகொடவினால் 32,103 வாக்குகளையே பெற முடிந்துள்ளது.

ஆளும்கட்சியின் சார்பில் கொழும்பு மாநகர சபைக்கு தமிழர்கள் எவரும் தெரிவுசெய்யபபடவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. கொழுமபு மாநகரசபை யில் ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி சார்பில் 6 முஸ்லிம்களும் 10 சிங்களவர்களும் தெரிவாகியுள்ளனர்.

இதற்கிடையே, தெகிவளை- கல்கிசை மாநகர சபைக்கு ஜனநாயக மக்கள் முன்னணியின் சார்பில் போட்டியிட்ட கலாநிதி விக்கிரமபாகு கருணாரட்ண 2171 விருப்பு வாக்குகளைப் பெற்றுத் தெரிவாகியுள்ளார்.

## கட்டுநாயக்காவில் காயமடைந்தோர்க்கு அரசாங்க இழப்பீடு இன்னும் இல்லை!

(கொழும்பு)

கட்டுநாயக்காவில் அண்மையில் இடம்பெற்ற தாக்குதலில் பலத்த காயங்களுக்கு உள்ளான தமது உறுப்பினர்கள் சுமார் 20 பேருக்கு அரசாங்கத்தினால் இதுவரை இழப்பீடு வழங்கப்படவில்லை என சுதந்திர வர்த்தக வலய மற்றும் பொது ஊழியர் சங்கம் தெரிவிக்கிறது.

இந்த ஊழியர்கள் தொடர்ந்து சிகிச்சை பெற்று வருவதாக சங்கத்தின் பொதுச் செயலாளர் அன்ரன் மார்க்ஸ் தெரிவிக்கிறார். கடந்த மே மாதம் 30 ஆம் திகதி தாக்குதல் சம்பவத்தில் சுதந்திர வர்த்தக வலயத்தின் 270க்கும் அதிகமான ஊழியர்கள் காயங்களுக்கு உள்ளானதாக அவர் குறிப்பிடுகிறார்.

இது குறித்து சபையிடம் தெரிவித்தாவது,

காயமடைந்த ஊழியர்களுக்கு தொழிலாளர் சட்டத்தின் கீழ் எதிர்காலத்தில் இழப்பீடு வழங்க நடவடிக்கை எடுப்பதாக அதன் பேச்சாளர் தொவித்தார்.

## போலிக் குற்றச்சாட்டுகளுக்கு எதிராக உண்மையான தகவல்கள்

### பிரதியமைச்சர் முரளிதரன்

(கொழும்பு)

இலங்கைக்கு எதிராக சுமத்தப்பட்டுள்ள போலி போர்க் குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் உலகின் எந்தவொரு நீதி மன்றிலும் சாட்சியமளிக்க அஞ்சப் போவதில்லை என பிரதியமைச்சர் முரளீதரன் பத்திரிகை ஒன்றிற்கு பேட்டியளித்துள்ளார்.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, மேஜர் ஜெனரல் சாவேந்திர சில்வா, மேஜர் ஜெனரல் ஜகத் டயஸ் ஆகியோருக்கு எதிராக புலிகளின் கிழக்குத் தளபதி ரமேஸின் மனைவி வத்சலா தேவி சுமத்தியுள்ள போலிக் குற்றச்சாட்டுக்கள் தொடர்பான உண்மையான தரவுகளை சர்வதேச நீதிமன்றங்களில் வெளிப் படுத்தத் தயார் என அவர் குறிப்பிட்டுள்ளார். மேலும் போலி போர்க் குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் எந்தவொரு நீதிமன்றிலும் சாட்சியமளிக்கவும் தயார் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

வத்சலாதேவி தென் ஆபிரிக்காவில் இல்லை எனவும் அவர் லண்டனில் இருக்கின்றார். குறித்த சகல வழக்குகளின் பின்னணியிலும் ருத்ரகுமாரன் செயற்பட்டு வருகின்றார். புலிகளுக்குச் சொந்தமான பாரியளவிலான நிதி சுவிட்சர்லாந்து வங்கிகளில் காணப்படுவதாகவும் இவற்றை ஆதாரபூர்வமாக நிரூபிக்க முடியும் எனவும் முரளிதரன் தெரிவித்துள்ளார்.

## உள்ளூராட்சிப் பதவிகளின் பெயர்களை கோருகின்றது தேர்தல் செயலகம்

(கொழும்பு)

நாளை புதன் கிழமைக்குள் உள்ளூராட்சி மன்றங்களுக்கான தலைவர்களின் பெயர்களை தேர்தல் செயலகத்திற்கு அறிவிக்குமாறு சம்பந்தப்பட்ட கட்சிகளின் செயலாளர்களிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

மேயர், பிரதி மேயர், தலைவர் மற்றும் உப தலைவர் ஆகிய பதவிகளுக்காக நியமிக்கப்படுகின்றவர்களின் பெயர்களை தேர்தல்கள் செயலகத்திற்கு அனுப்பிவைக்க அந்தந்தக் கட்சிகளின் செயலாளர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று பிரதித் தேர்தல்கள் ஆணையாளர் ஜே.ஏ.எஸ்.பீ.ஜயசிங்க குறிப்பிட்டார். இது தவிர உள்ளூராட்சி மன்றங்களின் எதிர்க்கட்சித் தலைவராக பெயரிடப்படுகின்றவர்களின் பெயர்களையும் தேர்தல்கள் செயலகத்திற்கு அறிவிக்க வேண்டும் என அவர் கூறினார்.

இதன் பிரகாரம் அனைத்துப் பெயர்களையும் உள்ளடக்கிய வர்த்தமானி அறிவித்தலை இவ்வார இறுதிக்குள் வெளியிட முடியும் என தேர்தல்கள் செயலகம் நம்பிக்கை தெரிவித்துள்ளது.


## அரசாங்கத்தின் மக்கள் நல திட்டங்களுக்கு ஆதரவு

(கொழும்பு)

மக்களுக்கு நன்மை அளிக்கும் விதத்தில் அரசாங்கத்தின் வேலைத்திட்டங்கள் இருக்குமானால் அதற்கு ஆதரவளிக்க தாம் தயார் என ஐக்கிய தேசிய கட்சியின் கொழும்பு நகர சபையின் தலைமை வேட்பாளர் ஏ.ஜே.எம் முசம்மில் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார். இந்த முறை கொழும்பு மாநாகர சபைத் தேர்தலில் அதிக வாக்குகளைப் பெற்றுக்கொண்ட வேட்பாளர் இவராவார். இந்த நிலையில், தமக்கு கிடைத்துள்ள இந்த வெற்றியானது மக்களுக்கான வெற்றியாகும் எனவும் ஏ.ஜே.எம் முசம்மில் குறிப்பிட்டார்.

# வடக்கு, கிழக்கில் இறால் வளர்ப்பை துரிதப்படுத்துவதற்கு திட்டம் வகுப்பு



(கொழும்பு)

வடக்குக், கிழக்கில் இறால் வளர்ப்பைத் துரிதப்படுத்தும் திட்டத்தின் கீழ் முதன்முதலாக இந்த உவர் நீர் இறால் குஞ்சு உற்பத்தி நிலையம் திறந்து வைக்கப்பட்டது.

மட்டக்களப்புக்கு விஜயம் செய்த கடற்தொழில் நீரியல் வளங்கள் அபிவிருத்தி அமைச்சர் டாக்டர் ராஜித சேனாரத்ன, மீள்குடியேற்ற பிரதி அமைச்சர் வி.முரளிதரன் ஆகியோர் புதுக்குடியிருப்பில் 80 மில்லியன் ரூபா செலவில் அமைக்கப்பட்டுள்ள உவர் நீர் இறால் குஞ்சு உற்பத்தி நிலையத்தினை நேற்று முன்தினம் காலை திறந்து வைதனர்.

ஆசிய அபிவிருத்தி வங்கியின நிதியுதவியில் நீரியல் வளங்கள் அபிவிருத்திக்கும் தரமுன்னேற்றத்துக்குமான செயற்திட்டத்தின் கீழ் இந்த உற்பத்தி நிலையம் அமைக்கப்பட்டுள்ளது.

இந்நிகழ்வில் மாவட்ட செயலாளர் சுந்தரம் அருமைநாயகம், அமைச்சின் செயலாளர்கள், கடற தொழில் நீரியல் வள திணைக்கள அதிகாரிகள், இறால் வளர்ப்பாளர்கள், பொது மக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

உவர் நீர் இறால் குஞ்சு உற்பத்தி நிலையத்தினை திறந்து வைத்த அமைச்சர் இறால் வளர்ப்பு நிலையம் அதன் ஆய்வு கூடம் என்பவற்றையும் பார்வையிட்டு அதிகாரிகளுடனும் இத் திட்டம் பற்றிக் கலந்துரையாடினார்.

இலங்கை தேசிய நீர் உயிரின வளர்ப்பு அபிவிருத்தி அதிகார சபைக்கும் கிங் அககுரா சேர்விஸ் லிமிட்டட்டுக்கும் இடையிலான அரச தனியார் பங்குடமைச் செயற்திட்டத்தின் கீழ் இந்த நிலையம் அமைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# கலைப்பீட மாணவர்களுக்கு 4 புதிய பாடங்கள் அறிமுகம்

(கொழும்பு)



இம்முறை கலைப்பீடங்களில் உள்வாங்கப்படும் மாணவர்களுக்கு நான்கு புதிய பட்டப்படிப்பு கல்வித் திட்டங்களை அறிமுகப்படுத்தியுள்ளதாக உயர்கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

இதனடிப்படையில் ஆங்கிலக் கல்வி, தகவல் தொழிநுட்பம், சுற்றுலாத்துறை மற்றும் மும்மொழிகள் ஆகிய விசேட பாடத்திட்டங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளதாக உயர்கல்வி அமைச்சர் எஸ்.பி. திஸாநாயக்க தெரிவித்தார்.

இந்தப் புதிய பாடத்திட்டங்களை இந்த வருடத்தில் நடைமுறைப் படுத்துவதாகவும் அமைச்சர் தெரிவித்தார். புதிய பாடத்திட்டங்களோடு மேலதிகமாக வரலாறு, அரசியல் விஞ்ஞானம் அல்லது சமூக விஞ்ஞானம் என்பவற்றையும் கற்பதற்குரிய சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளதாக உயர்கல்வி அமைச்சு மேலும் தெரிவித்துள்ளது.

# புதுக்குடியிருப்பில் வெடிபொருட்கள் மீட்பு

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு பிரதேசத்தில் நேற்று முன்தினம் மாலை மேற்கொள்ளப்பட்ட சோதனை நடவடிக்கையின் போது வெடி பொருட்கள் சில மீட்கப்பட்டுள்ளன. வடக்கு மாகாண விசேட தேடுதல் பிரிவினர் இச்சோதனை நடவடிக்கையை மேற்கொண்டனர்.

இதன்போது 22 அரெல் வர்க்க குண்டுகள், 3 ஆர்.ஜீ.பீ.குண்டுகள், 3 ஆர்.ஜீ.பீ. சார்ஜர்கள், 3 தமிழன் கைக்குண்டுகள் மற்றும் ஒரு கிளைமோர் குண்டு என்பவற்றை அவர்கள் மீட்டுள்ளனர்.

மீட்கப்பட்ட வெடிபொருட்கள், முல்லைத்தீவுப் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள நிலையில் மேலதிக விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

# விவசாயியை ஏமாற்றியவர் கைது செய்யப்பட்டார்

(கொழும்பு)

போலித் தங்கநாணயங்களை புதையலில் இருந்து பெறப்பட்டது எனக்கூறி விவசாயி ஒரு வருக்கு ஏமாற்றிக் கொடுத்துவிட்டு அவரிடமிருந்து ஐந்து இலட்சம் ரூபா பணத்தையும் முச்சக்கர வண்டி ஒன்றையும் வாங்கிக்கொண்ட குற்றச்சாட்டுடன் தொடர்புடைய சந்தேக நபர் ஒருவரை கைது செய்துள்ளதாக அரலகங்வில பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி பொலிஸ் பரிசோதகர் லலித் ராஜமந்திரி தெரிவித்தார்.

அரலகங்வில ரிதிபொக்குண பகுதியைச்சேர்ந்த நபர் ஒருவரே கைது செய்யப்பட்டுள்ளார். இவரை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்துவதற்குரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

# களனி கங்கையில் மூழ்கி மூவர் பலி

(கொழும்பு)

களனி பொலிஸ் பிரிவிற்குட்பட்ட உதான மாவத்தை முனையில் உள்ள களனி கங்கைப் பகுதியில் நீராடச் சென்ற இருவர் நீரில் அடித்துச் செல்லப்பட்டு உயிரிழந்துள்ளனர்.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் மாலை இடம்பெற்றுள்ளது. நீரில் மூழ்கியவர்களை நேற்றுக் காலை காப்பாற்றச் சென்ற ஒருவரும் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளார்.

மூவரின் சடலமும் நேற்றுக் காலை 8 மணியளவில் கரையொதுங்கியுள்ளது. 19, 27 மற்றும் 59 வயதுடைய நபர்களே நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளனர். சடலங்கள் ராகம வைத்திய சாலையில் பிரேத பரிசோதனைக்காக வைக்கப்பட்டுள்ளது.

# ஈராக் தூதுவருடன் அபிவிருத்தி தொடர்பாகக் கலந்துரையாடல்

(கொழும்பு)



சிறுவர் அபிவிருத்தி மற்றும் மகளிர் விவகார பிரதியமைச்சர் எம்.எல்.ஏ. எம். ஹிஸ்புல்லாவிற்கும் இலங்கைக்கான ஈராக் தூதுவர் கஹ்தான் தாஹா காலாப் ஆகியோருக்கிடையிலான சந்திப்பு அண்மையில் இடம் பெற்றுள்ளது.

அமைச்சில் இடம்பெற்ற இச்சந்திப்பின் போது, இரு நாடுகளுக்குமிடையிலான உறவை கட்டியெழுப்புதல் மற்றும் மட்டக்களப்பு மாவட்டத்தில் ஈராக் அரசினால் மீண்டும் அபிவிருத்திப் பணிகளை மேற்கொள்வது தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டுள்ளது.

இதேவேளை, ஏறாவூரில் ஈராக் அரசாங்கத்தினால் அமைக்கப்பட்டுள்ள சதாம் ஹுஸைன் கிராமத்தை மீண்டும் கட்டியெழுப்புவது தொடர்பாகவும் பிரதியமைச்சருடன் ஈராக் தூதுவர் இச் சந்திப்பில் கலந்துரையாடினார்.

ஈராக் தூதுவருடனான இச்சந்திப்பில் கொழும்பிலுள்ள ஈராக் தூதுவராலயத்தின் முதலாவது செயலாளர் அலிதாலிபும் கலந்துகொண்டார்.


# பாதுகாப்பற்ற ரயில்கடவைகளுக்கு புதிய சமிக்ஞைகள்

(கொழும்பு)

பாதுகாப்பற்ற ரயில் கடவைகளில் புதிதாக பாதுகாப்பு சமிக்ஞைக் கட்டமைப்பு ஒன்றை அறிமுகப்படுத்துவதற்கு ரயில்வேத் திணைக்களம் நடவடிக்கை எடுத்துள்ளது.

இந்த புதிய திட்டத்திற்கென அரசாங்கம் ஆயிரம் மில்லியன் ரூபாவினை ஒதுக்கியுள்ளதாக ரயில்வே பொதுமுகாமையாளர் பி.ஏ.பி.ஆரியரத்ன தெரிவித்தார். ஒட்டுமொத்த ரயில்வே கட்டமைப்பிலும் சுமார் 750 பாதுகாப்பற்ற கடவைகள் காணப்படுவதாக அவர் சுட்டிக்காட்டினார்.

# காலநிலை மாற்றங்களை எதிர்கொள்ள காத்திரமான நடவடிக்கைகள் தேவை



(கொழும்பு)

காலநிலை மாற்றம் தொடர்பில் ஐக்கிய நாடுகள் அமைப்பு காத்திரமான திட்டங்களை முன்னெடுக்க வேண்டுமென வீடமைப்பு அமைச்சர் விமல் வீரவன்ஸ தெரிவித்துள்ளார்.

காலநிலை மாற்றங்களினால் உலகம் எதிர்நோக்கக்கூடிய அபாயங்களை உணர்ந்து சிறந்த திட்டங்கள் முன் வைக்கப்பட வேண்டும். காலநிலை மாற்றத்தினால் பல்வேறு இயற்கை அனர்த்தங்கள் ஏற்படுவதாகக் குறிப்பிட்ட அவர், காலநிலை மாற்றம் தொடர்பில் ஐக்கிய நாடுகள் அமைப்பு விரிவான ஆய்வுகளை நடத்த வேண்டுமென அவர் வலியுறுத்தியுள்ளார்.

கொழும்பில் நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் கலந்துகொண்ட போது அவர் இதனைக் குறிப்பிட்டார். இலங்கையில் காலநிலை மாற்றத்தினால் கடந்த பத்து ஆண்டுகளில் நாடு பல அனர்த்தங்களைச் சந்தித்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார். ஐக்கிய நாடுகளின் திட்டங்கள் வெறும் எழுத்து மூல ஆவணங்களாகப் பேணப்படக் கூடாது எனவும், அவை நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் எனவும் அவர் வலியுறுத்தினார். பாதகமான காலநிலை விளைவுகளை ஏற்படுத்தக் கூடிய கருமங்களில் நாடுகள் ஈடுபடுவதனை தடுப்பதறகு ஐக்கிய நாடுகள் அமைப்பு தலைமையேற்று நடவடிக்கை எடுக்க வேண்டும். அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளினால் சுற்றாடலுக்கு ஏற்படுத் தப்படும் பாதிப்புக்கள் குறித்து நடவடிக்கை எடுக்க ஐக்கிய நாடுகள் தயங்கக் கூடாது என அவர் தெரிவித்துள்ளார்.

# மன்னாரில் மீனவர் மரணம்

(மன்னார்)

மன்னார் - தலைமன்னார் பிரதான வீதியிலுள்ள புதுக்குடியிருப்பு தென்கடற்கரையோரத்தில் மீனவரொருவரின் சடலம் நேற்று முன்தினம் ஞாயிற்றுக் கிழமை பொலிஸார் மீட்டனர். மன்னார், தாராபுரம் கிராமத்தைச சேர்ந்த எ.முகமது சுல்த்தான் (வயது 63) என்பவரது சடலமென ஏனைய மீனவர்கள் அடையாளம் காட்டினர்.

குறித்த மீனவர் வியாபார நோக்கமாக இக்கடற்கரைப் பகுதிக்கு வழமையாக வந்து செலவதாகவும் அவ்வாறே ஞாயிற்றுக் கிழமை காலை 6 மணியளவில் குறித்த மீனவர் இக்கடற்கரைப் பகுதிக்கு வியாபார நோக்கத்திற காக வந்தபோதே உயிரிழநததாக பொலிஸாரின் ஆரம்பக்கட்ட விசாரணையிலிருந்து தெரிய வந்துள்ளது.

சடலத்தைப் பார்வையிட்ட மன்னார் நீதவான் கே.ஜீவராணி, பிரேத பரிசோதனைக்காக சடலத்தை மன்னார் பொது வைத்திய சாலையில் ஒப்படைத்து அறிக்கை சமர்ப்பிக்குமாறும், சடலத்தை உறவினர்களிடம் ஒப்படைக்குமாறும் பொலிஸாருக்கு உத்தர விட்டார்.

# சீனோர் நிறுவன ஊழியர்கள் ஆர்ப்பாட்டம்

(புத்தளம்)



புத்தளம், சிலாபம் வீதியில் கடுநேரிய, தெமட்டபிட்டிய சந்திக்கு அருகில் சீனோர் நிறுவனத்தின் ஊழியர்களால் எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

கடற்றொழில் அமைச்சின் கீழ் இயங்கும் சீனோர் நிறுவனத்தை, பாரம்பரிய மற்றும் சிறுகைத் தொழில் அமைச்சின் கீழ் மாற்றுவதற்கு எதிர்ப்புத் தெரிவித்தே இந்த ஆர்பபாட்டம் முன்னெடுக்கப்படுகிறது. ஆர்ப்பாட்டக்காரர்கள் வீதியை மறித்து, டயர்களை கொளுத்தி எதிர்ப்பு நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

# 3வது முறை திருட்டு

(வவுனியா)

வவுனியாச் சந்தை சுற்றுவட்ட வீதியில் அமைந்துள்ள தொலைபேசி விற்பனை நிலையமொன்றில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக் கிழமை இரவு கொள்ளைச் சம்பவமொன்று இடம்பெற்றது. இதில் பல இலட்சம் ரூபா பெறுமதியான பொருட்கள் கொள்ளையிடப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது. இந்த தொலைபேசி விற்பனை நிலையத்தில் மூன்றாவது தடவையாகவும் கொள்ளைச் சம்பவம் இடம் பெற்றது. இக்கொள்ளைச் சம்பவம் தொடர்பில் வவுனியா பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

# மாற்று ஜனநாயக அணி உருவாக்கப்பட வேண்டும்!

(“வானவில்” 2011 செப்ரெம்பர் இதழில் வெளியான தலைப்புக் கட்டுரை)

அகில இந்திய காங்கிரஸ் கட்சியின் தமிழகப் நாடாளுமன்ற உறுப்பினரான சுதர்சன நாச்சியப்பன் என்பவரின் முயற்சியால், இலங்கைத் தமிழர்களின் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கான வழிவகைகள் குறித்து ஆராய்வதற்கான கூட்டம் ஒன்று இந்தியத் தலைநகர் புதுடில்லியில் அண்மையில் கூட்டப் பட்டது.

இந்தக் கூட்டத்துக்கு இலங்கையிலிருந்து பல தமிழ் கட்சிகளுக்கு அழைப்புகள் விடுக்கப்பட்டிருந் தன. தமிழ் தேசியக் கூட்டமைப்பில் அங்கம் வகிக் கும் கட்சிகளுக்குத் தனித் தனியாக அழைப்பு விடுக கப்பட்டிருந்த அதேவேளையில், வி.ஆனந்தசங்கரி யின் தமிழர் விடுதலைக் கூட்டணி, த.சித்தார்த்தனின் புளொட் இயக்கம், தி.சிறீதரன் தலைமையிலான ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி, கஜேந்திர குமார் பொன்னம்பலம் தலைமையிலான அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் கட்சி என்பனவற்றுக்கும் அழைப்புகள் விடுக்கப்பட்டிருந்தன. அத்துடன் கடந்த பல ஆண்டுகளாக இந்தியாவில் இருந்து கொண்டு, ஈழத் தமிழருக்காக அரசியல் நடாத்தி வரும் ஞா.ஞானசேகரம் (பரந்தன் ராஜன்) தலைமை யிலான ஈ.என்.டி.எல்.எப் கட்சியும் அழைக்கப்பட்டி ருந்தது.

இலங்கைத் தமிழ் கட்சிகளில் முக்கியமான தொன்றாகவும், தமிழ் தேசியக் கூட்டமைப்புக்கு மாற்றா னதாகவும் கருதப்படக்கூடிய, அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தலைமையிலான ஈ.பி.டி.பி கட்சி இக் கூட்டத்துக்கு அழைக்கப்படவில்லை. அதேபோல கிழக்கு மாகாணசபையை நிர்வகித்து வரும், சிவ நேசதுரை சந்திரகாந்தன் தலைமையிலான தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியும் அழைக்கப் பட்டதாகத் தெரியவில்லை.

வடக்கு கிழக்கு தமிழர்களின் இந்த இரண்டு முக்கியமான கட்சிகளும் புதுடில்லி கூட்டத்துக்கு அழைக்கப்படாததிற்குக் காரணம், இந்தியத் தரப் பின் தந்திரோபாயமா அல்லது கொள்கை மாற்றமா என்பது இதுவரை சரியாகத் தெரிய வரவில்லை.

இது ஒருபுறமிருக்க, இந்தச் சந்திப்பால் ஏதா வது அர்த்தபுஸ்டியுள்ள காரியங்கள் கைகூடுமெனறு நம்பியிருந்தவர்களுக்கும் ஏமாற்றமே மிஞ்சியுள் ளது. இந்தியத் தரப்பைப் பொறுத்தவரை - அது வும் காங்கிரஸ் அரசைப் பொறுத்தவரை, ராஜீவ் காந்தி மரணித்து பல ஆண்டுகள் கடந்துவிட்டாலும் கூட, அவர் அன்றைய இலங்கை ஜனாதிபதி ஜே.ஆர்.ஜெயவர்த்தனவுடன் செய்து கொண்ட இந்திய - இலங்கை ஒப்பந்தத்தை அடிப்படை யையே, இலங்கைத் தமிழர் பிரச்சினைக்குத் தீர் வாக இன்றுவரை கருதி வருகின்றது. இனிமேலும் பல காலத்திற்கு இந்திய அரசின் நிலைமை அது வாகத்தான் இருக்கும்.

இலங்கைத் தமிழர்களைப் பொறுத்தவரையிலும் கூட, அவர்கள் இன்றிருக்கும் நிலையில், அரசியல் ரீதியாகவும் தந்திரோபாய ரீதியாகவும், இந்திய - இலங்கை உடன்படிக்கை வழங்கியுள்ள 13வது திருத்தச் சட்டத்தின் கீழான தீர்வை ஏற்பதே அரசி யல் ஞானமும் புத்திசாலித்தனமானதுமாகும். அது மாத்திரமல்லாமல், அந்தத் தீர்வை தென்னிலங் கையிலுள்ள பெரும்பான்மையான அரசியல் கட்சி கள் ஏற்றுக் கொண்டுள்ளதால், அது அனுகூலமா கவும் இருக்கும்.

நிலைமை இவ்வாறு சாதகமாக இருந்த போதி லும், மிகவும் வலதுசாரித் தன்மை வாய்ந்ததும், புலிகளின் அழிவின் பின்னரும் அவர்களது கொள் கையை இன்னமும் அடி பிசகாமல் பின்பற்றி வரு வதும், தமிழ் கட்சிகளிலேயே கூடுதலான ஏகாதி பத்தியத் தொடர்புள்ளதுமான தமிழ் காங்கிரஸ் கட்சி, வழமையான செல்லரித்துப்போன தமிழர் தேசியம், தன்னாட்சி உரிமை, சுய நிர்ணயம் என்ற கோசங்களை எழுப்பி புதுடில்லி சந்திப்பைக் குழப் பியடித்து, இந்தியாவின் முயற்சியைச் சீர்குலைத் துள்ளது.

தமிழ் காங்கிரசின் இந்த சீர்குலைவு வேலையை அக்கூட்டத்தில் பங்குபற்றிய தமிழ் தேசியக் கூட்ட மைப்புக் கட்சிகள் யாவும், வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்திருக்கின்றன. அதற்குக் காரணம் அவர்களது நிலைப்பாடும் தமிழ் காங்கிரசின் நிலைப்பாடும் ஒன்று என்பதே உண்மையாகும்.

ஆனால், இந்தக் கூட்டத்தில் பங்குபற்றிய தமிழர் விடுதலைக் கூட்டணி, புளொட், ஈ.பி.ஆர். எல்.எப், ஈ.என்.டி.எல்.எப் என்பன, ஏதாவதொரு நல்லதொரு முடிவ கிட்டும் என் எதிர்பார்த்து ஏமாந்து போனதை, ஈ.என்.டி.எல்.எப் பின்னர் அக் கூட்டம் பற்றி விடுத்த அறிக்கை புலப்படுத்துகிறது. அத்துடன் இந்த நான்கு கட்சிகளும் பின்னர் நாடு திரும்பும் வழியில் தமிழகத் தலைநகர் சென்னை யில் கூடி இந்தக் கூட்டத்தின் பெறுபேறுகள் (தோல்வி) குறித்து ஆராய்ந்துமுள்ளன. குறிப் பாக தமிழ்க் காங்கிரசின் சீர்குலைவு வேலை பற்றியும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் இரட்டை வேடம் பற்றியும் இக்கட்சிகள் கடும் விசனம் தெரிவித்ததாகத் தெரிய வருகிறது.

உண்மையில் இந்த நான்கு கட்சிகளும் அடிப்படையான ஒரு உண்மையை இந்தச் சந்தர்ப் பத்தில் உணர்ந்து கொள்வது அவசியமானது. அதாவது, தமிழ்மக்கள் பிரச்சினைக்கான தீர்வு என்பது தமிழ் தேசியக் கூட்டமைப்பு பின்பற்றி வரும் கொள்கைகளின் அடிப்படையில் எட்டப்பட முடியாதது என்பதை இவைகள் உணர வேண் டும். ஏனெனில், கடந்த 60 ஆண்டுகளாக தமிழ் காங்கிரசிலிருந்து கடைசியாகப் புலிகள் வரை, இந்த மலட்டுத்தனமான கொள்கையைப் பின் பற்றிய காரணத்தாலேயே தமிழர் பிரச்சினை தீர்க்கப்பட முடியாமல் போனது என்ற உண் மையை விளங்குவது அவசியம். தமிழ் தேசியக் கூட்டமைப்பும் அதே தவறான கொள்கையையே பின்பற்றுகிறது.

உண்மையில் பலரும் கூறி வருவது போல, (இதை ஆனந்தசங்கரி தனது அண்மைய த.வி.கூ மாநாட்டிலும் கூறியிருக்கிறார்), தமிழ் கட்சிகளின் ஒற்றுமையின்மையாலேயே தமிழ் மக்களின் பிரச்சினை தீர்க்கப்படாமல் இழுபடுகின்றது என் பது உண்மையல்ல. தமிழ்த் தலைமைகள் அன்றி லிருந்து இன்று வரை பின்பற்றி வரும் ஏகாதி பத்திய சார்பு, ஐ.தே.க சார்பு, இனவாத கொள் கைகளே தமிழர் பிரச்சினைத் தீர்வுக்கு இடை யூறாக இருந்து வருகின்றன. ஒடுக்கப்பட்ட ஒரு தேசிய இனம் தனது விடுதலையை வென்றெ டுக்க வேண்டுமானால், இதற்கு எதிரான பாதையி லேயே பயணிக்க வேண்டும்.

அதன் காரணமாகவே, யுத்தத்தில் புலிகள் தோற்கடிக்கப்பட்ட பின்னர், சில ஜனநாயக சக்திகளின் முயற்சியால், “தமிழ் கட்சிகளின் அரங்கம்” என்ற தமிழ் மக்களின் ஜனநாயக அரசியல் அணி அமைக்கப்பட்டது. இந்த அணி உருவாக்கப்பட்டவுடனேயே, பிற்போக்கு தமிழ் தேசியக் கூட்டமைப்பும், சில வெளிநாட்டு ஏகாதி பத்திய சக்திகளும் அதை உடைப்பதற்கு பல விதமான முயற்சிகளையும் மேற்கொண்டன. அதற்குக் காரணம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை விட, தமிழ் கட்சிகளின் அரங்கம் தேசிய இனப் பிரச்சினையில் ஜனநாயகபூர்வமான நிலைப்பாட் டைக் கொண்டிருந்ததுடன், பரவலான அரசியல் பிரதிநிதித்துவத்தையும் கொண்டிருந்தது என்பதா லாகும்.

ஆனால் தமிழ் தேசியக் கூட்டமைப்பு தனது இடையறாத சதி முயற்சிகளின் காரணமாக, இறு தியில் தமிழ் கட்சிகளின் அரங்கத்தை உடைத்து, அதில் முக்கிய பங்காளிகளாக இருந்த தமிழர் விடுதலைக் கூட்டணி, புளொட் என்பனவற்றை தனது பக்கம் இழுத்துக் கொண்டது. அந்த இரு கட்சிகளும் மேற்கொண்ட தவறுக்கான காரணி களை ஆராய்வது எமது நோக்கமல்ல. ஆனால் அவர்கள் தாம் விட்ட தவறை, புதுடில்லி கூட்டத் தின் தோல்விக்குப் பின்னராவது உணர்ந்து கொள்வது அவசியம். அதேநேரத்தில் ஈ.பி.ஆர். எல்.எப்.பும் இதைப் பாரதூரமாக கவனத்தில் எடுப்பது அவசியம்.

இன்றுள்ள சூழ்நிலையில், தமிழர் பிரச்சி னைக்கு ஒரு நியாயமான தீர்வு காண்பதானால், தமிழ் தேசியக் கூட்டமைப்பை தீர்வு முயற்சிக ளிலிருந்து தள்ளி வைக்காமல் அது ஒருபோதும் சாத்தியப்படாது. இது வரலாறு காட்டும் உண்மை. எனவே அதைச் செய்வதானால், முதலில் மீண் டும் ஜனநாயக தமிழ் அரசியல் கட்சிகளின் கூட்ட மைப்பை உருவாக்குவது அவசியம். அதை சாத்தியமாக்குவதற்கு முன் கையெடுத்து செயல் படுவதற்குரிய தகைமை தமிழ் கட்சிகளைப் பொறுத்தவரை, ஈ.பி.ஆர்.எல்.எப் மற்றும் ஈ.பி. டி.பி என்பனவற்றுக்கே உண்டு. அந்த இரு கட்சிகளும் தனியாகவோ அல்லது கூட்டாகவோ இதுபற்றி பாரதூரமாக ஆலோசிக்க வேண்டும்.

வலதுசாரி, பிற்போக்குவாத, ஏகாதிபத்திய சார்பு தமிழ் தேசியக் கூட்டமைப்புக்கு எதிராக, மாற்று அணியொன்றை உருவாக்காமல் தமிழர் பிரச்சினைக்கு தீர்வு இல்லையென்பதையும், தமிழ் ஜனநாயகக் கட்சிகளுக்கு வாழ்வில்லை யென்பதையும், இந்தப் பிரச்சினையில் அக்கறை யுள்ள அனைவரும் உணர்ந்து கொள்ள வேண் டிய காலம் வந்துவிட்டது.

## மெய்தான் பாருங்கோ!

## அவனவன் கவலைகள்



அவனவனுக்கு ஆயிரமாயிரம் கவலைகள் இருக்கத்தான் செய்யும் பாருங்கோ. மனிசனாய் பிறந்தவன் கவலைகள் இல்லாமல் வாழ்ந்ததாக வரலாறு இல்லை.

ஏழைக்கு வயிற்றுப் பசியைக் குறித்ததான கவலை... பணக்காரனுக்கு மேலும் மேலும் என் னெண்டு பணம் புரட்டி வட்டிக்குக் கொடுக்க லாம் எண்டது பற்றிக் கவலை. நாட்டை ஆளு கின்றவர்களுக்கு ஆட்சி பறிபோய்விடுமோ வெண்ட கவலை...எதிரணியில இருக்கிற ஆட்க ளுக்கு எப்ப தாம் சிம்மாசனம் ஏறலாம் எண்ட கவலை.. அகதி முகாமில இருக்கிற சனங்க ளுக்கு எப்ப நாங்கள் வீடு போய்ச் சேருவம் எண்டதில கவலை, மீள்குடியேறின சனத்துக்கு இன்னமும் தங்களுக்கு அடிப்படை வசதிகள் கிடைக்கேல்லையே எண்டதில கவலை... சந்தப்ப வாத அரசியல் நடத்துறதுகளுக்கு தங்களுக்கு வோட்டுப் போட்டு ஆதரிச்ச சனங்கள் எங்கை சிந்திகக வெளிக்கிட்டால் தங்கட சிறப்பான வாழ்வு சீரழிஞ்சு போய்விடுமோ எண்ட சீரியஸ்சான கவலை..

இப்பிடிப் பாருங்கோ அவனவனுக்கு வாழ்க்கையில ஆயிரம் கவலைகள்.. பிரச்சினைகள் வந்துகொண்டுதான் இருக்குது கண்டி யளே. நான் ஏன் இப்ப இதில கவலையளைப் பற்றிச் சொல்ல வாறன் எண்டால் முந்தநாள் ஒரு அலுவலா விசுவமடு பக்கம் போன னான் பாருங்கோ.

அவர் ஒரு தமிழ் வாத்தி, பண்டிதபாசைகளும் படிச்சவர் மட்டு மன்றில்லை, எழுத்தாளரும் கவிஞரும் கூட. உந்த வன்னிச்சண்டைக்கு முன்னம் போராட்டம் சம்பந்தமானது மட்டுமில்லாமல், சமூகப் பிரச்சினையளையும் பற்றி எழுதியிருக்கிறார். பேப்பரிலயெல்லாம் வந்திருந்தது. இயக்கம் நடத்தின இலக்கியக் கூட்டங்களில எல்லாம் மரபுக் கவிதையளா முழங்கினவர்... இப்ப முகம் கறுத்துப் போய் நிற்கிறார்.

என்ன பிரச்சினை கேட்கிறியளே...?

வன்னிச் சண்டை நடக்கேக்கை அவர், தான் எழுதின கதையள், கவிதையளை ஒவ்வொரு இடமா பொத்திப் பொத்திப் பாதுகாத்துக் கொண்டு திரிஞ்சும், கடைசியில அம்பலவன் பொக்கணையை ஆமி வந்து பிடிக்கேக்கை அதை அவரால தூக்கிக் கொண்டு வரேலாமல் போச்சுது.

அவனவன் தங்கட உயிரைக் காவிக்கொண்டு திரியுறதே பிரச்சி னையாக் கிடக்குது. உங்களுக்குக் கண்டறியாத கவிதையளும், கத்தரிக்காயும்.... தூக்கிக் கடலுக்குள்ள எறிஞ்சு போட்டு நடவுங்கோ எண்டு அவற்ற மனிசியே மன அழுத்தம் தாங்கேலாமல் அவரைச் சினந்துகொள்ள அவர் மனமுடைஞ்சு போனார்.

கடைசியில ஒரு றவலிங் பாய்க்கோடைதான் அவற்ற குடும்பம் ஆமியிட்டை போய்ச் சேர்ந்தது. எல்லாச் சனத்தையும் போல அவருக் கும் பெரிய சொத்தழிப்புகள் தான் பாருங்கோ. ஆனா, அந்தாள் சொத்துப் பத்து போனதைப் பற்றி கவலைப்பட்டதாத் தெரியேல்லை. என்ரை படைப்புக்கள்... என்ர கவிதைகள் எண்டு அந்நாள் சில நேரங்களில தன்னையுமறியாமல் வாய்புலம்புறதைப் பாக்க பயமா கவும், பாவமாகவும் இருக்கும்.

அவற்ர மனநிலையைப் பற்றி எல்லாராலும் புரிஞ்சுகொள்ள முடி யாது கண்டியளே! ஏனெண்டால் அவரைப் போல எழுதிப் பறி கொடுத்த ஆட்களுக்குத்தான் அவரைப் பற்றிப் புரிஞ்சுகொள்ள முடி யும்.

இதோடை இன்னுமொரு சங்கதி சொல்லுறன் கேளுங்கோ... நான் சொன்ன இந்தத் தமிழ் வாத்தியாரைப் போல பலபேர் எழுதினவை. இப்ப ஒருத்தருடைய சிலமனையும் காணேல்லை. போராட்டத்தை மட்டும் கருப்பொருளா வைச்சுக் கதை, கவிதை எழுதின ஆக்களைக் கணக்கிடைக்குதில்லை. மற்றாக்கள் இயக்கம் விழுந்ததோடை விரக்தி யின்ர விளம்பில வந்து நிண்டு கொண்டு ஏதாச்சும் வெளிக்குமா எண்டு விளக்குப் புடிச்சுப் பாத்துக் கொண்டிருக்கினம். அவையளால புறக் கணிக்கப்பட்டு... ஓரங்கட்டப்பட்ட ஒண்டு ரண்டு பேர்தான் அங்கி னேக்கை ஏதோ எழுதிக் கொண்டு திரியுதுகள். இப்பிடி ஓரங் கட்டப்பட்ட ஆட்களில நான் சொன்ன வாத்தியாரும் ஒருவர் என்பது கொஞ்சம் உறைப்பான உண்மை.

எனக்கும் வாத்தியாருடைய மனநிலை புரியக் கூடியதாகத் தான் இருந்தது. பொருள் பண்டங்கள் உழைச்சும் தேடலாம். ஆனா அச்சில பதித்த எழுத்துக்கள்....? அது தொலைஞ்சதால்....? பெத்த பிள்ளையைப் பறிகொடுத்த ஒரு தாயைப் போலதான் அந்த எழுத்தை எழுதுறவனும் இருப்பான்.

எனக்கு வாத்தியாரைப் பாக்கப் பாவமாக் கிடந்தது. சரி வாத்தியார் போனது போகட்டும். நடந்த பிரச்சினைகளை வைச்சு இனிப் புதிசா எழுதுங்கோ எண்டு சொல்லிப் போட்டு, என்ர அலுவலலைப் பாத்துக் கொண்டு வீட்டைபோக பொழுது மம்மலாப் போச்சுது. தூரத்தில என்ர சகபாடி வந்து கொண்டிருந்தான். அவன்ர முகத்திலயும் கவலை அப்பிக்கிடக்க, என்னடா முகம் ஒரு மாதிரிக் கிடக்குது எண்டு கேட் டன். அதுக்கு அவன் முடிஞ்சு போச்சுது.... எண்டு சொன்னான். நான் ஆரோ செத்துக்கித்துப் போச்சினமாக்கும் எண்டு பயந்துபோய் நிக்க, அவன் பிறகு சொன்னான், சாராயம் விக்கிற இடத்தில சாராயம் முடிஞ்சு போச்சுது. அவனுக்கு சாராயம் இல்லையெண்ட கவலை. இப்பிடித்தான் அவனவனுக்கு ஆயிரமாயிரம் கவலைகள் இருக்குது பாருங்கோ.

-சின்னக்குட்டி சின்னச்சாமி-


# லோகிதாசனைக் கடித்த தேள்

முப்பது வருஷங்களுக்கு முன் உண்மையில் நடந்த நிகழ்ச்சி இது. ஒரு கிராமத்தில், அரிச்சந்திரன் நாடகம் நடந்தது. நாடகத்தில் அரிச்சந்திரன் மகன் லோகிதாசனை பாம்பு கடித்து, அவன் அழ வேண்டிய கட்டம். மேடையில் புல் பரப்பியிருந்தனர். மேடைக்கு வந்து லோகிதாசனாக நடித்த சிறுவன் திடீரென்று அலற ஆரம்பித்தான். 'ஐயோ... என்னை தேள் கடித்து விட்டது...' என்று கத்தினான்.

திரை மறைவில் இருந்த நாடக வாத்தியார், உடனே கோபமாக, 'டேய்... பாம்பு கடித்து விட்டது என்று சொல்லச் சொன்னால், தேள் கடித்து விட்டது என்று மற்றிச சொல்கிறாயே...' என்று கண்டித்தார்.

சிறுவனோ மீண்டும், 'இல்லை... தேள்தான் கடித்து விட்டது...' என்று அழுதான். உடனே அவனை அடிப்பதற்காக மேடைக்கு வந்த வாத்தியார், கீழே தேள் ஒன்று ஓடுவதைக் கண்டார். பிறகுதான் நடந்ததை அறிந்து, தேளை அடித்துக் கொன்றுவிட்டு, சிறுவனுக்கு மருந்து போட்டனர்.

# பட்டம் விடும் திருவிழாவும் பரிதவிக்கும் பறவைகளும்



சீனாவை பிறப்பிடமாகக் கொண்ட பட்டம் விடும் பழக்கம் இன்று உலகின் பெரும்பான்மையான நாடுகளில் பரவியுள்ளது. மேலை நாடுகளில் பட்டம் விடுவதை பொழுது போக்காக, மற்றவர்களுக்கு பாதிப்பு ஏற்படா வண்ணம் குறிப்பிட்ட நாளில், நேரத்தில் ஒன்று கூடி பல வடிவங்களில் பட்டம் விட்டு மகிழ்கின்றனர். தமிழர்கள் தைப்பொங்கல் காலத்தில் பட்டம் ஏற்றி மகிழ்கின்றனர்.

பட்டம் விடும் போட்டிகளும் நடைபெறுவதுண்டு. ஒருவர் பட்டத்தை இன்னொருவர் அறுத்து விடுவதற்கான உத்திகளும் சிறுவர்களிடையே பிரபலம். இதற்காக கண்ணாடித் துகள்கள், பிசின், கந்தகம் என எதையெதையோ பூசி எதிராளியின் பட்ட நூலை அறுத்துவிடும் சாமர்த்தியங்களின் சந்தோஷமுடனும் அவர்கள் ஓடித்திரிவர்.

பட்டங்களுக்கு மட்டுமல்ல, பறவைகளுக்கும் இதனால் ஆபத்து என்கிறது ஒரு செய்தி. இந்தியாவில் நடத்திய ஒரு ஆய்வில், பட்டங்கள் ஏற்றும் விழாக்காலத்தில் இந்த ஆண்டு மட்டும் காற்றாடி நூலில் அறுபட்டு 5000 முதல் 6000 பறவைகள் இறந்துள்ளதாகத் தெரியவந்துள்ளது. காயமடைந்த பறவைகள் 10,000 முதல் 15,000 வரை இருக்கும் என்கிறது அந்த ஆய்வு. பட்டம் விடும் போது இவ்வளவு பறவைகள் இறக்குமா? என்ற கேள்வி எழுவது இயல்புதான்.

பட்டம் விடும் திருவிழாவில் பாதிக்கப்படும் பறவைகளில் பிணம் தின்னிக்கழுகுகள், சாரசக்கொக்கு, பூ நாரை, வல்லூறு, அரிவாள் மூக்கன்கள் போன்ற பறவை இனங்கள் அழியக்கூடிய பறவைகளாக கண்டறியப்பட்டு பாதுகாப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இனப்பெருக்க காலத்தில் இருந்த பத்து வெண்முதுகு கழுகுகளில் ஆறு பட்டம் விடும் திருவிழாவில் இறந்து விட்டதாகவும் நான்கு காப்பாற்றப்பட்டு சிகிச்சைக்குப் பின் விடுவிக்கப்பட்டதாகவும் பறவையியல் ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.

பெரிசின் வல்ச்சர் என்ற வல்லூறு மணிக்கு 325 கி.மீ வேகத்தில் இரையை பிடிக்கும் திறன் கொண்டது. காற்றாடி நூலில் சிக்கி அதன் இறகுகள் அறுவதுடன் அதன் வாழ்விற்கே முடிவு ஏற்படுத்தி விடுகின்றன. அதேபோல் வாத்தினங்கள் அணி அணியாகத் திரண்டு வரும் போது, காற்றாடி நூலில் சிக்கி நூற்றுக்கணக்கில் இறக்கின்றன.

பறவைகள் தவிர தெருநாய்கள், அனுமன் குரங்கு, மற்ற கால்நடைகளும் பாதிப்புக்குள்ளாகின்றன. சுற்றுச் சூழலுக்கு நண்பனாக விளங்கும் வௌவால்கள் ஆண்டு தோறும் 5000க்கும் அதிகமானவை இறக்கின்றன.

மனிதர்களுக்கும், பறவைகளுக்கும் மிகப் பெரும் ஆபத்தை ஏற்படுத்தும் பட்டம் விடும் திருவிழாவிற்கு என்னதான் தீர்வு? பறவைகள் உயிரைக் குடிக்கும் ஆபத்தான பொருட்களை நூலில் ஏற்றுவதற்கு தடை விதிக்க வேண்டுமென கோரிக்கை வைக்கிறார்கள் பறவையியலாளர்கள். மேற்குலக நாடுகளில் இருப்பதைப் போல பொது இடங்களில் பட்டம் விடுவதை நடைமுறைப்படுத்தினால் காட்டுயிர்களுக்கும், மனிதர்களுக்கும் பாதிப்பு இல்லாப் பட்டம் விடும் விழாவைக் கொண்டாடலாம் என்கிறார்கள் சுற்றுச்சூழல் மனித உரிமை ஆர்வலர்கள்.

# நாவல் உலகம்



அச்சு இயந்திரம் கண்டுபிடித்து 300 ஆண்டுகளுக்கு பின்பு தான் நாவல் அச்சடிக்கத் தொடங்கினார்கள். நாவல் உலகம் ஒரு 200 ஆண்டுகளாகத் தான் வளர்ந்து வந்துள் ளது.

ஆரம்பத்தில் நாவல்கள் பெரிய புத்தகங்களாகத் தான் அச்சடித்தார்கள். பல வன் அட்டை (hard cover) நாவல்களில் காகித நுனிக்கும் அச்சிட்ட பகுதிக்கும் இடையே நிறைய இடம் இருக்கும். மேலும் ஒரு அத்தியாயம் முடிந்ததும் 'Page left intentionally blank' என்று வெற்றுப் பக்கமும் இருக்கும். புத்தகத்தைக் கட்டுவதற்கு உதவியாய், எல்லா அத்தியாயங்களும் வலது பக்கத்திலிருந்து தான் தொடங்கும்.

ஆரம்ப நாட்களில் நாவல்கள் அவ்வளவு மலிவாக விற்கப்படவில்லை. படிப்பவர்கள், புத்தகத்தில் தங்களது கருத்துக்களை ஓரத்தில் எழுதுவதற்காக பெரிய இடைவெளி விடப்பட்டது. புத்தகத்தின் கடைசியில் குறிப்பு எழுதுவதற்கென்றே சில வெற்றுப் பக்கங்களும் இணைக்கப்பட்டது.

நாவல்கள் உருவான மேற்கில் அவர்களது வாசிப்புக் கலாசாரத்தின்படி புத்தக விமர்சன மன்றங்களும் இருந்தன. உதாரணத்திற்கு, 'சார்ள்ஸ் டிக்கன்ஸ்' ரசிகர் மன்றத்தில், நூலில் எழுதிய கருத்துக்களை வாசகர்களுடன் அலசுவாராம். நாவலாசிரியர்கள் பிரபலமடைய அதிக தொலைத் தொடர்பு இல்லாத காலத்தில் இப்படித்தான் கருத்துப் பரிமாற்றம் செய்தார்கள்.

மென் அட்டை (paperback) என்ற வடிவு, ஒரு அச்சுப் புரட்சி. இது நாவல்களை மிகவும் பிரபல மலிவு படுத்தியது. குறைந்த விலையில் பல பதிப்பீட்டாளர்களும் பல கோடிப் புத்தகங்களை விற்றுத் தள்ளினார்கள். மிகவும் சின்ன எழுத்து அளவு மற்றும் எவ்வளவு முடியுமோ அவ்வளவு இடத்திலும் மறுபயன்பாட்டுக் காகிதத்தில் அச்சடித்தார்கள்.

இதனால் பல நாவலாசிரியர்கள் பயங்கர பணக்காரர்கள் ஆனார்கள். மேலும் அவர்களைச் சுற்றி ஒரு உலகமே உருவானது. வட அமெரிக்கா மற்றும் ஐரோப்பாவில் வருடத்திற்கு 60 பில்லியன் டொலர் வணிகம் இது! நம் போன்ற கீழை நாடுகளில் எழுத்தும் நாவலும் இன்னும்கூட தொழிலாகவில்லை. எழுத்தை ஒரு தொழிலாக எடுத்துக்கொள்ளப் போவதாக ஒருவர் சொன்னால் அவரைப் பார்த்துச் சிரிப்பாய்ச் சிரிக்கும் நிலைதான் உள்ளது.

உலகிலேயே பைபிளுக்கு அடுத்தபடியாக அதிக அளவில் (80 கோடி பிரதிகள்) அச்சடிக்கப்பட்ட புத்தகம் 'தலைவர் மா சே துங் மேற்கோள்கள்'. ஜே.கே. ரோலிங் (J.K.Rowling) எழுதிய 'ஹரி போட்டர்' கதைகள் 40 கோடி புத்தகங்கள் விற்பனையாகியுள்ளன.

# நீச்சல் உடையில் சாதனை



அவுஸ்ரேலியாவில் உள்ள கோல்ட் கோஸ்ட் கடற்கரையில், "பிகினி எனப்படும் நீச்சல் உடையில் நீளமான அணிவகுப்பு நடத்தி கின்னஸ் சாதனை படைத்துள்ளனர் 357 இளம்பெண்கள். ஐரோப்பாவின் கேமேன் தீவில், 332 இளம்பெண்கள் நீச்சல் உடையில் அணிவகுத்துச் சென்றதே இதுவரை சாதனையாக இருந்தது. இந்தச் சாதனை தற்போது முறியடிக்கப்பட்டுள்ளது.

கின்னஸ் உலக சாதனை நடுவரான கிரிஸ் ஷீடி கூறுகையில், "இளம்பெண்கள் சரியான பிகினி உடை அணிந்திருக்கிறார்களா என்பதை சரிபார்க்கும் வேலை கடினமாக இருந்தது. இந்த அணிவகுப்பில் 361 பெண்கள் பங்கேற்றனர். ஆனால் அவர்களில் 4 பேர் சரியான பிகினி அணியவில்லை. எனவே அவர்கள் நிராகரிக்கப்பட்டனர். அப்படியிருந்த போதும், 357 பெண்கள் தேர்வானதால் பழைய சாதனை முறியடிக்கப்பட்டு கின்னஸ் புத்தகத்தில் இடம் பெற்றுவிட்டனர் என்றார்.

# நீல கிராமம்



இயக்குனர் ஷங்கரின் அந்நியன் படத்தில் ஒரு பாடல் காட்சிக்காக கன்னியாகுமரியிலுள்ள பாறைகளுக்கெல்லாம் நிறந் தீட்டியது போல ஆங்கிலப் படமொன்றிலும் ஒரு கிராமத்திற்கே நீல வண்ணம் பூசிப் படம் பிடித்திருக்கிறார்கள்.

அண்மையில் வெளியான 'தி ஸ்மர்.'.ப்ஸ்' (The Smurfs) என்ற ஆங்கிலத் திரைப் பட படப்பிடிப்புக்காக ஸ்பெயினில் உள்ள ஜஸ்கார் என்ற கிராமத்தில் உள்ள வீடுகள், கட்டடங்களுக்கு நீல வண்ணம் பூசப்பட்டது. அங்குள்ள தேவாலயங்களுக்குக் கூட நீல நிறம் பூசப்பட்டது. இதனைத் தொடர்ந்து எதிர் பாராத விதமாக அங்கு சுற்றுலாப் பயணிகளின் வருகை அதி கரித்துள்ளது.

தினமும் ஆயிரக்கணக்கான சுற்றுலாப் பயணிகள் வருவதால், ஏற்படும் போக்குவரத்து நெரிசலைப் பொலிஸாரால் கட்டுப்படுத்த இயலவில்லை. படப்பிடிப்பு முடிந்ததும், பழைய நிறத்திற்கு மாற்றித் தருவதாக திரைப்படக் குழுவினர் அறிவித்திருந்தனர். தேவையில்லை அப்படியே இருக்கட்டும் எனக் கிராம மக்கள் தெரிவித்துவிட்டனர்.

# சூரியக்காற்று தெரியுமா?

விண்வெளியில் கோள்களுக்கு இடையில் இடைவிடாமல் பெருகிப் பாய்ந்து கொண்டிருக்கும் மின்னூட்டமுள்ள துகள்களையே 'சூரியக் காற்று' என்று விண்வெளி ஆய்வாளர்கள் கூறுகிறார்கள். சூரியனின் கொனராப் பரப்பிலிருந்து வெளியாகிறது இந்த புரோட்டன், இலத்திரன்களின் காற்று வீச்சு. கொனராப் பரப்பிலிருந்து வெளியாகும் வாயுக்கள் அயன் நிலையில் உள்ளவை. மிக அதிகவெப்ப ஆற்றல் உடையவை. சூரியனின் ஈர்ப்பாற்றலால் இந்த அயன் நிலை வாயுக்களைக் கட்டுப்படுத்த முடிவதில்லை. இந்த அயனநிலை வாயுவை 'பிளாஸ்மா' என்று கூறுவார்கள். இது பொருளின் நான்காவது நிலை.

கட்டுக்கடங்காத இந்த அயன்கள் விண்வெளியில் வெள்ளம் போல சீறிப் பாய்கின்றன. சூரியனின் மின்காந்தப் புலம் இந்த அயன்கள் விரிவடைவதைக் கட்டுப்படுத்துகிறது. சாதாரணமாக கடுஞ்சூட்டால் ஏற்படும் வாயுக்களின் இயக்கம் ஒழுங்கற்று தாறுமாறாக இருக்கும். சூரியனின் பரப்பில் உள்ள நிலையைப் பற்றிக் கேட்கவே வேண்டாம்.

இந்நிலையிலும் சூரியன் கோள வடிவமாக இருப்பதற்குக் காரணம் அதன் அசுர ஈர்ப்பு ஆற்றல்தான். நமது புவியின் ஈர்ப்பு ஆற்றலை விட 27 மடங்கு அதிகமாக சூரியனுக்கு ஈர்ப்பாற்றல் உள்ளது. இதனால்தான் சூரியனால் வெகு தொலைவில் உள்ள கோள்களையும் ஈர்த்து, அதனதன் பாதையில் சுற்றிவரச் செய்ய முடிகிறது. சில சமயங்களில் அதன் ஈர்ப்பாற்றலையும் மீறிக் கொண்டு அதன் பரப்பில் இருந்து சூரியக் கொழுந்துகள் சீறிப் பாய்வதுண்டு.

சூரியனின் பரப்பு, குமுறிக் கொந்தளித்துக் கொண்டிருக்கும் ஒரு வாயுக்கடல். சூரியனின் ஈர்ப்பாற்றல்தான் அக்கடலைக் கரை தாண்டாமல் கட்டி வைத்துள்ளது. சில சமயங்களில் அக்கடலில் இருந்து செந்நிறச் சுவாலைகள் சீறிப் பாய்வதுண்டு. இதுவே சூரியக்காற்று எனப்படுகிறது.

# மும்பை குண்டுவெடிப்பு குற்றவாளி பாகிஸ்தானில் - உளவுத்துறை உறுதி

கடந்த 1993 ஆம் ஆண்டு மும்பையில் நடந்த தொடர் குண்டு வெடிப்புக்கு மூளையாக செயற்பட்டவன் நிழல் உலக தாதா என அழைக்கப்படும் தாவூத் இப்ராகிம். குண்டு வெடிப்பைத் தொடர்ந்து தாவூத் இப்ராகிமும், அவனது கூட்டாளிகளும் தலைமறைவாகி விட்டனர். கூட்டாளிகளில் சிலர் மட்டும் கைது செய்யப்பட்டனர்.


பாகிஸ்தானில் கராச்சி நகரில் பதுங்கி இருந்த தாவூத் இப்ராகிம் அரபு நாட்டுக்கு தப்பிச் சென்று விட்டதாக முன்பு கூறப்பட்டது. அதன் பிறகு மீண்டும் பாகிஸ்தானில் தஞ்சம் புகுந்திருப்பதாக தகவல்கள் வெளியாகின. இந்த தகவலை பாகிஸ்தான் மறுத்தது. தாவூத் இப்ராகிம் தங்கள் நாட்டில் இல்லை என்று பாகிஸ்தான் தொடர்ந்து மறுத்து வந்த நிலையில் அதை பொய்யாக்கும் வகையில் இந்திய உளவு துறைக்கு வலுவான ஆதாரங்கள் கிடைத்தன.

இதன் அடிப்படையில் உளவு நிறுவனங்கள் தயாரித்துள்ள அறிக்கையில் கூறப்பட்டு இருப்பதாவது:

தாவூத் இப்ராகிம் பாகிஸ்தானில்தான் உள்ளார். கராச்சி நகரில் ஆடம்பர பங்களாவில் வசித்து வருகிறார். அவருக்கு பாகிஸ்தான் அரசு எல்லா வசதிகளையும் செய்து கொடுத்துள்ளது. ராஜயோக வாழ்க்கை வாழ்ந்து வருகிறார். தாவூத் இப்ராகிமின் மகன் மொயின் நவாசின் திருமணம் கடந்த செப்டெம்பர் மாதம் 25 ஆம் திகதி கராச்சியில் நடந்தது. திருமணத்திலும் வரவேற்பு நிகழ்ச்சியிலும் ஐ.எஸ்.ஐ உள்ளிட்ட பாகிஸ்தான் உளவு அமைப்பைச் சேர்ந்த உயர் அதிகாரிகள் கலந்து கொண்டனர். அரசு அதிகாரிகளும் பங்கேற்றனர். அவருக்கு நெருக்கமான தொழில் அதிபர்கள் சிலரும் திருமணத்தில் கலந்து கொண்டனர். ஐ.எஸ்.ஐ அமைப்பில் உள்ள உயர் அதிகாரிகள் சிலரின் குழந்தைகள் வெளிநாடுகளில் படிக்கின்றனர். அவர்களுக்கு தேவையான உதவி களை தாவூத் இப்ராகிம் தான் செய்து வருகிறார்.

அந்த வகையில் பயன் அடைந்த அதிகாரிகளும் திருமணத்துக்கு வந்திருந்தனர். பாகிஸ்தான் இராணுவத்தை சேர்ந்த உயர் அதிகாரிகளும், திருமண வரவேற்பு நிகழ்ச்சிக்கு வந்திருந்தனர். அப்போது தாவூத் இப்ராகிம் முன்னெச்சரிக்கையாக செயல்பட்டார். தன்னையோ, தனக்கு வேண்டியவர்களையோ புகைப்படமோ அல்லது வீடியோவோ எடுக்க அவர் அனுமதிக்கவில்லை.

# சிறுமியின் ஞாபகசக்தி



(சென்னை)

கரூரில், இரண்டரை நிமிடத்தில், 200 நாடுகளின் தேசியக் கொடி பெயர் மற்றும் ஒன்றரை நிமிடத்தில், 99 வகையான பூக்களின் பெயர்களைச் சொல்லி, நான்கு வயது பள்ளிச் சிறுமி, இந்தியன் புக் ஆப் ரெக்கார்ட்டில் இடம் பெற்று சாதனை புரிந்தார்.

கரூரைச் சேர்ந்த சக்திவேல்-செல்வி தம்பதியரின் மகள் இனியா,(வயது - 4). இவர், கரூர் ஸ்ரீ சங்கரா வித்யாலயா பள்ளியில், எல்கே.ஜி., படித்து வருகிறார். சிறுமி இனியாவுக்கு அதிகளவில் ஞாபக சக்தி இருந்ததை, அவரது பெற்றோர் அறிந்தனர்.இதையடுத்து, முதல் கட்டமாக தனித்திறனை வெளிப்படுத்த, சிறுமி இனியாவுக்கு, பல்வேறு நாடுகளின் தேசியக் கொடிகள் மற்றும் பூக்களின் பெயர்களை கற்றுக்கொடுத்தனர். சில நாட்களில் தேசியக்கொடிகள் மற்றும் பூக்களின் பெயர்களை, சிறுமி இனியா தானாகவே சொல்ல ஆரம்பித்தார்.

இதையடுத்து, மேற்படி சாதனை நிகழ்ச்சி, கடந்த சனிக்கிழமை கரூர் ஆர்த்தி ஹோட்டலில் நடந்தது. இந்நிகழ்ச்சியில், 200 நாடுகளில் தேசியக் கொடியைப் பார்த்து, நாடுகளின் பெயரை இரண்டு நிமிடம் 34 செக்கன்களிலும், 99 பூக்களின் பெயர்களை பார்க்காமல், ஒரு நிமிடம் இரண்டு செக்கன்களிலும் சிறுமி இனியா சொலலி முடித்தார். இந்தியன் புக் ஆப் ரெக்கார்ட்ஸ் சாதனையாளரும், நிர்வாகியுமான வெங்கடாச்சாரி, சாதனை சிறுமி இனியாவுக்கு, "இந்தியன் புக் ஆப் ரெக்கார்ட்ஸ்" சான்று வழங்கி பாராட்டினார்.

# தயாநிதி மாறன் வீட்டில் சி.பி.ஐ. திடீர் சோதனை



முன்னாள் மத்திய தொலைத் தொடர்புத்துறை அமைச்சர் தயாநிதி மாறனின் சென்னை, டெல்லி, ஹைதராபாத் வீடுகள் மற்றும் அலுவலகங்களில் சி.பி.ஐ அதிகாரிகள் நேற்றுக் காலை முதல் அதிரடி சோதனை நடத்தி வருகின்றனர்.

ஏர்செல் நிறுவன பங்குகளை மலேசியாவின் மேக்ஸிஸ் நிறுவனத்துக்கு வலுக்கட்டாயமாக விற்க வைத்த விவகாரத்தில் தயாநிதி மற்றும் அவரது சகோதரர் கலாநிதி மாறன் ஆகியோர் மீது சி.பி.ஐ குற்றப் பத்திரிகை பதிவு செய்துள்ளது.

நேற்றுப் பதிவு செய்யப்பட்ட முதல் குற்றப் பத்திரிகை தகவல் அறிக்கையில்,

மாறனின் சகோதரர்கள் தவிர மேக்சிஸ் அதிபரான ஆனந்த கிருஷ்ணன், மேக்சிஸ் குழுமத்தைச் சேர்ந்த "அஸ்ட்ரோ" நிறுவனத்தின் தலைமை நிர்வாக அதிகாரி ரால்ஃப் மார்'ல் ஆகியோர் மீதும் குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

தயாநிதி மாறன் மற்றும் அவரது சகோதரர் கலாநிதி மாறன், ஆனந்த கிருஷ்ணன் மற்றும் ரால்ஃப் மார்ஷல் ஆகியோர் மீது ஊழல், தடுப்புச் சட்டப் பிரிவின் கீழ் வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளது.

இதைத் தொடர்ந்து நேற்று தயாநிதி மாறனின் சென்னை போட் க்ளப் வீடு, சென்னை அலுவலகம், ஹைதராபாத்-டெல்லி வீடுகள் உள்ளிட்ட இடங்களில் சி.பி.ஐ சோதனை நடத்தி வருகிறது. அதேபோல சன் ரீவி அலுவலகத்திலும் டெல்லியிலிருந்து வந்த சி.பி.ஐ. அதிகாரிகள் அதிரடி சோதனை நடத்தி வருகின்றனர். இது தவிர மாறனின் சகோதரர்களுக்கு மிக நெருக்கமான சிலரின் வீடுகளிலும் சோதனைகள் நடந்து வருகிறது.

# வடிவேல் - சிங்கமுத்து மோதல் தொடர்கிறது



(சென்னை)

வடிவேலு தி.மு.க.வில் சேர்ந்ததால் அக்கட்சி அழிந்து வருகிறது என்று சிங்கமுத்து தேர்தல் பிரசாரம் செய்தார். தமிழக உள்ளாட்சித் தேர்தல் வருகிற 17 மற்றும் 19 ஆம் திகதிகளில் 2 கட்டமாக நடைபெறவுள்ளது.

முதல் கட்டத் தேர்தலுக்கு இன்னும் ஒரு வாரமே இருப்பதால் தேர்தல் களம் சூடு பிடிக்கத் தொடங்கியுள்ளது. கட்சித் தலைவர்களும், வேட்பாளர்களும் தீவிர தேர்தல் பிரசாரம் செய்து வருகிறார்கள். அ.தி.மு.க. வேட்பாளர்களுக்கு ஆதரவாக நடிகர் சிங்கமுத்து தேர்தல் பிரசாரம் செய்து வருகிறார் பிரசாரம் ஒன்றில் சிங்கமுத்து கூறியதாவது,

உள்ளாட்சி தேர்தலில் ஆளுங்கட்சிக்கு ஓட்டுப் போட்டால் நலத் திட்டங்கள் தவறாமல் அனைத்து வீடுகளுக்கும் வந்து சேரும். தி.மு.க. வுக்கு ஓட்டு போட்டால் உள்ளாட்சி பொறுப்புக்கு வரும் தி.மு.க. வினர் பொது மக்களுக்கு நலத்திட்டங்கள் கிடைக்காமல் செய்து விடுவார்கள்.

தி.மு.க.வினர் செய்த 2ஜி ஸ்பெக்ட்ரம் முறைகேட்டால் உலக அளவில் தமிழனுக்கு தலைகுனிவு ஏற்பட்டுள்ளது.

அ.தி.மு.க. ஆட்சியில் ரவுடிகள் விரட்டியடிக் கப்பட்டுள்ளனர். கருணாநிதியை வடிவேலு 3 முறை சந்தித்ததால் தி.மு.க. எதிர்க்கட்சியாக கூட இல்லாத நிலை ஏற்பட்டுள்ளது. வடிவேலு நடிகர் அல்ல. தி.மு.க.வை அழிகக்வே அங்கு போய் சேர்ந்திருக்கிறார்.

தமிழ்நாட்டில் 234 தொகுதிகள் தான் உள்ளன. சட்டசபை தேர்தலில் தி.மு.க. 250 தொகுதிகளில் வெற்றி பெறும் என்று பேசியவர் தான் வடிவேலு. கருணாநிதியை நம்பி ஊர் ஊராக பேசிய வடிவேலு இப்போது எங்கே இருக்கிறார் என்றே தெரியவில்லை.

அவரை வைத்து படம் எடுத்த தயாரிப்பாளர்கள் கடனாளியாகி உள்ளனர் என பிரசாரத்தின் போது சிங்கமுத்து பேசியது வடிவேலுக்கும் சிங்கமுத்துவிற்கும் மோதல்கள் தொடர்வதை காட்டுகின்றது.

# உத்தரப் பிரதேசத்தில் மூளை கொதிப்பு நோய்

உத்தரப் பிரதேசத்தில் மூளை கொதிப்பு நோயால் அடுத்தடுத்து குழந்தைகள் சிகிச்சை பலனின்றி பலியாகி வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், அயல் மாநிலங்களுக்கும் குறித்த நோய் பரவி வருவதால் சுகாதாரத்துறையினர் தீவிர நடவடிக்கை எடுத்து வருகின்றனர்.

உத்தரப் பிரதேச மாநிலத்தில் கடந்த ஆண்டு நுளம்புகளால் ஒருவித நோய் பரவியது. அதன்பின்னர், ஒருவித வைரஸ்கள் குழந்தைகளில் மூளையை தாக்குவதாக சுகாதார துறையினர் தகவல் வெளியிட்டுள்ளனர்.

இதனை மருத்துவத் துறையினர் ஜப்பானிய மூளை கொதிப்பு நோய் என அழைக்கின்றனர்.

இந்த நோய் காரணமாக இந்த வருடம் 376 குழந்தைகள் பலியானதாகவும் புள்ளி விபரங்கள் தெரிவிக்கின்றன.




# அணுமின் நிலையத்தை மூடக் கோரி 9 ஆம் திகதி முதல் உண்ணாவிரதம்

(சென்னை)

கூடங்குளத்தில் கட்டப்பட்டுள்ள அணு உலைகளை மூடக் கோரி கடந்த 7 ஆம் திகதி தமிழக அரசு சார்பில் ஒரு குழுவும், போராட்ட குழுவினர் ஒரு குழுவாகவும் டெல்லியில் பிரதமரை சந்தித்து மனு அளிததனர்.

இதன் பிறகு இடிந்தரை யில் 9 ஆம் திகதி நடைபெற உள்ள அடையாள உண்ணாவிரதத்துக்கு பதிலாக விளக்க கூட்டம் நடைபெறும் என போராட்ட குழு அமைப்பாளர் உதயகுமார் தெரி வித்தார்.


இந்நிலையில் பிரதமர், தமிழக முதல்வருக்கு கூடங்குளம் அணுமின் நிலைய பணிகள் திட்டமிட்டபடி தாமதமின்றி நடைபெற தமிழக அரசு ஒத்துழைக்க வேண்டும் என கேட்டு கடிதம் எழுதியதாக தகவல் வெளியானது.

இதனால் 9 ஆம் திகதி முதல் போராட்ட குழுவினர் போராட்டத்தை மீண்டும் தீவிரப் படுத்தினர். போராட்டத்தின் அடுத்த கட்டம் குறித்த ஆலோசனைக் கூட்டம் இடிந்தகரை பிஷப் ரோச் பள்ளியில் நேற்று மன்தினம் நடந்தது. கூட்டத்தில் சமுதாய தலைவர்கள், ஆர்சி, சிஎஸ்ஐ மத போதகர்கள், அணு சக்திக்கு எதிரான குழுவினர் கலந்து கொண்டனர்.

இதில் அணுமின் நிலைய பணிகளை நிறுத்த மறுக்கும் மன்மோகன் சிங் அரசையும், தமிழர்களின் உணர்வுகளை கொச்சை படுத்தும் மத்திய அமைச்சர் நாராயணசாமியை கண்டித்தும், போராட்டத்தை கொச்சை படுத்தி பேசிய இந்திய கம்யூனிஸ்ட் தமிழ் மாநில தலைவர் தா. பாண்டியனை கட்சியில் இருந்து நீக்க கோரியும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

## சுவிஸ் வங்கி கணக்குகளை அறிய இங்கிலாந்துக்கு அனுமதி

உலகச் செய்திகள்




சுவிட்சர்லாந்தில் உள்ள வங்கிகளில் வைப்பில் இடப்பட்டுள்ள இங்கிலாந்து நாட்டின் கறுப்புப் பணம் தொடர்பில் விவரங்களை அளிக்க சுவிட்சர்லாந்து இணக்கம் வெளியிட்டுள்ளது. அதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் கடந்த வெளளிக்கழமை கைச்சாத்திடப்பட்டுள்ளது. இந்த ஒப்பந்தம், 2013 ஆம் ஆண்டு முதல் அமுலுக்கு வரும். இந்த நிலையில் சுவிஸ் வங்கிகளில் இங்கிலாந்தைச் சேர்ந்தவர்களின் பணம் மொத்தம் 9 லட்சத்து 60 ஆயிரம் கோடி வரை இருப்பதாக மதிப்பிடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## 8 வெளிநாட்டவருக்கு சவுதியில் சிரச்சேதம்

சவுதி அரேபியாவின் தலைநகரில் 8 பங்களாதேஷ் குடியேற்றவாசிகளுக்கு பொது மக்கள் முன்னிலையில் தலையை வெட்டி மரண தண்டனை நிறைவேற்றப்பட்டுள்ளது. எகிப்திய பிரஜையான ஹுஸன் சயீத் மொஹமட் அபத்துல்காலெத் என்ற பாதுகாப்பு உத்தியோகத்தரை 4 வருடங்களுக்கு முன் படுகொலை செய்த குற்றச்சாட்டில் 8 பேருக்கும் றியாத் நகரில் கடந்த வெள்ளிக்கிழமை மரண தண்டனை நிறைவேற்றப்பட்டுள்ளது.

மேற்படி 8 பேரும் பண்டசாலையொன்றை முற்றுகையிட்டு பாதுகாப்பு உத்தியோகத்தரைக் கொன்று விட்டு கொள்ளையில் ஈடுபட்டதாக தெரிவிக்கப்படுகிறது. இந்த வழக்குடன் தொடர்புபட்ட மூவருக்கு சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.


சவுதி அரேபியாவில் பணியாற்றும் வெளிநாட்டு தொழிலாளர்கள் நீதிமன்ற விசாரணைகளை எதிர்நோக்கும் போது, சட்த்தரணிகளை அணுகி சட்ட ஆலோசனைகளை பெறுவதற்கான வாய்ப்புக்கள் மிகக் குறைவாகவே இருப்பதாக தெரியவருகின்றது. இது தவிர நீதிமன்ற நடவடிக்கைகள் அனைத்தும் அரபு மொழியிலேயே மேற்கொள்ளப்படுவதனால், சந்தேக நபர்கள் எதனையும் புரிந்து கொள்ள முடியாத நிலையில் தண்டனையைப் பெறுவதாகவும் மனித உரிமை அமைபபுக்கள் சுட்டிக்காட்டியுள்ளன. அதேவேளை,



சவுதி அரேபியாவில், 20 லட்சத்திற்கும் மேற்பட்ட பங்களாதேஷ் மக்கள் தொழில் புரிவதாக புள்ளி விபரங்கள் தெரிவிக்கின்றது.

இந்த வருடம் சவூதி அரேபியாவில் 58 பேருக்கு தலையை வெட்டி மரண தண்டனை நிறைவேற்றப்பட்டுள்ளது. அவ்வாறு தண்டனை நிறைவேற்றத்துக்கு உள்ளானவர்களில் 20 பேர் வெளிநாட்டு பிரஜைகளாவர். நேற்று (10 செப்டம்பர்) சர்வதேச மரண தண்டனை எதிர்ப்பு தினம் என்பதும் குறிப்பிடத்தக்கது.

## சீனா மீது தலாய்லாமா கடும் விமர்சனம்



சீன அரசு பொய்களாலும், நயவஞ்சகத்தினாலும் சூழப்பட்டு ஆட்சி நடத்தி வருகிறது என்று குற்றஞ்சாட்டியுள்ள திபெத்திய தலைவர் தலாய்லாமா சீனா தன்னை பேயாக சித்திரிக்கிறது என்று குறிப்பிட்டுள்ளார். தென் ஆபிரிக்க ஆர்ச். பிஷப் ஒருவர் 80 ஆவது பிறந்தநாளைக் கொண்டாடினார். இவரது பிறந்த நாளில் பங்கேற்க அழைப்பு வந்த போதும் சீனாவின் நெருக்கடியால் தலாய்லாமாவுக்கு விசா வழங்க மறுக்கப்பட்டது. இதனால், தலாய்லாமா அவரது இடத்தில் இருந்துகொண்டு இணையத்தினூடாக வாழ்த்துத் தெரிவித்த பின்னர் கருத்துத் தெரிவித்த போதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

சீனாவின் ஆட்சி அதிகாரம் பொய் மற்றும் வஞ்சனையால் சூழப்பட்டுள்ளது. மக்கள் உண்மையைப் பேச முடியவில்லை. உண்மையை சொன்னால் குரல் வளையை நெரிக்கும் போக்கை சீனா கடைபிடிக்கிறது. கம்யூனிஸ நாடான சீனா ஒரு சர்வாதிகார ஆட்சி நடத்துகிறது. தென்ஆபிரிக்கா சீனாவுடன் மிக நெருங்கிய வர்த்தக நாடாக இருப்பதால் எனக்கு விசா கிடைப்பதில் சிரமம் ஏற்பட்டுள்ளது. பிஷப் டுட்டு பிறந்த நாளில் பங்கேற்க நான் ஆசைப்பட்டேன் ஆனாலும் சாத்தியமாகவில்லை. இன்னும் இவரது 90 ஆவது பிறந்த நாளில் அழைப்பு வரும்போது தென்ஆபிரிக்கா அப்போதாவது சீனாவுக்கு அடிமையாகாமல் இருக்குமானால் நான் நிச்சயம் பங்கேற்பேன் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

## டென்மார்க்கில் கொழுப்பு சத்து பொருட்களுக்கு வரி
### மக்களின் உடல்நலனை பாதுகாக்க நடவடிக்கை

ஐரோப்பிய நாடான டென்மார்க்கில் கொழுப்பு சத்துமிக்க பால், இறைச்சி, வெண்ணை, பீஷா மற்றும் எண்ணெய் வகைகளை பொதுமக்கள் அதிக அளவில் விரும்பி சாப்பிடுகின்றனர். இதனால் உடலில் கொழுப்பு அதிகமாகி நலன் பாதிக்கப்படுகிறது. பல்வேறு நோய்களுக்கு ஆளாகி அவதிப்பட்டு வருகின்றனர். இதனால் தங்கள் நாட்டு மக்களை நோயில் இருந்து காப்பாற்றி, உடல் நலத்துடன் வாழ வைக்க டென்மார்க் அரசு கொழுப்பு சத்து மிகுந்த திரவ வடிவிலான பால், வெண்ணை, எண்ணெய் வகைகள் மற்றும் இறைச்சி, பீஷா உள்ளிட்ட உணவு பொருட்களுக்கு புதிதாக வரி விதித்துள்ளது.

இதனால் அவற்றின் விலை முன்பைவிட பல மடங்கு அதிகரிக்க வாய்ப்பு உள்ளது. கொழுப்பு உணவு பொருட்கள் மீதான வரி கடந்த வாரம் முதல் அமுலில் உள்ளது. உலகிலேயே டென்மார்க்கில் தான் முதன் முறையாக கொழுப்பு சத்து பொருட்களுக்கு விசேஷமாக வரி விதிக்கப்பட்டுள்ளது. இதை மக்கள் நலனில் அக்கறை கொண்ட மற்ற நாடுகள் பின்பற்றும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

## பதிவிறக்கப் பெட்டகம்

நாம் நம் வாழ்க்கையை தொலைக்காட்சிக்குள் நுழைத்துக் கொண்ட முதல் தலைமுறை. நம் தலைமுறை சக மனிதர்களிடமும் இயற்கையுடனுமிருந்த நேரடித் தொடர்பை, ஒழுங்குபடுத்திய நடிப்புத்தன்மையுடன் மறுஆக்கம் செய்யப்பட்ட பிம்பங்களோடு மாற்றிக்கொண்டுவிட்ட தலைமுறை. தொலைக்காட்சி முதன்மையான Virtual Reality.

**– ஜெர்ரி மேண்டர்**

தொலைக்காட்சி வழியாக இன்று விளையாட்டுகளைப் பார்ப்பது போல் உலகைப் பார்த்துக் கொண்டிருக்கிறோம். ஒரு மனிதன மற்றொரு மனிதனைக் கொல்லும்போது நீங்கள் அதைத் தொலைக்காட்சியில் பார்க்கிறீர்கள். வாழ்க்கை என்பது இன்று ஒரு காட்சிப் பொருளாகி விட்டது ஒரு விளையாட்டாகி விட்டது,

**– அலெஹாந்ரோ ஹொடரோவ்ஸ்கி**

தொலைக்காட்சி, கம்ப்யூட்டர், சினிமா, பத்திரிகைகள், விளம்பரங்கள் போன்ற எல்லாமே நகல்களின் பிம்பங்களைப் பொழிந்தபடி இருக்கின்றன. நகல் உண்மைகளின் [Hyper real] தாக்குதல்களுக்கு எதிர்ப்பின்றி நாம் ஆளாகிக் கொண்டிருக்கிறோம். நகல்கள்தான் நமது காலத்தின் உண்மைகள்.

**– ழான் போத்ரியார்**

கதை சொல்லும் பாட்டிமார்களை நாம் இழந்துவிட்டது ஒரு பண்பாட்டு இழப்பு. உலகமயமாக்கலின், நகரமயமாக்கலின் தாழ்வாரங்களில் இந்தத் திறமைமிக்க ஸ்தாபனம் உருத்தெரியாமல் போனது. மௌனமாகிப் போனது. அர்த்தமற்ற வீடியோ விளையாட்டுகளை வெறித்துப் பார்த்தபடி குழந்தைகள் முட்டாள பெட்டிமுன் அமர்ந்திருக்கிறார்கள். பேச்சுவார்த்தையே தேவையில்லை என்று வன்முறைக்கும்பல்கள் அதிகரித்துப் போனதற்கு பழைய அற்புத நேயமிக்க கதைசொல்லிகள் இல்லாமற் போனதே காரணமாக இருக்கலாம். மொழி இன்று ஜீவனற்று போய்விட்டது. கொள்ளை நோய் தாக்கிவிட்டது போல. தனது புதுமையை, அற்புதத்தை; இளமையை இழந்து விட்டது.

நம்மைச் சுற்றி வெற்றுச் சத்தங்கள். வெறுமையான வார்த்தைகள். அரசியல்வாதிகள் போடும் கோஷங்கள், உளுத்துப் போன சித்தாந்தங்கள், முதுகெலும்பற்ற அதிகார வர்க்கத்தின் அலுத்துப்போகும் அறிக்கைகள் – எல்லாவற்றிலும் மொழி வணணமிழந்துவிட்டது. செய்தித் தாள்கள் சொன்னதையே சொல்கினறன. அநேகமாக ஸ்தாபனத்துக்கு ஜால்ரா அடிக்கின்றன. காட்சி ஊடகங்கள் மொழியில் மிச்சம் இருக்கும் ஜீவனையும் சூறையாடுகின்றன. பார்வையாளர்கள் எல்லாம் செவிடர்கள் என்று நினைப்பதுபோல ஆங்கில ஊடகங்கள் அலறுகின்றன. வேண்டாத சர்ச்சைகள் விவாதங்கள் ‘உடைக்கப்படும்’ செய்திகள் அபத்தமான சீரியல்கள்.

ஊடகங்களின் பிம்பங்கள் வெள்ளம்போல் பாய்கின்றன. இந்த வெள்ளத்தில் கதை சொல்லிக்கொண்டிருந்த பாட்டிகளும் அடித்துக் கொண்டு போய்விடுகிறார்கள். மனித இனத்துடன் ஒட்டமுடியாத அந்நிய உலகம் அது. தேசங்களின் வரலாறுகளை கலாசார வளர்ச்சியை அர்த்தமற்றதாக்கிவிடும் உலகம்.

சொல்லைப் பீடித்திருக்கும் கொள்ளை நோயிலிருந்து அதைக் காப்பாற்றுவது எப்படி? அதன் எதிர் உயிரியை எங்கிருந்து கொண்டுவருவது? இத்தாலிய எழுத்தாளர் கால்வீனோ சொல்கிறார். “இலக்கியம் மட்டுமே மொழியைப் பீடித்திருக்கும் நோயிலிருந்து காப்பாற்றும் மாற்று மருந்து”. கால்வீனோவின் எண்ணப்படி மொழியின் இன்றைய நோயுடன் போரிட இருப்பது ஒரே ஒரு ஆயுதம்தான் – இலக்கியம் என்கிற கருத்தியல். மறைந்து ஒளிந்திருப்பதைத் தேடும் வேட்கை கொண்ட எழுத்தாளனே அவரது நம்பிக்கை. அவன் நெய்யும் சொல் ஒன்றே கண்ணுக்குத் தெரிந்ததையும் தெரியாததையும் இணைப்பது. இல்லாததையும் இருப்பதையும், ஆசைகளையும் பயங்களையும் கோர்ப்பது, ‘ஆழ்துளையின் மேல் கடாசப்பட்ட வலுவற்ற அவசர பாலம்போல...”

**– வாஸந்தி**

மனித மனம் எப்போதும் அழகை, உண்மையைத் தேடிச் செல்ல வேண்டும் என்ற கட்டாயம் இல்லை. அழுகி, நாற்றம் பிடித்தவைகளையும் அது சிலசமயம் நாடுகிறது. கனவு காண்கிறது. பொய்யின் பல வண்ணங்களில் தன்னை இழக்கிறது. அதீதமான கற்பனை உலகில் சஞ்சரிக்க நினைக்கிறது. வாழ்கையின் ஒவ்வொரு கணமும் இத்தகைய எண்ணங்களின் கலவையால்தான் நிர்ணயிக்கப்படுகிறது. மனித வாழ்வைக் கோடி காட்டுவதாகச் சொல்லிக்கொள்ளும் சாதனங்களைக் கையாளுபவர்கள் இந்தக் கலவையின் ரகசியங்களை ஓரளவாவது அறிந்துகொள்ள வேண்டியது அவசியம். அப்போதுதான் அவர்களது படைப்பு உயிர்த்தன்மை பெறும். ஆனால் தமிழ்த் தொலைக்காட்சித் தொடர்களைத் தயாரிப்பவர்கள் நம்முன் கொண்டுவந்து நிறுத்துவது அட்டையில் வெட்டி ஒட்டிய படங்கள் கை கால்களை அசைப்பது போன்ற பிம்பங்கள்தான். இவற்றை உயிருள்ளதாக நினைப்பது நாம் உயிருக்குச் செய்யும் அவமரியாதை. இந்த அவமரியாதையைத்தான் இந்தத் தொடர்களை வெறிகொண்டு பார்ப்பவர்கள் தினமும் செய்துகொண்டிருக்கிறார்கள்.

**– பி. ஏ. கிருஷ்ணன்**

# உலகம் உருண்டை, நாகரிகமும் உருண்டை!

பொதுவாக எனக்கு நகை அணிவது என்பது பிடிக்காது. பெண்கள் அணிவது, அவர்கள் பிறப்புரிமை. அது பற்றி இங்கே பேச்சில்லை. நகை அணியும் ஆண்களைப் பற்றியது இது.

மோதிரம், செயின், கம்மல், வளையல் எனப் பெண்களின் பிதுரார்ஜித உரிமைகளில் நான்கினை ஆண்கள் தமக்குமான ஆபரணங்களாக அபகரித்துக்கொண்டது பற்றி நிரம்ப வருத்தப்பட்டிருக்கிறேன். பால்ய வயதுகளில் நகையணியும் ஆண்களைப் பார்க்க நேர்ந்தால் குறைந்தபட்சம் நாலடியாவது தள்ளி நின்றுவிடுவேன். குறிப்பாக, ரயிலில் சீற்றுக்கு அடியே சூட்கேசை வைத்து இழுத்துக் கட்டும் இரும்புச் சங்கிலிக் கனத்துக்குக் கழுத்தில் செயின் அணிந்து நகர்வலம் வரும் நபர்களைக் கண்டால் எனக்குக் கிலி. அவர்கள் நல்லவர்களாகக் கூட இருப்பார்கள். அந்த வயதில் என் மனத்துககுள் அங்ஙனம் தடிப்பான செயின் அணியும் ஆண்கள் அத்தனை பேரும் கெட்டவர்கள் என்னும் அபிப்பிராயம் எப்படியோ ஏற்பட்டிருந்தது.

திடீரென்று கொஞ்ச வருடங்களுக்கு முன்னர் கல்லூரி மாணவர்கள் மத்தியில் காதில் கடுக்கன் மாட்டும் நாகரிகம் உண்டானபோது சற்று திடுக்கிட்டேன். குடுமியும் கடுக்கனும் அணிந்த சிரோமணிகளை இதே தலைமுறை எத்தனை காலமாக வீதியில் பார்க்கும் தோறும் பரிகசித்து வந்திருக்கிறது என்று எண்ணிப் பார்த்தேன். உலகம் உருண்டை. நாகரிகமும் உருண்டை.

அதிலும் ஒரு காதில் மட்டும் கடுக்கன் - அதுவும் வைரக்கல் அல்லது வைரம்போல் மின்னும் வேறேதோ கல் பதித்தது. பத்தடி தூரத்திலேயே டாலடிக்கும் விதத்திலானது. ஃபேஷன என்றார்கள். ஒன்றும் பேசிவிட முடியாது.

இதில் இன்னொரு விசேடம் என்னவெனில், அதே கடுக்கனை இடக் காதில் அணிந்தால் ஓர் அர்த்தம், வலக்காதில் அணிந்தால் வேறு அர்த்தம். இரண்டில் ஏதோ ஒன்று சற்றே அபாயகரமானது என்றும் யாரோ சொல்லியிருந்தார்கள். எத்தனை முறை சரியாக விசாரித்தும் எந்தக் காதுக் கம்மல் இசகுபிசகான அர்த்தம் தருவது என்பதில் சட்டென்று குழப்பம் வேறு வந்துவிடுகிறது. ஆகவே நல்ல அர்த்த நாகரிகக் காதுகளைப் பார்த்தால்கூட பின்னங்கால் பிடரியில் பட தலைதெறிக்க ஓடிவிடுவது என் வழக்கம்.

மோதிரதாரிகளால் பெரிய அபாயமில்லை என்றாலும் கோப்பரகேசரி முப்பத்தி ஆறாம் குலோத்துங்க சோழனின் இலச்சினையைப் போல் நீண்டு அகன்று தோற்றமளிக்கும் எழுபது எம்மெம் மோதிரங்களை விரலுக்கு இரண்டு வீதம் இரு கரங்களிலும் ஏந்தி நிற்போரைக் கண்டாலும் கொஞ்சம் ஒரு மாதிரி ஆகிவிடும்.

ஆயிரம் சொல்லுங்கள். பெண்கள் அணிந்தால் பார்க்க அழகு. ஆண்கள் அணிவது அராஜகத்தின் உச்சம் என்பதே என் கருத்தாக இருந்தது.

இருந்ததா? இந்தக் கருத்தைக் கொஞ்சம் தடம் புரட்டிப் பார்க்க எம்பெருமான் ஒரு கெட்ட நாளில் திருவுள்ளம் கொண்டு என்னோடு விளையாட ஆரம்பித்தான்.

நெருங்கிய நண்பர் ஒருவர் தற்செயலாக ஒரு நாள், உடம்பில் ஏதேனும் ஓரிடத்தில் செம்பு என்னும் உலோகமானது இருக்குமானால் அது ஆரோக்கியத்துக்கு நல்லது என்று சொன்னார். நண்பர் கொஞ்சம் அறிவியல் தெரிந்தவர்.

செம்பு அல்லது செப்பு எனப்படும் உலோகத்துக்கு நிறைய மருத்துவ குணங்கள் உண்டு. சுமார் மூவாயிரம் வருடங்களுக்கு முன்னரே எகிப்து தேசத்தில் செப்பில் பாத்திரம் செய்து அதில் தண்ணீர் பிடித்து வைப்பார்கள். என்னத்துக்கு? செப்புப் பாத்திரத்தில் தண்ணீர் பிடித்தால், பற்றீரியாக்கள் நாலே மணிநேரத்தில் பரமபதம் அடைந்துவிடும். சருமத்தின்மீது செப்பு பட்டுக்கொண்டே இருக்குமானால் உள்ளுக்குள்ளே இரத்த சோகை இத்தியாதிகள் வாராது போகும். செப்புக்கு, 'மெலனின்' என்னும் நிறமியை உற்பத்தி பண்ணுகிற திறனுண்டு. உடலில் அது இருக்குமானால் 'விடிலிகோ' என்னும் வெண்படை அண்டாது.

**வெள்ளி மோதிரம் அணிந்தால் வித்தை சிறக்கும் என்றார்கள். வாங்கிப் போடு. தாமிரக் காப்பு, சிறந்த தற்காப்பு என்றார்கள். மணிக்கட்டு சும்மாதானே கிடக்கிறது? வாங்கி மாட்டு.**

இப்படியாக ஆரம்பித்து சொம்பு சொம்பாக அவர் செம்பின் நற்குணங்களைப் பட்டியலிட்டு என்னை செம்பில ஒரு மோதிரமாவது அவசியம் அணிய வேண்டும் என்று வற்புறுத்தினார்.

செலவு பெரிதில்லை என்பது தவிர, செப்பு மோதிரமானது தங்க மோதிரம் போல் ஓர் ஆபரணமும் இல்லையே? அணிந்தால் என்ன கேடு என்று



எனக்குள் நானே கேட்டுக்கொள்ள ஆரம்பித்தேன். செப்பு மோதிரம் என்பதைச் சற்றே வடிவம் மாற்றி, ஷரே கிருஷ்ணா என்று செதுக்கப்பட்ட செம்பினாலான காப்பு ஒன்றை வாங்கி அணிந்துகொணடேன்.

சில மாதங்கள் கடந்தன. இன்னொரு நண்பர் வந்தார்.

என்ன இப்படி இராப்பகலாக உட்கார்ந்து எழுதிக்கொண்டிருக்கிறீர்கள்? உடம்பு என்னத்துக்கு ஆகிறது என்று அக்கறையுடன் கவலைப்பட்டவர், எனக்கு உடல் உஷ்ணத்தால் உண்டாகக்கூடிய வியாதிகள் ஏகத்துக்கு வரும வாய்ப்பு இருக்கிறது என்று சொல்லி, கையோடு அதற்கொரு தீர்வும் சொன்னார்.

ஸ்படிகம் தெரியும் இல்லையா? உடனே முகம் சுளித்துவிடாதீர்கள். அது ஆபரணமல்ல. மனுஷ தேகத்துக்குக் கவசம் போன்றது அது. ஸ்படிகமானது, உடம்பு உஷ்ணத்தை அப்படியே உறிஞ்சி எடுத்துக்கொண்டுவிடும். எப்போதும் உங்களை ப்ரிட்ஜில் வைத்த அப்பிள் பழம் போல் ஜில்லென்று வைத்திருக்கும். தவிரவும் மன அழுத்தத்திலிருந்து உங்களைக் கட்டாயம் காப்பாற்றும்.

ஆரோக்கியம் என்பது அபாயகரமான பிராந்தியம். அதுவும் நமது ஆரோக்கியம் தொடர்பாக யாராவது அக்கறையுடன் கருத்து சொல்லும் போது பொருட்படுத்தாமலிருக்க முடியாது.

என்ன கெட்டது? வாங்கு ஒரு ஸ்படிக மாலை.

முதலில் சற்று நெருடலாக (கழுத்துக்குத்தான்) இருந்தாலும் விரைவில் அது பழகிவிட்டது. என்னைப் பார்த்து வேறு சில நண்பர்களும் நல்ல ஸ்படிகத்தை நானும் தேடிக்கொண்டிருக்கிறேன், எங்கு வாங்கினீர்கள் என்று கேட்க, ஆஹா, உலகமே தேடும் ஒரு பொருளை நாம் முந்திக்கொண்டு கைப்பற்றிவிட்டோம் என்னும் பெருமிதம் ஏற்பட்டது.

இந்த ஸ்படிகம் வந்து சேர்ந்த ஒரு சில தினங்களுக்குள்ளாகவே எனக்கு இன்னொரு அசரீரி வாக்கு வந்து சேர்ந்தது. ஸ்படிகம் சிறந்ததுதான். ஆனால் மனிதனே, உனக்குத் தாமரை மாலைதான் மிகவும் உபயோகமானது. இரத்த அழுத்தம், சர்க்கரை நோய் போன்றவை அண்டாமல் தடுக்கவும், எப்போதும் புத்தியை நிதானத்தில் வைத்திருக்கவும், தொற்றுநோய்களைத் துரத்தி அடிக்கக கூடியதுமான திபெத்திய தாமரை மணிகளை மாலையாக்கி அணிந்தால் நீ மேன்மையுறுவாய்.

தாமரை மணி என்பது அதுநாள்வரை நான் கேள்விப்பட்டிராதது. இம்மாதிரி விடயங்களில் ஞானஸ்தனான நண்பனை விசாரித்தபோது, ஆமாம் அப்படித்தான் என்று அவனும் சொன்னான்.

தாமரை மாலையை இமயத்திலிருந்து தருவிக்க வேண்டும். தாமரை மலரின் விதையைக் காயவைத்து மணிகளாக்குவார்கள். அதை மாலையாக்கிய பிறகு நாற்பத்தியெட்டு நாள் வேப்பெண்ணெயில் ஊறவைக்க வேண்டும். அதை எடுத்துக் காயவைத்துப் பிறகு அணியவேண்டும் என்றும் சொன்னான்.


சொன்னதோடு மட்டுமல்லாமல் ரிஷிகேசத்துக்குப் போன யாரிடமோ மறக்காமல் சொல்லி அனுப்பி எனக்காக ஒரு தாமரை மாலையையும் உடனே தருவித்து, அணிவித்து, கைதட்டி வாழ்த்துத் தெரிவித்தான்.

ஆனால், ஓரிரு தினங்களிலேயே எனக்கு ஒரு பெரும் சந்தேகம் வந்தது. தாமரை மாலை அணிந்தால் வியாதிகள்தானே அண்டாது என்றார்கள்? இது ஏதடா மனிதர்களே அண்டத் தயங்குகிறார்கள்? குழம்பினேன்.

பிறகு புரிந்தது. அது தாமரையின் குற்றமல்ல. அது குளித்த வேப்பெண்ணெயின் குற்றம். ஒருநாளா ரெண்டு நாளா? ஒரு மண்டல கால வேப்பெணணெய் வாசம். கொசுக்களை மட்டுமல்ல குடும்பத்தாரையும் ஓட ஓட விரட்டும்படியாக இருந்தது அதன் வீரிய பராக்கிரமம்.

இருப்பினும் சற்றும் மனம் தளராத விக்கிரமாதித்தனாக அதையும் ஸ்படிகத்துடன் சேர்த்தே அணிந்துகொண்டுதான் இருந்தேன்.

இடைப்பட்ட காலத்தில் இந்த உலோகங்கள், தாதுக்கள், மணிகள், மாலைகள் குறித்தெல்லாம் கண்ட மேனிக்குப் படித்துத் தீர்த்ததில், எந்த உலோகம் அல்லது தாதுவில் என்ன சக்தி இருக்கிறது, எதை அணிந்தால் என்ன லாபம் என்று டக்டக்கென்று பதிலிறுக்கக்கூடிய வித்தகனாகவும்



மறுபிறப்பெய்தி இருந்தேன்.

வெள்ளி மோதிரம் அணிந்தால் வித்தை சிறக்கும் என்றார்கள். வாங்கிப் போடு. தாமிரக் காப்பு, சிறந்த தற்காப்பு என்றார்கள். மணிக்கட்டு சும்மாதானே கிடக்கிறது? வாங்கி மாட்டு.

இதெல்லாம் எனக்குப் பலன் தர ஆரம்பித்துவிட்டதா, இன்னும் ப்ரொபேஷன் பீரியடில்தான் இருக்கின்றனவா என்று சரியாகத் தெரியவில்லை. ஆனால் அனைத்தையும் அணிந்துகொண்டு வெளியே புறப்பட்டால், ரத கஜ துரக பதாதிகள் சகிதம் களம் காணப் புறப்படும் உணர்வு ஒன்று உடனே வந்துவிடுகிறது. சடாமுடி ஒன்று இருந்திருக்கலாம். துரதிருஷ்டவசமாக அதற்கு வாய்ப்பில்லை. முக்காலே மூணுவீசம்

**ஆரோக்கியம் என்பது அபாயகரமான பிராந்தியம். அதுவும் நமது ஆரோக்கியம் தொடர்பாக யாராவது அக்கறையுடன் கருத்து சொல்லும்போது பொருட்படுத்தாமலிருக்க முடியாது.**

கொட்டிப் போய்விட்டது. பாதகமில்லை. இதுபோதும். இனி நான் ஆரோக்கியசாமி.

தொழில் முறை மருத்துவரும் விருப்பமுறை சோதிடருமான என்னுடைய இன்னொரு நண்பர் ப்ரூனோ, என் ராசிக்கு கனக புஷ்பராகக் கல் வைத்த மோதிரம் அணிவது மேலும் பலன் சேர்க்கும் என்று வேறு சமீபத்தில் சொல்லியிருக்கிறார்.

**- பா.ராகவன்**


கனக புஷ்பராகம்! பேரே கிறுகிறுக்கவைக்கிறது. சீக்கிரம் அந்த வேட்டையும் ஆரம்பமாகிவிடுமோ என்று அச்சமாக இருக்கிறது.

ஆனால் ஒன்று. மிக நெருங்கிய சிலபேருக்கு என்னுடைய இந்த திடீர் கெட் அப் சேஞ்ச் குழப்பத்தையும் கலவரத்தையும் உண்டுபண்ணியிருக்கிறது என்பதை மறுக்கமுடியாது.

பக்கத்தில் வர பயமாயிருக்கிறது என்று என் மகள் சொல்லாதவரை இதைத் தொடரலாம் என்று நினைத்திருக்கிறேன்.

# சுகாதார சேவையில் சிறப்பான பங்களிப்பு

# வடமாகாண பணியாளர்கள் கௌரவிப்பு



(யாழ்ப்பாணம்)

வட மாகாணத்தில் சுகாதார சேவைக்குச் சிறந்த பங்காற்றிய சுகாதாரப் பணியாளர்கள் நேற்றைய வடமாகாண சுகாதார அமைச்சினால் கௌரவிக்கப்பட்டனர்.

நேற்றுப் பிற்பகல் 1.15 மணியளவில் வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற்ற சுகாதார வாரத்தின் இறுதிநாள் நிகழ்விலேயே இவர்கள் கௌரவிக்கப்பட்டுள்ளனர்.

நாடு பூராகவும் டெங்கு நோயினைக் கட்டுப்படுத்தும் முகமாக சுகாதார விழிப்புணர்வு வாரம் கடந்த மூன்றாம் திகதி முதல் நேற்று முன தினம் வரையான ஒரு வாரகாலப் பகுயில் சுகாதார அமைச்சினால் கடைப்பிடிக்கப்பட்டது. அதற்கு அமைவாக வடபகுதியிலும் இந் நிகழ்வு கடைப்பிடிக்கப்பட்டது.

சுகாதார வாரத்தின் இறுதி நாள் நிகழ்வுகளே நேற்றைய தினம வடமாகாண சுகாதார அமைச்சினால் யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் ஒழுங்கு செய்யப்பட்டு நடத்தப்பட்டது.

வடமாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் யூட் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், வடமாகாணம் வவுனியா, முல்லைத தீவு, மன்னார், கிளிநொச்சி, யாழ்ப பாணம் ஆகிய பிராந்திய சுகாதார சேவைகள் பணியாளர்கள் கலந்து கொண்டனர்.

இந்நிகழ்வில், சுகாதார சேவையின் மேம்பாட்டிற்கு அரும் பணியாற றிய சுகாதார சேவைகள் பணியாளா கள் மாவட்ட ரீதியாக வடமாகாண சுதேச வைத்தியத்துறை அமைச்சின் செயலாளர் ரவீந்திரனினால் சான்றிதழ் மற்றும் நினைவுச் சின்னம் வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர்

இந்நிகழ்வின் குறிப்பிடத்தக்க அம்சமாக யாழ். சுதேசவைத்திய பணிமனையில் 30 வருடங்களுக்கு மேலும் பணியாற்றி சுகாதாரப் பணியாளர்கள் கொளரவிக்கப்பட்டனர் என்பது குறிப்பித்தக்கது.

இந்நிகழ்வில் டெங்கு நோய் பற்றிய விழிப்புணர்வூட்டும் நடமாடும் மற்றும் கலை நிகழ்வு நடைபெற்றது.

மேலும் பொருளாதார சுகாதார சேவைகள் பணியாளர்கள், வைததியர்கள், தாதியர்கள், பொது சுகாதாரப் பரிசோதகர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர். (பா,எஸ்)

## ஆனந்தசங்கரி...

வீ.ஆனந்தசங்கரி, புளொட் தலைவர் தர்மலிங்கம் சித்தார்த்தன், ஈ.பி.ஆர்.எல்.எவ் பத்மநாபா அணியின் பொதுச்செயலர் தி.சிறீதரன் ஆகியோர் கலந்துகொண்டிருந்ததுடன், இந்திய வெளிவிவகாரச் செயலர் ரஞ்சன் மத்தாயுடன் இந்திய அதிகாரிகளும், இந்திய உயர்ஸ்தானிகர் அசோக் கே காந்தா, பிரதி உயர்ஸ்தானிகர் குமரன் ஆகியோரும் பங்கேற்றிருந்தனர்.

இதன்போது, வடக்கு, கிழக்கில் இராணுவ ஆக்கிரமிப்பு மற்றும் ஒவ்வொரு சிவில் நிர்வாக அலுவல்களிலும் இராணுவத் தலையீடு இருப்பது தொடர்பில் விரிவாக எடுத்துக்கூறப்பட்டது.

அத்துடன் திருகோணமலை, சம்பூர் அனல்மின் நிலைய திட்டத்தினால் குடிபெயர்ந்துள்ள மக்களின் மீள்குடியேற்றம் பற்றியும், பொதுவாக பெரியளவிலான அபிவிருத்தி திட்டங்கள் உருவாக்கப்படும் போது அதனால் இடம்பெயரும் மக்களுக்கான மீள்குடியேற்றம், அவர்களுக்கான வாழ்வாதாரம் என்பவை அத்திட்டத்தில் அடங்கும் வகையில் அமையப் பெறவேண்டும் என்பதையும் சுட்டிக்காட்டியதுடன், சம்பூர் அனல் மின் நிலையத் திட்டத்தில் அப்படியான நிலைப்பாட்டைக் கடைப்பிடிக்குமாறும் கேட்டுக்கொள்ளப்பட்டது.

அத்துடன் வடக்கில் பிரத்தியேகமாக முல்லைத்தீவு மாவட்டத்தில் பிரதேச செயலகங்கள் புதிதாக உருவாக்கப்பட்டு, அங்கு இன விகிதாசாரத்தை மாற்றுவதற்கான முயற்சிகள் எடுக்கப்பட்டுள்ளதையும், காணிகள் மீள்பதிவு நடவடிக்கையால் தமிழ் மக்களுக்கு ஏற்படக்கூடிய நஷ்டங்கள், காணிகளை இழக்கக்கூடிய நிலைமைகள் தொடர்பிலும் தெளிவாக விளக்கிக் கூறப்பட்டது. இவைகளை உன்னிப்பாக செவிமடுத்த இந்திய வெளிவிவகாரச் செயலர் ரஞ்சன் மாத்தாய், இவை சம்பந்தமாக சரியான முடிவினை எடுப்பதற்காக தாம் இலங்கை அரசுக்கு அழுத்தங்களைக் கொடுப்பதாகத் தெரிவித்துள்ளார்.

## இரு நாடுகளின்...

தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்தச் சந்திப்பில் இந்திய வெளிவிவகாரச் செயலர் ரஞ்சன் மாத்தாயுடன் வெளிவிவகாரச் செயலகப் பிரிவைச் சேர்ந்த ஹர்ஸ் வர்தன சிறின்லா, தூதுவர் அசோக் கே கான் தாவும், ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தலைமையிலான குழுவில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, ஜனாதிபதியின் செயலாளர் லலித்வீரதுங்க வெளிவிவகார அமைச்சின் செயலாளர் கே.அமுனுகம ஆகியோர் கலந்துகொண்டனர்.

இதேவேளை ஜனாதிபதியைச் சந்திப்பதற்கு முன்னர், பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ, பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ ஆகியோரையும் ரஞ்சன் மாத்தாய் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளார்.

அமைச்சர் பஸிலுடனான சந்திப்பின்போது வடக்கு, கிழக்கில் யுத்தத்தின் பின்னரான அபிவிருத்தித் திட்டங்கள் குறித்து விரிவாக ஆராயப்பட்டதுடன், இந்தியாவின் 50 ஆயிரம் வீடுகளை அமைக்கும் திட்டம் குறித்து இருதரப்பினரும் தமது அபிப்பிராயங்களை முன்வைத்தனர். அத்துடன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடனான சந்திப்பை அடுத்து தமிழ் மக்களின் நிலைப்பாடு குறித்து மாத்தாய், அமைச்சருக்கு தெளிவுபடுத்தியதாகவும் அமைச்சின் ஊடகப்பிரிவு தெரிவித்தது. பாதுகாப்புச் செயலாளருடனான சந்திப்பின்போது இருதரப்பு உறவு குறித்தும், விசேடமாக பாதுகாப்பு நிலைமைகள் குறித்தும் கலந்துரையாடப்பட்டது.

## பாலியல்...

மிகவும் பொறுப்பு வாய்ந்த அரச அதிபர் விசாரணைகள் இன்றி தனி மனிதர் ஒவ்வொருவரையும் கேவலப்படுத்தும் விதத்தில் அவர்களின் நற்பெயரை உலகம் முழுவதிலும கெடுக்கும் அளவிற்குப் பத்திரிகைகளில் செய்திகளை கொடுத்திருப்பது மிகவும் கீழ்த்தரமானதும் வன்மையாகக் கண்டிக்கத் தக்கதுமான செயலாகும். மனித உரிமையின் அடிப்படை மீறல்களாகும். ஏனைய அரச அதிபர்களுக்கும் அபகீர்த்தியை ஏற்படுத்துகின்ற செயலாகும்.

அரச அதிபருக்குப் பிடித்த யாரோ விஷமிகள் கூறிய தனிப்பட்ட கருத்துகளுக்கு இணங்க அதிபராகிய என்னையும் விரிவுரையாளர்களையும் விசேடமாக ஆசிரிய மாணவிகளையும் மற்றும பணிபுரிபவர்களையும் கேவலப்படுத்தி வெட்கித் தலைகுனிய வைத்து அவர்களையும் அவர்களைச் சார்ந்தவர்களையும் தூக்கிலிடச் செய்வது எந்த விதத்தில் நியாயமானது பதில் கூறுவாரா? அரச அதிபர். இதை நிரூபித்துக் காட்டுவாரா? உலகம் முழுவதும் போக்கிய மானத்தை மீட்டுத்தருவாரா? பத்திரிகைகள் இதற்குப் பதில் சொல்லுமா? என அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அறிக்கையின் பிரதிகள் யாழ். அரச அதிபர் உட்பட கல்வி அமைச்சின் பிரதம ஆணையாளர் நாயகம், கல்வித் திணைக்கள செயலாளர், அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, வடமாகாண ஆளுநர் ஆகியோருக்கும் அனுப்பப்பட்டுள்ளது.

இதேவேளை அரச அதிபர் முன்கூட்டியே எந்தவித விசாரணையும் இன்றி உண்மை எது என்று அறியாமல் பொறுப்பற்றதனமாக அறிக்கையை வெளியிட்டது பாரதூரமான விடயமாகும். இதனை நாங்கள் வன்மையாகக் கண்டிக்கிறோம். இது சம்பந்தமான தகவல்களை உங்களுக்கு வழங்கியவர் யார் என்பதனை எங்களுக்கு கூடிய விரைவில் அறியத்தரவும் இல்லாத பட்சத்தில் நாங்கள் சட்ட நடவடிக்கை எடுக்கவேண்டிவரும் என்பதனையும் அறியத்தருகின்றோம் என கலாசாலை ஆசிரிய பயிலுன மாணவர்கள் தெரிவித்துள்ளனர். (12)

# யானைகளைத் துரத்த கூட்டு நடவடிக்கை



திருகோணமலை மாவட்டத்தின் எல்லைக்கிராமமான திரியாய் பிரதேசத்தில் காட்டு யானைகளின் தாக்குதலில் இரண்டு பொது மக்கள் கடந்த மாதத்தில் கொல்லப்பட்டும் பல வீடுகள் யானைகளின் தாக்குதலில் சேதப்படுத்தப்பட்டும் நெல்வயல்கள் அழிக்கப்பட்டும் வந்தது. இந்நிலையில் பகல் வேளையிலும் காட்டு யானைகள் கிராமத்துக்குள் புகுந்து சேதங்களை ஏற்படுத்தும் நிலை ஏற்பட்டதால் பொதுமக்கள் பாதுகாப்பு தரப்பினருக்கு விடுத்த வேண்டுகோளை அடுத்து இலங்கை இராணுவம், வனபாதுகாப்பு பிரிவினர் இணைந்து கடந்த சனிக்கிழமை யானைகளை காடுகளுக்குள் துரத்தும் பாரிய நடவடிக்கை ஒன்றை நாள்முழுவதும் நடத்தினர். இதில் கிராம மக்களும் இணைந்து கொண்டனர்.

## கண்டாவளையில்...

நினைத்து, வீட்டின் கதைவைத் திறந்தவேளை, வீட்டிற்குள் உட்புந்தவர்கள் கொட்டன்களால் மூவரது தலை, மற்றும் முகப் பகுதிகளில் கடுமையாகத் தாக்கியுள்ளனர். வீட்டில் அலறல் சத்தம் கேட்கவே அயல் வீட்டார் சென்றவேளை தாக்குதல் நடத்தியவர்கள் தப்பிச் சென்றுவிட்டனர். தாக்குதலை மேற்கொண்ட மூவரும் நிறைபோதையில் இருந்ததாக உறவினர்கள் தெரிவித்தனர்.

காயமடைந்த மூவரும் தர்மபுரம் வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக கிளிநொச்சி வைத்தியசாலைக்கு அனுப்பிவைக்கப்பட்டனர். சம்பவம் தொடர்பாக கிளிநொச்சி பொலிஸில் முறையிடப்பட்டுள்ளது. கடந்த சில தினங்களாக வட்டக்கச்சி, கண்டாவளைப் பகுதிகளில் இடம்பெற்றுவரும் கொலை, கொள்ளைகளினால் அப்பகுதி மக்கள் இரவு வேளைகளில் அச்சத்தில் உறைந்துபோயுள்ளனர்.

## ரஞ்சன் மாத்தாயுடனான...

விஜயமானது யுத்தத்திற்கு பின்னர் இலங்கையில் மேற்கொள்ளப்பட்டுவரும் அபிவிருத்தி, மீள்குடியேற்றம் மற்றும் இந்திய அரசின் வேலைத்திட்டங்கள் தொடர்பில் மீளாய்வு செய்வதாகவே அமைந்துள்ளது. எனினும் இந்திய வெளிவிவகாரச் செயலாளருடனான சந்திப்பின்போது தமிழர்களின் பிரச்சினை மற்றும் தற்போதைய அரசியல் சூழ்நிலைகள் தொடர்பில் தெளிவாக எடுத்துரைக்கப்பட்டது.

இலங்கை அரசாங்கத்திற்கும் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பிற்கும் இடையில் தீர்மானமிக்க பேச்சுவார்த்தை நடைபெற்றுவரும் இந்த தருணத்தில் இந்திய வெளியுறவுச் செயலாளர் ரஞ்சன் மாத்தாய் இலங்கைக்கான விஜயத்தை மேற்கொண்டுள்ளார். ரஞ்சன் மாத்தாயின் இந்த விஜயம் கூட்டமைப்பு மற்றும் அரசிற்கிடையிலான பேச்சுவார்த்தையில் தமிழர்களுக்கு சாதகமான நிலைமையினையோ அல்லது மாற்றத்தையோ ஏற்படுத்தாது என அவர் மேலும் தெரிவித்தார்.

## செய்திப்பாணம்

**யாழ்ப்பாணப் பிரதேசம் யாக்கைக்குப் பின்னேதான் தேழ்வையாம் நிர்வாகத் திணிப்பலகு - தாழ்வாரம் நீட்டியது நல்லூராய்; நெடுந்தொடர் தென்மராட்சியில் பூட்டிக்கிடை நிலைமை புனர்!**



# உள்ளூராட்சி சபைத் தேர்தல் முடிவுகள் சர்வதேசத்தில் மாற்றத்தை ஏற்படுத்தும்

## அமைச்சர் மைத்திரிபால நம்பிக்கை



(கொழும்பு)

நடைபெற்று முடிந்த உள்ளூராட்சி சபைத் தேர்தல் முடிவுகள் இலங்கை அரசாங்கம் தொடர்பான சர்வதேச நாடுகளின் நிலைபபாட்டில் மாற்றத்தை கொண்டு வரும் என அமைச்சர் மைத்திரிபால சிறிசேன நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

தேர்தல் முடிவுகள் சர்வதேச நாடுகளுக்கு பாடம் புகட்டியுள்ளதாகவும் அமைச்சர் குறிப்பிட்டார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் அமைச்சர் மைத்திரிபால சிறிசேன இவ்வாறு கூறினார்.இந்த மாநாட்டில் அமைச்சர்களான சுசில் பிரேமஜயந்த, டளஸ் அழகபெரும ஆகியோர் கலந்துகொணடனர்.

ஊடகவியலாளர் மாநாட்டில் உள்ளூராட்சி தேர்தல் முடிவுகள் குறித்து அமைச்சர் மைத்திபால சிறிசேன மேலும் தெரிவித்ததாவது.

இலங்கையின் இறைமை தன்னாதிக்கத்தை மக்கள் அடகு வைக்கமாட்டார்கள் என்பதை தேர்தல் முடிவுகள் காட்டி நிற்கின்றன. ஐக்கியதேசிய கட்சிக்கு இது நல்ல செய்தியாகும்.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் அரசியல் சாணக்கியம் தேர்தல் முடிவுகள் ஊடாக அனைத்து தரப்பினருக்கும் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

இலங்கையின் ஜனநாயக ஆட்சி இல்லை என சர்வதேச நாடுகள் கூறிவந்தன. போர்க்குற்ற விசாரணைகள் மனித உரிமை மீறல் குற்றச்சாட்டுக்கள் என்று கூறியும் இலங்கையின் இறைமைக்கு சவால் விடுக்கப்பட்டது.

ஆனால், மக்கள் அரசாங்கத்தின் பக்கம் என்பதை நிரூபித்துள்ளனர். அரசாங்கத்தின் அபிவிருத்தி செயற்பாடுகளுக்கு மக்கள் மீண்டும் ஒரு முறை அங்கீகாரம் வழங்கியுள்ளனர்.

அரசாங்கத்தை விமர்சிக்கும் எதிர்க்கட்சிகளுக்கு தேர்தல் முடிவுகள் பாடம் கற்பித்துள்ளன. ஐக்கிய தேசியக் கட்சி கொழும்பு மாநகர சபையை மாத்திரமே கைப்பற்றியுள்ளது.

கொழும்பு ஐக்கிய தேசியக் கட்சியின் கோட்டை. ஆனாலும் கொழும்பு நகரை அரசாங்கம் அபிவிருத்தி செய்யும். ஏனெனில கொழும்பு ஒரு வர்த்தக நகரம்.

அடுத்து இரண்டு ஆண்டுகளுக்கு தேர்தல்கள் எதுவும் நடக்காது ஆனால் மக்கள் செல்வாக்கு அரசாங்கத்துக்கு எப்போதும் இருக்கும் என அமைச்சர் மைத்திரிபால சிறிசேன நம்பிக்கை வெளியிட்டார்

# குடாநாட்டு நிலத்தடி நீர் குறித்த முகாமைத்துவ பயிற்சிப் பட்டறை




(யாழ்ப்பாணம்)

யாழ்.குடாநாட்டின் நிலத்தடி நீர் முகாமைத்துவம் பற்றிய அரசின் ஒருங்கிணைப்புடன் இலங்கை நீர்ப்பங்காளர்களின் பயிற்சிப்பட்டறை நிகழ்வு ஒன்று நேற்றுக் காலை யாழ். பொது நூலகக் கேட்போர் கூட்டத்தில் நடைபெற்றுள்ளது.

இந்நிகழ்வில் தேசிய நீர் வழங்கல் சபை மற்றும் தேசிய நீர் வழங்கல் வடிகால் அமைப்புச் சபையின் அதிகாரிகள் கலந்து கொண்டு யாழ்.குடாநாட்டு நிலத்தடி நீர் மூலங்கள் குறித்தும் அவற றின் முகாமைத்துவம் குறித்தும் விரிவாக ஆராய்ந்தனர். அத்துடன் மழைநீர் சேமிப்பு, உவர் நீர் கலப்புக் குறித்தும் கருத்துக்கள் முன வைக்கப்பட்டன. இந்நிகழ்வில் யாழ். மேலதிக அரச அதிபர் திருமதி ரூபினி வரதலிங்கம், தேசிய நீர்வழங்கல் சபை பொது முகாமையாளர், ஆர்.எஸ்.விசியசேகா மற்றும் இலங்கை நீர்வழங்கல் சபை அதிகாரிகள் யாழ். பிரதேச செயலர்கள், பிரதேச சபையின் கலந்துகொண்டனர்.

# சாரதிகள் நடத்துநர்களுக்கு யாழில் பற்றாக்குறை

(யாழ்ப்பாணம்)

இலங்கை போக்குவரத்துச் சபையின் யாழ்.பிராந்திய சாலைகளில் போதியளவு சாரதிகளும், நடத்துநர்களும் இல்லாமையால் சீரான சேவையை மக்களுக்கு வழங்க முடியவில்லை என இலங்கை போக்குவரத்துச்சாலை வட்டாரங்களில் இருந்து தெரிய வருகிறது.

யாழ்.சாலைகளில் ஓரளவு பேருந்துகள் உள்ளபோதும், சாரதிகளும், நடத்துநர்களும் இல்லாமையால் இவற்றைச் சேவையில் ஈடுபடுத்த முடியாதுள்ளதாகவும், ஆகக்குறைந்தது 40 சாரதிகளும், 30 நடத்துநர்களும் தற்போது தேவைப்படுவதாகும் அவ்வட்டாரங்கள் மேலும் தகவல் தெரிவித்தன.

இதேவேளை சேவையில் ஈடுபடும் பேருந்துகளில் 10 பேருந்துகளாவது பழுதடைவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

# யாழ்.போதனா வைத்தியசாலையில் புற்றுநோய் உளநலப் பிரிவு திறப்பு

ஹற்றன் நஷனல் வங்கியின் அனுசரணையில் யாழ் போதனா வைத்தியசாலையில் அமைக்கப்பட்ட புற்றுநோய் உளநலக் கட்டடத்திறப்பு விழா நேற்று மாலை 4 மணிக்கு புற்றுநோய் வைத்திய நிபுணர் என்.ஜெயக்குமாரன் தலைமையில் நடைபெற்றது.

இப்புற்றுநோய் உளநலப் பிரிவு கட்டடத்தினை வங்கியின் பிரதம நிறைவேற்று அதிகாரி ராஜேந்திரா தியாகராஜா நாடா வெட்டி திறந்துவைத்தார்.

இந்நிகழ்வில் யாழ் போதனா வைத்தியசாலை பணிப்பாளர் பசுபதி சீவரத்தினம், புற்றுநோய் வைத்திய நிபுணர் என்.ஜெயக்குமாரன் ஹற்றன் நஷனல் வங்கி முகாமையாளர் மருத்துவர்கள்

வைத்தியசாலை ஊழியர்கள் சின்மயாமிஷன் சைத்தன்யா சுவாமிகள் உட்பட பலரும் கலந்துகொண்டனர்.

இப்புற்றுநோய் உளநலப் பிரிவு கட்டடம் 8 இலட்சம் ருபா நிதியில் அமைக்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.


## மரண அறிவித்தல்

## இராமு யோகரட்ணம்

தெல்லிப்பளை கட்டுவனைப் பிறப்பிடமாகவும் சங்கானை பழைய தபாற்கந்தோர் வீதியை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட இராமு யோகரட்ணம் 10.10.2011 திங்கட்கிழமை காலமானார். அன்னார் காலஞ்சென்ற அன்னலட்சுமியின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான லலிதா, நந்தினி, மகிந்தா மற்றும் கருணாநிதி (கண்ணன்-ஜேர்மனி)யின் அன்புத் தந்தையாரும், ரூபாயினியின் (ஜேர்மன்) மாமனாரும் (ஜேர்மன்), அபிஷனின் பேரனும், கனகமணியின் மைத்துனரும், மங்கள கௌரி, கபில்ராஜ் (லண்டன்) ஆகியோரின் பெரியப்பாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியை 11.10.2011 இன்று செவ்வாய்க்கிழமை முற்பகல் 11 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, தகனக்கிரியைக்காக சங்கானை கரைச்சி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும் என்பதை அறியத்தருகின்றோம்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல் :
மகன் கருணாநிதி (கண்ணன்)

பழைய தபாற்கந்தோர் வீதி,
சங்கானை.

(C/132)


# புனரமைக்கப்பட்ட கட்டடத் தொகுதிகள் கிளிநொச்சி மத்திய கல்லூரியில் திறப்பு



(கிளிநொச்சி)

ஐம்பது இலட்சம் ரூபா செலவில் புனரமைக்கப்பட்ட கிளிநொச்சி மத்திய கல்லூரியில் வகுப்பறைத் தொகுதி மற்றும் விஞ்ஞான ஆய்வுகூடம் என்பவற்றை நாடாளுமன்ற உறுப்பினர மு.சந்திரகுமார் நாடாவை வெட்டித் திறந்துவைத்தார்.

கல்லூரி அதிபர் மு.ரவீந்திரன் தலைமையில் நேற்றுக் காலை இடம்பெற்ற நிகழ்வில் இந்தக் கட்டடத்தொகுதிகள் திறந்துவைக்கப்பட்டன. இந்நிகழ்வில் கிளிநொச்சி வலயக் கல்விப் பணிப்பாளர் முருகவேள், கல்வித்துறை சார்ந்த அதிகாரிகள், ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் கிளிநொச்சி மாவட்ட அமைப்பாளர் தவநாதன், கல்லூரி அபிவிருத்திச் சங்கத்தின் செயலாளர் கபிரியல் உட்பட ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர் எனப் பலர் கலந்து கொண்டனர்.

இந்நிகழ்வில் உரையாற்றிய நாடாளுமன்ற உறுப்பினர், கல்வி சார்ந்த செயற்பாடுகளை அரசியல் நோக்கோடு பார்க்கின்ற நிலைமை மாற்றம் பெறவேண்டும் அத்தோடு மாணவ சமுதாயத்தை அரசியல் செயற்பாடுகளுக்குப் பயன்படுத்துவதையும் நாம் வன்மையாக எதிர்க்கின்றோம்.

நீண்ட கால யுத்தம் கிளிநொச்சி மாவட்டத்தின் கல்வித்துறையை மிகவும் பின்தங்கிய நிலைக்கு தள்ளியுள்ளது. இந் நிலையை மாற்றி அமைக்கவேண்டியதும் மீண்டும் எமது சமூகத்தைக் கல்வியியல் ரீதியாக உயர்வான நிலைக்குக் கொண்டுவரவேண்டியதுமான வரலாற்றுப் பொறுப்பு எங்கள் அனைவரிடமும் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இதனை ஓரிரு அரசியல்வாதிகளால் மட்டும் நிறைவேற்றிவிட முடியாது. ஒட்டுமொத்த சமூகமும் இதற்காக உழைக்க வேண்டும் எனத் தெரிவித்தார். (29,77)

# துப்பாக்கிகளுடன் கைது

முல்லேரியாவில் கடந்த சனிக்கிழமை இடம்பெற்ற துப்பாக்கிப் பிரயோக சம்பவம் தொடர்பாக 16 துப்பாக்கிகள் சகிதம் நபர் ஒருவர் குற்றப்புலனாய்வுப் பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

12 பிஸ்டல்கள், 2 சுழல் துப்பாக்கிகள் மற்றும் ரி56 ரக துப்பாக்கிகள் என்பன இவரிடமிருந்து கைப்பற்றப்பட்ட ஆயுதங்களில் அடங்கும்.

மேற்படி துப்பாக்கிப் பிரயோக சம்பவம் தொடர்பாக இதுவரை 37 வாக்குமூலங்களை குற்றப் புலனாய்வுப் பிரிவினர் பதிவு செய்துள்ளனர்.

துப்பாக்கிப் பிரயோகத்தில் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் பாரத லக்ஷ்மன் பிரேமச்சந்திர பலியானதுடன் நாடாளுமன்ற உறுப்பினர் துமிந்த சில்வா படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# விளக்கமறியல்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்தின் வட்டக்கச்சிப் பகுதியில் நேற்று முன்தினம் பெண்ணொருவர் வெட்டிக் கொலை செய்யப்பட்டது தொடர்பாக கைது செய்யப்பட்ட சந்தேக மூவரும் நேற்று கிளிநொச்சி நீதிமன்றத்தில் பொலிஸாரால் ஆஜர்படுத்தப்பட்டார்.

இவ்வழக்கை விசாரித்த கிளிநொச்சி நீதிமன்ற நீதிவான் இவ் மூவரையும் 14 நாட்கள் விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டுள்ளார். (எப்.எஸ்)

# இறுதிக்கட்டப் போரில் படையினர் இனவாதத்துடன் செயற்படவில்லை

## இராணுவத் தளபதி தெரிவிப்பு

(கொழும்பு)

விடுதலைப் புலிகளுடனான இறுதிக்கட்ட யுத்தத்தின்போது படையினர் இனவாதத்துடன் செயறபடவில்லை என இராணுவத் தளபதி லெப்டினன் ஜெனரல் ஜகத் ஜயசூரிய தெரிவித்துள்ளார். இலங்கை இராணுவத்தின் 62 ஆவது ஆண்டு நிறைவையொட்டி நேற்று நடைபெற்ற விசேட நிகழ்வில் கலந்துகொண்டு உரை நிகழ்த்தும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

உலக இராணுவங்களால் தோற்கடிக்க முடியாத பயங்கரவாத சக்தியாக விடுதலைப் புலிகள் அமைப்பு இருந்தது. எனினும ஜனாதிபதியின் தலைமைத்துவம் வழிநடத்திலின் கீழ் நாம் அதனைத் தோற்கடித்தோம். மனிதாபிமான நடவடிக்கைகளை மேற்கொண்டோம்.

இலங்கை இராணுவத்தினர் மீது நாட்டை நேசிக்காத பலர் குறறம் சுமத்துகிறார்கள். பயங்கர வாதத்துக்குத் துணைபோகும் பலர் வெளிநாடுகளில் இருந்து கொண்டு தவறான பிரசாரத்தில் ஈடுபட்டுக்கொண்டிருக்கிறார்கள்.

இராணுவத்தினர் இனவாதத்துடன் எப்போதும் செயற்படமாட்டார்கள் எனபதை நான் தெளிவாக சுட்டிக்காட்ட விரும்புகிறேன் எனத் தெரிவித்தார்.

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2011 ஒக்டோபர் 11 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.